වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயல்திறன் அறிக்கை

ANNUAL PERFORMANCE REPORT

2025

ප්‍රවාහන, මහාමාර්ග, වරාය සහ සිවිල් ගුවන් සේවා අමාත්‍යාංශය

போக்குவரத்துஇ நெடுஞ்சாலைகள்இ துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

MINISTRY OF TRANSPORT, HIGHWAYS, PORTS AND CIVIL AVIATION

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு

போக்குவரத்துப் பிரிவு

செயலாற்றுகை அறிக்கை - 2025

07 ஆவது மாடி
செத்சிறிபாய - II ஆம் கட்டம்
பத்தரமுல்லை

2026 - யூன்

உள்ளடக்கம்

01. அத்தியாயம் - நிறுவனம் பற்றிய விபரம் / செயற்படுத்தல் பற்றிய பொழிப்பு

1.1 அறிமுகம்.. 03
1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள் 10
1.3 முக்கிய செயல்பாடுகள் மற்றும் பணிகள் 10
1.4 அமைச்சின் கட்டமைப்பு விளக்கப்படம்.. 12
1.5 அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள்... 12
1.6 அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள்... 12
1.7 வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள............................. 14

02. அத்தியாயம் - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள் 19
2.1.1 இலங்கை புகையிரத திணைக்களம்.. 19
2.1.1.9 மாஹோ ஓமந்த புகையிரதப் பாதை மறுசீரமைப்பு கருத்திட்டம்...... 27
2.1.2 மோட்டார் வாகப் போக்குவரத்துத் திணைக்களம்.................................. 29
2.1.3 ,லங்கை போக்குவரத்து சபை.. 41
2.1.4 தேசிய போக்குவரத்து ஆணைக்குழு... 47
2.1.5 தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் 57
2.1.6 வீதிப் பாதுகாப்புக்கான தேசிய சபை 67
2.1.7 வ/ப லக்திவ பொறியியல் (தனியார்) கம்பனி.. 72
2.1.8 பாரிய கொழும்பு நகர்ப்புற போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டுத்திட்டம்... 76
2.1.9 கொழும்பு புறநகர் புகையிரதப் பாதைகருத்திட்டம்................................. 81

03. அத்தியாயம் - 2025 ஆம் ஆண்டிற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகை அறிக்கை.. 93
3.3 நிதி நிலைமைக் கூற்று.. 93
3.4 சாசுப்பாய்ச்சல் கூற்று... 93
3.5 நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகள்.. 93
3.6 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை.. 93
3.7 ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்திக்கொள்ளல் செயலாற்றுகை.............................. 93
3.8 நி.ஒ.விதி.208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களின் பிரதிநிதியாக இந்த திணைக்களத்திற்கு மாவட்ட செயலகத்திற்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்... 94
3.9 நிதி அல்லாத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை............................... 94
3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 94

04. அத்தியாயம் - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (அமுலாக்கல் திட்டத்தின் அடிப்படையில்) 97

05.அத்தியாயம் – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைந்துகொள்வதற்கான செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்.............. 105
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் வெற்றிகள்கள் மற்றும் சவால்கள்... 113

06. அத்தியாயம் - மனித வளங்கள் பற்றிய விவரம்

6.1 பணியாட்குழு எண்ணிக்கை முகாமைத்துவம் 117

6.2 மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை நிறுவனத்தின் செயலாற்றலை பாதிக்கிற விதம்... 117

6.3 மனிதவள அபிவிருத்தி மூலம் பொதுச் சேவையை வினைத்திறன் கொண்டதாக மாற்றுதல் 117

07. அத்தியாயம் - இணக்கப்பாட்டு அறிக்கை.. 123

புகைப்படத் தொகுப்பு... 133

01 ஆம் அத்தியாயம்

நிறுவனம் பற்றிய விவரம்/ செயற்படுத்தல் பற்றிய பொழிப்பு

01 ஆம் அத்தியாயம்

நிறுவனம் பற்றிய விவரம்/ செயற்படுத்தல் பற்றிய பொழிப்பு

1.1 அறிமுகம்

போக்குவரத்து அமைப்புகளை விருத்தி செய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் என்பன ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக நல்வாழ்விற்கும் இன்றியமையாத விடயங்களாகும். இதனை அடைந்துகொள்வதற்காக அமைச்சின் போக்குவரத்துப் பிரிவின் கீழ் இயங்கும் இலங்கை புகையிரதத் திணைக்களம், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், இலங்கை போக்குவரத்துச் சபை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம், வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை மற்றும் லக்திவ பொறியியல் (தனியார்) நிறுவனம் ஆகிய நிறுவனங்கள் பெரும் பங்களிப்பை வழங்குகின்றன. இதன் மூலம் அனைத்துப் பிரஜைகளுக்கும் வினைத்திறனான, பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய இடப்பெயர்வு வசதிகள் உறுதி செய்யப்படுகின்றன.

நாட்டில் எரிக்கப்படும் எரிபொருட்களில் பெரும் சதவீதமானவை போக்குவரத்துத் துறைக்காகச் செலவிடப்படுவதுடன், அது வளி மாசடைவதற்கும் கணிசமான பங்களிப்பை வழங்குகின்றது. இந்நிலைக்குத் தீர்வாக, சுற்றாடல் நட்பு ரீதியான போக்குவரத்து அமைப்பை நோக்கிப் படிப்படியாக மாறும் நோக்குடன், வினைத்திறனான, நம்பகமான, பாதுகாப்பான, அனைவருக்கும் வசதியான மற்றும் நவீன உன்னத தொழில்நுட்ப முறைகளைக் கொண்ட போக்குவரத்துச் சேவையொன்றை தாபிப்பதற்கு இந்த அமைச்சு அர்ப்பணிப்புடன் செயற்படும்..

இலங்கை புகையிரதத் திணைக்களம் இந்த நாட்டின் போக்குவரத்துத் துறையில் பிரதான பங்களிப்பை வழங்குவதுடன், பயணிகள் போக்குவரத்து, பண்டப் போக்குவரத்து, விசேட பயணிகள் புகையிரத சேவைகளை மேற்கொள்ளல் மற்றும் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் என்பன அதன் முக்கிய பணிகளாகும். 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் முடிவடையும் போது, இலங்கை புகையிரதத் திணைக்களம் 97.46 மில்லியன் பயணிகளுக்குச் சேவையாற்றியுள்ளதுடன், 2025 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட மொத்த வருமானம் 17,166 மில்லியன் ரூபாய்களாகும்.

இலங்கையினுள் ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய மோட்டார் வாகனங்களின் புதிய பதிவு, வாகன உரிமை மாற்றப் பதிவு, சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல், மோட்டார் வாகனங்கள் தொடர்பான தொழில்நுட்ப சேவைகளை வழங்கல் மற்றும் வீதிப் பாதுகாப்பு குறித்த கொள்கை உருவாக்கம் போன்ற பிரதான பணிகளை மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் மேற்கொள்கின்றது. இதற்காக நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகம் மற்றும் வேரஹெர சாரதி அனுமதிப்பத்திர அலுவலகத்தை மையமாகக் கொண்டு, அனைத்து மாவட்டங்களையும்

உள்ளடக்கும் வகையில் 24 அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 11 மாவட்ட அலுவலகங்கள் நிகழ்நிலை (Online) ஊடாகச் செயற்படுவதுடன், 5 அலுவலகங்கள் சாரதி அனுமதிப்பத்திரப் பணிகளுக்கு மேலதிகமாக வாகன உரிமை மாற்றப் பணிகளையும் மேற்கொள்கின்றன.

இந்த நாட்டில் வீதிகளில் ஓடும் வாகனங்களால் ஏற்படும் சுற்றாடல் மாசடைவைக் குறைப்பதற்கும், முறையான வாகனப் புகை வெளிவிடல் தரநிலைகளைப் பேணுவதற்கும் மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கும் வாகனப் புகை உமிழ்வுத் திட்டத்தையும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

இலங்கையின் பெரும்பகுதியை உள்ளடக்கியவாறு பஸ்வண்டிகள் மூலம் பொதுப் போக்குவரத்துச் சேவையை வழங்குவதில் அரச மற்றும் தனியார் பஸ்வண்டி சேவைகள் பெரும் பங்காற்றுகின்றன. இதில் இலங்கை போக்குவரத்துச் சபை விசேட இடத்தைப் பெறுவதுடன், இது பயணிகள் போக்குவரத்துச் சேவைத் தேவையில் 40% - 50% வரையான சேவையை வழங்குகின்றது. இதற்காக தினசரி சுமார் 5,061 பஸ்வண்டிகள் இயக்கப்படுகின்றன. சிசு செரிய, கெமி செரிய மற்றும் நிசி செரிய திட்டங்களை நடைமுறைப்படுத்தல், பொருளாதார இலாபமற்ற வீதிகளில் பஸ்வண்டி சேவைகளை முன்னெடுத்தல், நீண்டதூர சேவைகள், விழாக்கள் மற்றும் விசேட சந்தர்ப்பங்களில் பஸ்வண்டி சேவைகளை வழங்கல், பரீட்சை காலங்களில் பரீட்சைத் திணைக்களத்திற்குத் தேவையான பஸ்வண்டிகளை வழங்கல், அஞ்சல் மற்றும் பத்திரிகை போக்குவரத்து, முதியவர்கள் மற்றும் மாணவர்களுக்கு சலுகை அடிப்படையிலான பருவகால பயணச்சீட்டுகளை வழங்கல் போன்ற பல பணிகளை இலங்கை போக்குவரத்துச் சபை மேற்கொள்கின்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவானது, மக்கள் சமூகத்திற்கு வினைத்திறனான, தரமான, வசதியான மற்றும் சுற்றாடல் நட்பு ரீதியான போக்குவரத்துச் சேவையை வழங்கும் நோக்குடன் செயற்படுகின்றது. பஸ்வண்டி சேவைகளை வழங்கல், பஸ்வண்டி கட்டணங்களைத் தயாரித்தல், கால அட்டவணைகள் மற்றும் சேவைகளைக் கண்காணித்தல், நகர போக்குவரத்துத் திட்டங்களைத் தயாரித்தல், பஸ்வண்டி ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தல், பொது மக்களின் முறைப்பாடுகளைப் பெற்று அவற்றை விரைவாக விசாரணை செய்தல், ஒழுங்குவிதிகள் மற்றும் தேசிய போக்குவரத்து புள்ளிவிவரங்களைத் தயாரித்தல் போன்ற பணிகள் இந்த நிறுவனத்தினால் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும் இதுவரை காலமும் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுத்தப்படாத பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற முச்சக்கர வண்டிகள், அலுவலக போக்குவரத்துச் சேவை மற்றும் பாடசாலை போக்குவரத்துச் சேவைகளுக்காக ஒழுங்குவிதிகளை தயாரிக்கும் அதிகாரம் 2025 ஆம் ஆண்டில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளது.

சாரதிகளுக்கான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு, அவர்களின்

உடற்தகுதியை உறுதிப்படுத்தி மருத்துவச் சான்றிதழ்களை வழங்குவது தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் பிரதான பணியாகும். மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்திற்கும் இடையிலான சேவைகளை நிகழ்நிலை (Online) ஊடாக இணைத்து, நவீன தொழில்நுட்பத்தின் மூலம் மருத்துவச் சான்றிதழ்களை வழங்கும் நடைமுறையானது 2025.04.07 ஆம் திகதி தொடக்கம் நுகேகொடை பிரதான அலுவலகத்திலும் வேரஹெர கிளை அலுவலகத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சாரதி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்காக மருத்துவச் சான்றிதழைப் பெறுவதற்கு வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனான மற்றும் திருப்திகரமான சேவையை வழங்கும் நோக்கில், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நுகேகொடை பிரதான அலுவலக வளாகத்தில் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் சேவையானது 2025.09.30 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வீதிப் பாதுகாப்பு மற்றும் அது சார்ந்த விடயங்கள் குறித்த திட்டங்களுக்குப் பொறுப்பான அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அறிவையும் தகவல்களையும் வழங்குதல், வீதிப் பாதுகாப்புடன் தொடர்புடைய பணிகளை ஒருங்கிணைத்தல், நிதி மற்றும் இதர உதவிகளை வழங்குதல், அடையாளம் காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குள்ளானவர்களுக்கும் உயிரிழந்தவர்களுக்கும் நிதி உதவிகளை வழங்குதல் போன்ற பணிகளை வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை மேற்கொள்கின்றது.

லக்திவ பொறியியல் (தனியார்) நிறுவனம் மூலம் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பழுதடைந்த மற்றும் விபத்துக்குள்ளான பஸ்வண்டிகளின் உடல் கோப்புப்பகுதிகளை புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, நவீன இயந்திர உபகரணங்களைக் கொண்ட வாகன சேவை நிலையமும் இயங்கி வருகின்றது. முன்னயை ஆண்டுகளில் மாதம் ஒன்றுக்கு 08 – 10 பஸ்வண்டிகள் புனரமைக்கப்பட்ட நிலையில், 2025 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 10 – 14 பஸ் வண்டிகளாக உயர்வடைந்துள்ளது.

பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து சேவையை வினைத்திறனாகப் பேணுவதற்காக, போக்குவரத்துத் துறை எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகொண்டு மக்களுக்கு உயர்தரமான, வினைத்திறனான, உற்பத்தித்திறன் மிக்க மற்றும் மக்கள் நேயமிக்க போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்காக அமைச்சானது அதன் கீழ் உள்ள இணைந்த நிறுவனங்களைக் கண்காணித்து, அந்நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் (போக்குவரத்துப் பிரிவு) மூலம் பின்வரும் விசேட பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன:

- "பொதுப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் பஸ்வண்டிகள்க்கான குறைந்தபட்ச விவரக்குறிப்புகளை அறிமுகப்படுத்துதல்" தொடர்பான உத்தியோகத்தர் குழுவின் அறிக்கை அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் ஊடாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், அதன் தீர்மானத்தின்படி இது அரச கொள்கையாக நடைமுறைப்படுத்துவதற்கு முறையான அனுமதி வழங்கப்படாததாலும் மற்றும் முன்வைக்கப்பட்ட திருத்தங்கள் காரணமாகவும், அத்திருத்தங்கள் குறித்து கவனம் செலுத்துவதற்காக புதிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன்படி, அப்புதிய குழுவினால் தயாரிக்கப்பட்ட விவரக்குறிப்பு அறிக்கை, வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் வாகன இறக்குமதி நிறுவனங்களின் பங்களிப்புடன் பங்குதாரர்களின் கருத்துகளைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது 2026 சனவரி மாத இறுதியில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

- மெட்ரோ பஸ்வண்டி திட்டத்தின் கீழ் கொழும்பு நகர்ப்புறப் பகுதியில் பயணிகள் பயன்பாட்டிற்காக 100 சொகுசு தாழ்தளப் பஸ்வண்டிகளை (Low-floor buses) ஈடுபடுத்த எதிர்பார்க்கப்படுவதுடன், இதற்காக 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 3,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தற்போது இலங்கை போக்குவரத்துச் சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனமாக "லங்கா மெட்ரோ ட்ரான்சிட் (தனியார்) நிறுவனம்" பதிவு செய்யப்பட்டு அதன் பிரதான அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்குரிய 06 பஸ்வண்டிப் பாதைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இப்பஸ்வண்டிகள்க்குப் பொருத்தமான வகையில் அந்தப் பாதைகளில் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளைத் தயாரிப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2026 யூன் மாத இறுதியில் இப்பஸ்வண்டி சேவையை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- தேசிய போக்குவரத்து கொள்கை - 2009 இனை இற்றைப்படுத்தித் தயாரிக்கப்பட்ட "இலங்கையின் தேசிய தரைவழிப் போக்குவரத்துக் கொள்கை 2025", அமைச்சரவை அங்கீகாரத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், புதிய அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு ஏற்ப மீண்டும் இற்றைப்படுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய தரைவழிப் போக்குவரத்துக் கொள்கை வரைவை புதிய அரசாங்கத்தின் கொள்கைகளுடன் சீரமைப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, அக்குழுவினால் கொள்கை வரைவு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அறிவுறுத்தலுக்கமைய,

நெடுஞ்சாலைகள் பிரிவின் விடயப்பரப்புக்குரிய விடயங்களையும் உள்ளடக்கி அக்கொள்கை வரைவில் அவசியமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- நாட்டில் மின்சாரப் போக்குவரத்து முறையை ஊக்குவிப்பதற்கும், பொதுப் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்துவதற்கும் பொருத்தமான மூலோபாயத்தைத் திட்டமொன்றைத் தேர்ந்தெடுப்பதற்கும், தற்போதுள்ள விவரக்குறிப்புகள் மற்றும் அறிக்கைகளை ஆய்வு செய்வதற்கும், பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளைப் பரிசீலிப்பதற்கும் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, பல சந்தர்ப்பங்களில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், இலங்கையில் மின்சாரப் பஸ்வண்டிகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாக பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துக்களும் ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன. அனைத்து முன்மொழிவுகளையும் ஆய்வு செய்து, தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் திட்ட முன்மொழிவொன்றைச் சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகின்றது.

- வியன்னா உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பாக மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம், இலங்கை போக்குவரத்துச் சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை புகையிரதத் திணைக்களம் ஆகிய சம்பந்தப்பட்ட நிறுவனங்களை இணைத்து ஒரு செயலமர்வு நடத்தப்பட்டது. இதன்போது, மாற்றங்கள் செய்யப்பட வேண்டிய சரத்துக்கள் (Articles) அடையாளம் காணப்பட்டன. பின்னர், பல சந்தர்ப்பங்களில் மேற்கூறிய நிறுவனங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட குழுவினருடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு, சரத்துக்கள் முறையாக எவ்வாறு மாற்றப்பட வேண்டும் என்பது குறித்து முன்மொழியப்பட்டு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

- 2025 ஆம் ஆண்டில், 74 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் அமைச்சரவை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த அனைத்து அமைச்சரவைப் விஞ்ஞாபனங்களுக்குமான தீர்மானங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2025 ஆம் ஆண்டு வரை போக்குவரத்துப் பிரிவிற்க்காக குறித் தொதுக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடு செலவிடப்பட்ட விதம் பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.



2025 ஆம் ஆண்டில் போக்குவரத்துப் பிரிவு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விதம்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் - போக்குவரத்துப் பிரிவு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்காக 2025 ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவினங்களாக திறைசேரி மற்றும் சுய நிதி ஒதுக்கீடுகளின் ஊடாக 63,278.16 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த நிதி ஒதுக்கீடுகள் போக்குவரத்துத் பிரிவு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இடையில் பகிரப்பட்டுள்ள விதம் பின்வரும் வட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.



போக்குவரத்து பிரிவின் 2025 வருடத்திற்கான மூலதன மற்றும் மீண்டெழும் செலவுகளுக்கான ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ள விதம்

ஒதுக்கீடுகள்	நிறுவனம்	திருத்தம் செய்யப்பாட்ட மூலதனம் (ரூபா.மி)	திருத்தம் செய்யப்பாட்ட மீண்டெழும் (ரூபா.மி)	மொத்தம் (ரூபா.மி)
திறைசேரி ஒதுக்கீடு	போக்குவரத்துப்பிரிவு	22,251.5	17,671.00	**39,922.50**
	இலங்கைப் புகையிரத திணைக்களம்	29,079.20	31,378.00	**60,457.20**
	மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்	1,455.00	3,614.00	**5,069.00**
மொத்தம்		**52,785.7**	**52,663.00**	**105,448.7**
சுய ஒதுக்கீடு	இபோச	10,225.25	84,203.98	**94,429.23**
	தேசிய போக்குவரத்து ஆணைக்குழு	84.61	491.98	**576.59**
	தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்	101.9	1090.00	**1191.9**
	வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை	73.7	8.91	**82.61**
	லக்திவ பொறியியல் தனி நிறுவனம்	7.00	314.00	**321**
மொத்தம்		**10,492.46**	**86,108.87**	**96,601.33**
முழுமொத்தம்		**63,278.16**	**138,771.87**	**202,050.03**

2025 வருடத்தில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவு விடயங்களின் முன்னேற்றம்

நிறுவனததின்.்.கருததிட்டத்தின்		மூலதன (ரூபா.மி)		மீண்டெழும் (ரூபா.ம)	
		திருத்தப்பட்ட ஒதுக்கீடு	2025.12.31 ஆம் திகதிக்கு செலவு	திருத்தப்பட்ட ஒதுக்கீடு	2025.12.31 ஆம் திகதிக்கு செலவு
போக்குவரத்துப் பிரிவு (அமைச்சு)		8.00	3.19	362.00	321.07
இலங்கை போக்குவரத்து சபை		4,176.50	3,838.78	15,150.00	15,150.00
இந்திய கடன் திட்டத்தின் ரூபா.மி 318 மீதி நிதியை பயன்படுத்தி இபோசக்காக 600 பஸ் வண்டிகள் கொள்வனவு		3,000.00	-	-	-
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு		-	-	1,913.00	1,700.00
கொழும்பு புறநகர் புகையிரத கருத்திட்டம்	TPPF	286.57	236.82	-	-
	REIP	11,488.43	5,638.10	-	-
பாரிய கொழும்பு போக்குவரத்து வலையமைப்பு மேம்படுத்தல் கருத்திட்டம் (3மு கருத்திட்டம்)		289.00	289.00	246.00	231.09
பொதுப் போக்குவரத்து நவீனமயப்படுத்தலுக்காக தாழ் தள பஸ்வண்டிகள் 100 கொள்வனவு		3,003.00	3001.63	-	-
மொத்தம்		**22,251.50**	**13,007.52**	**17,671.00**	**17,402.16**

TPPF- (Transport Project Preparatory Facility) போக்குவரத்து கருத்திட்ட திட்டமிடல் வசதிகள்

REIP- (Railway Efficiency Improvement Project) புகையிரத வினைத்திறன் மேம்படுத்தல் கருத்திட்டம

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்கள்

தொலைநோக்கு

இலங்கையை பிராந்தியத்தில் பொதுமக்கள் மையமாகக் கொண்ட போக்குவரத்து முறைமையுடன் கூடிய ஒரு நாடாக உருவாக்குதல்

பணிக்கூற்று

பொதுமக்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தும் பொருட்டு நவீன தொழில்நுட்ப மூலோபாயங்கள் கையாளப்பட்டு மிகவும் உயரந்த போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகளை செயல்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் நிலைபேற்றுடன் முன்னெடுத்துச் செல்லுதல

குறிக்கோள்கள்

- பயணிகள், பொருட்களை கொண்டு செல்வது மற்றும் சுற்றுலா போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
- பொதுமக்களின் நம்பிக்கையைப் பெற்று போக்குவரத்து வாகன நெரிசல் மற்றும் வீதி விபத்துகளைத் தவிர்ப்பதற்காக போக்குவரத்து சேவைகளை கால அட்டவணையின்படி பேணிவருதல்
- நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்துதல்.
- நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிர பாதைகளுடன் தொடர்புடைய சுற்றாடல் மற்றும் பயணிகளுக்கு ஏற்ற நட்புறவான போக்குவரத்து அமைப்பை நிறுவுதல்.
- 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- 1950 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க புகையிரத சட்டத்தை அமுல்படுத்துதல்.
- 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனங்கள் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- 1951 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- வேறு அமைச்சிற்கு ஒதுக்கப்படாத போக்குவரத்து விடயம் ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சுக்கள் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான அனைத்து பிற சட்டங்களையும் செயற்படுத்துதல்.

1.3 முக்கிய செயற்பாடுகள் மற்றும் பணிகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2024.11.25 ஆம் திகதிய 2412/08 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின்படி, போக்குவரத்துத் துறைக்கு பின்வரும் செயல்பாடுகள் மற்றும் பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

- அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் தேசிய கொள்கைகளின் அடிப்படையில், போக்குவரத்துத் திணைக்களம் கீழ் உள்ள துறைகள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் விடயங்கள் மற்றும் போக்குவரத்துத் திணைக்களம் தொடர்பான கொள்கைகள், உத்திகள்,

திட்டங்கள் மற்றும் திட்டங்களை வகுத்தல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

- அமைச்சின் விடய எல்லைக்குள் பொதுமக்கள் சேவைகளை வினைதிறமையானவாறு மற்றும் பொதுமக்கள் நட்புறவான முறையில் வழங்குதல்.
- வீண் விரையம் / கழிவு மற்றும் ஊழலை ஒழித்து, அமைச்சின் பணியை நிறைவேற்றுவதை உறுதிசெய்வதற்று உதவும் வகையில், நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகள் மற்றும் நடைமுறைகளையும் சீர்திருத்துதல்.
- போக்குவருத்து நெரிசலைக் குறைக்க வாகன வளாகங்களை நிறுவுதல்.
- பயணிகள் படகு சேவைகளை வழங்குதல்.
- பாதுகாப்பான மற்றும் நம்பகமான பயணிகள் போக்குவரத்து சேவையை வழங்குதல்.
- சுற்றாலுக்கு உகந்த நட்புறவான போக்குவரத்து முறையை அறிமுகப்படுத்துதல்.
- தனியார் போக்குவரத்து சேவைகளை ஒழுங்குபடுத்துதல்.
- பஸ்வண்டி உற்பத்தி மற்றும் போக்குவரத்துத் திணைக்களம் உள்கட்டமைப்பு தொடர்பான உள்ளூர் தொழில்துறை அமைப்பை உருவாக்குதல்.
- புதிய புகையிரதப் பாதைகள் அமைத்தல், ஏற்கனவே உள்ள புகையிரதப் பாதைகளின் பராமரிப்பு மற்றும் விரிவாக்கம் மற்றும் தொடர்புடைய காணி கையகப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு அபிவிருத்தி.
- துறைமுகங்களுக்கு புகையிரதம் மூலம் பொருட்களை கொண்டு செல்வதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி விரிவுபடுத்துதல்.
- 24/7 முழுவதும் காணப்படுகின்ற புகையிரதச் சேவையை வழங்குதல்.
- மின்சாரப் புகையிரதங்களை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக புகையிரத அமைப்பை படிப்படியாக மேம்படுத்துதல்.
- ஒற்றைவழிப் பாதை புகையிரதச் சேவை மற்றும் இலகுரக புகையிரதப் பாதைகளை அறிமுகப்படுத்துதல்
- அரசு மற்றும் தனியார் பஸ்வண்டி சேவைகளை ஒருங்கிணைத்து புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கிளஸ்டர் பஸ்வண்டி நிறுவனங்களை உருவாக்குதல்.
- அனைத்து பஸ்வண்டிகளிலும் POS டிக்கெட் வழங்கும் இயந்திரங்களை அறிமுகப்படுத்துதல்
- மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்களுக்காக புகையிரதங்கள் மற்றும் பஸ்வண்டிகள், புகையிரத நிலையங்கள் மற்றும் பஸ்வண்டி நிலையங்களில் சிறப்பு அணுகல் வசதிகளை வழங்குதல்.
- மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்
- சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குதல்.

- மோட்டார் வாகனங்கள் தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் விதிகளை வெளியிடுதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்
- பசுமை இல்ல/ பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கு போக்குவரத்துத் துறையின் பங்களிப்புக்கான மூலோபாயத் திட்டங்களை செயல்படுத்துதல்
- அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஏனைய விடயங்களுக்குரிய அனைத்துப் பணிகளையும் செய்தல்
- அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்

1.4. அமைச்சின் (போக்குவரத்து பிரிவு) – கட்டமைப்பு விளக்கப்படம் (பக்கம் எண் 13)

1.5 அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள் (போக்குவரத்து பிரிவு)

- இலங்கை புகையிரத திணைக்களம்
- மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்

1.6 அமைச்சின் (போக்குவரத்துப் பிரிவு) கீழ் உள்ள நிறுவனங்கள்

- இலங்கை போக்குவரத்து சபை
- தேசிய போக்குவரத்து ஆணைக் குழு
- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்
- தேசிய வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை
- வ.்.ப லக்திவ பொறியியல் தனியார் கம்பனி.

1.4 போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நிறுவன கட்டமைப்பு விளக்கப்படம் (போக்குவத்துப் பிரிவு)



போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு (போக்குவரத்துப் பிரிவு)

1.7 வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்கள்

கருத்திட்டத்தின் பெயர்	நிதிசார் மூலங்கள்		கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூபா. மில்.)	திரண்ட செலவு(ரூ.மி.) (2025.12.31 திகதியிற்கு)	காலப்பகுதி	கருத்திட்டத்தின் பெயர்	
	உள்நாட்டு/ வெளிநாட்டு	நிறுவனம்				%	விபரம்
பாரிய கொழும்பு நகர்ப்புற போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டுக் கருத்திட்டம்.	உள்நாடு வெளிநாடு	இலங்கை அரசு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்	5,805.30 2021 தொடக்கம் 2025 வரை 788 மில். ரூபா செயற்பாட்டுச் செலவுகளாக கருத்திட்டத்திற்கு கிடைக்கப் பெறப்பட்டுள்ளது	5,739.84 ** இதற்கு மேலதிகமாக, 2021 தொடக்கம் 2025 வரை மீண்டெழும் செலவாக வழங்கப்பட்ட 788 மில். ரூபா மாகும்புர , கடவத்தை பல் மாதிரி போக்குவத்து நிலையங்களின் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவுகளாக செலவு செய்யப்பட்டுள்ளது.	கட்டம் - 1 நகர அபிவீருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் 2009 செப்தெம்பர் – 2014 மார்ச் கட்டம் 2 பல்மாதிரி நிலையத்தின் நிர்மாணம் 2014 - ஏப்ரல 2019 மார்ச் .	100%	2019.03.31 ஆம் திகதி மாக்கும்புர பன்மாதிரி போக்குவரத்து நிலையம் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து கருத்திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன, இருப்பினும், 2020 வரை ஆரம்ப வழிநடாத்தல் செயற்பாடுகளை Pilot Operation கருத்திட்டம் மூலம் மேற்கொள்ளுமாறு பெரு நகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதன்படி, பல்மாதிரி போக்குவரத்து நிலைய வழிநடாத்தல் முறைமைகளை விருத்தி செய்தல் அக்காலப்பகுதியில் கருத்திட்டதினால் மேற்கொள்ளப்பட்டது . நகர அபிவிருத்தி அதிகார சபையின் வேண்டுகோளின் பேரில், போக்குவரத்து அமைச்சினால் 2022 தொடக்கம் கடவத்தை பன்மாதிரி போக்குவரத்து நிலையக் கருத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதன்படி, 2020 ஆம் ஆண்டளவில், இந்த கருத்திட்டம் மூலம் பன்மாதிரி போக்குவரத்து நிலையத்தின் வழிநடாத்தல் மாதிரியை (Institutional Mechanism) நிறைவு செய்யப்பட்டதோடு, அதற்காக அமைச்சரவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், மாக்கும்புர பன்மாதிரி போக்குவரத்து நிலையம்

					கட்டம் 3 வழிநடாத்தல் பணிகளைப் பேணி வருதல் மற்றும் தாபித்தல் 2019 2025 ஏப்ரல் - யூன		மட்டுமே இருப்பதால்,2023 திசெம்பர் வரை கருத்திட்டம் மூலம் மேற்கொண்டு எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்ப ஒரு நியதிச்சட்ட நிறுவனத்தை நிறுவும் பொறுப்பு போக்குவரத்து அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது,எவ்வாறாயினும் அந்த காலப்பகுதியினுள் கருத்திட்டம் மூலம் குறித்த வழிநடாத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன. 2024 ஆம் ஆண்டு சஹஸ்யா நிறுவனத்திற்கு கையளித்தல் செய்யப்பட்ட போதிலும் JICA அங்கீகாரம் பெறப்படாத காரணத்தால், அது மீண்டும் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.
							அதற்கமைய, பல்மாதிரி போக்குவரத்து மத்திய நிலையங்களின் பராமரிப்பு மற்றும் செயல்பாட்டு நடவடிக்கைகளுக்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சின் கீழ் 6 மாத காலப்பகுதிக்கு விசேட முகாமைத்துவ அலகு ஒன்று தாபிக்கப்பட்டதோடு, 2025 யூன் மாத அமைச்சரவை தீர்மானத்தின்படி, 2025.07.01 ஆம் திகதி முதல் மீண்டும் ஒரு வருட காலத்திற்கு விசேட முகாமைத்துவ அலகாக இதனைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு அங்கீகாரமி வழங்கப்பட்டது. இதன் பிரகாரம், 2020 ஆம் ஆண்டிலிருந்து கருத்திட்டத்தின் செயல்பாட்டுப் பணிகளுக்கு (Operation) மாத்திரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அபிவிருத்தித் தேவைப்பாடுகளுக்காக நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. அதற்கமைய 100% முன்னேற்றத்துடன் கருத்திட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு புறநகர புகையிரதக் கருத்திட்டம்							
புகையிரத வினைத் திறன் விருத்தி கருத்திட்டம் (REIP)	உள்நாடு வெளிநாடு	இலங்கை அரசு ADB	40,186.81	23,396.00	2019-2027	87%	33 பெறுகைப் பணிகளில் 29 பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 21 ஒப்பந்தங்களின் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதுடன், மேலும் 02 பெறுகைப் பணிகள் இறுதி கட்டத்தில் உள்ளன.
களனிவெளிப் புகையிரதப் பாதையின் இருபுறமும் உள்ள சட்டவிரோத குடியிருப்பாளர்களை மீள்குடியேற்றம் செய்யும் கருத்திட்டம். (TPFF)	உள்நாடு	இலங்கை அரசு	9,600.00	3,970.70	2016-2025	77%	தெமட்டகொட லோகோ சந்தியிலிருந்து பாதுக்க வரை சட்டவிரோதமான குடியிருப்பாளர்கள் 860 பேருக்கு இழப்பீடுகளும் சலுகைகளும் வழங்கப்பட்டு, தற்போது அவர்கள் புகையிரத ஒதுக்கு காணிகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளனர்.
மாஹோ - ஓமந்தை புகையிரதப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம்							
மாஹோ - ஓமந்தை புகையிரதப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம	வெளிநாடு	**Indian Exim Bak**	அ.டொலர் மில் 91.268	அ.டொலர் மில் 56.002	36 மாதங்கள்	96%	மாஹோ - ஓமந்தை பிரதான புகையிரதப் பாதையின் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், சில புகையிரத நிலைய வளாகங்களின் (Yards) நருமாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன.
மாஹோ – அநுராதபுரம் புகையிரத சமிக்ஞை அமைப்பை நிருமாணித்தல் கருத்திட்டம்	வெளிநாடு		அ.டொலர் மில் 14.899	அ.டொலர் மில் 2.5	12 மாதங்கள	15%	முற்பணக் கொடுப்பனவுகள் முடிக்கப்பட்டு, திட்டமிடல் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

02 ஆம் அத்தியாயம்

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

02 ஆம் அத்தியாயம்
முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1. விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

2.1.1 இலங்கை புகையிரதத் திணைக்களம்

2025 ஆம் ஆண்டானது இலங்கை புகையிரத சேவைக்கு (SLR) விசேட சவால்கள் மற்றும் மாற்றங்கள் நிறைந்த ஒரு காலப்பகுதியாக அமைந்தது. நாளொன்றுக்கு சுமார் 325,000 பேர் புகையிரத சேவையைப் பயன்படுத்துவதுடன், இது நாட்டின் மொத்த போக்குவரத்துத் தேவையில் 6% என கணக்கிடப்பட்டுள்ளது.

காலாவதியான உள்கட்டமைப்புகள், சேவையில் ஈடுபடுத்தக்கூடிய புகையிரதங்களின் எண்ணிக்கை, செயல்பாட்டுக் கட்டுப்பாடுகள் மற்றும் மனிதவள பற்றாக்குறை ஆகியவற்றால் புகையிரத சேவையைப் பராமரிப்பதில் நிலவும் சவால்களுக்கு மத்தியில் ஆண்டு முழுவதும் பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்து சேவைகளின் தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும், முன்னுரிமை அடிப்படையிலான உள்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் நவீனமயமாக்கல் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கும், தேசிய புகையிரத வலையமைப்பில் ஏற்படும் புதிய அபாயங்களுக்கு விரைவாக பதிலளிப்பதற்கும் இலங்கை புகையிரதத் திணைக்களம் தொடர்ச்சியான முயற்சிகளில் ஈடுபட்டது.

ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட தித்வா சூறாவளி காரணமாக புகையிரதப் பாதைகள் மற்றும் பாலங்கள் கடுமையாக சேதமடைந்தன. இதன் காரணமாக புகையிரதச் செயல்பாடுகள் ஒட்டுமொத்த புகையிரதப் பாதை அமைப்பில் 22% ஆகக் குறைந்தன. புகையிரத சேவையிலுள்ள அனைவரினதும் கூட்டு முயற்சி, முப்படைகள் மற்றும் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் புகையிரதப் பாதை புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதோடு 2025.12.31 ஆம் திகதியாகும் போது புகையிரதச் செயல்பாடுகளை மொத்த பாதையமைப்பில் 70% வரை உயர்த்த புகையிரதச் சேவையால் முடிந்தது. எவ்வாறாயினும், கடுமையாக சேதமடைந்த மலையக புகையிரதப் பாதை இன்னும் செயல்பாட்டு மட்டத்தில் இல்லை. சுற்றுலாத் துறைக்கும் தோட்டப்புற போக்குவரத்துக்கும் மிகவும் முக்கியமான மலையகப் பாதையை விரைவாக இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் முன்னுள்ள பாரிய சவாலாக மாறியுள்ளது.

2.1.1.1 பிரதான பணிகள் மற்றும் பொறுப்புகள்

- பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

- சரக்கு போக்குவரத்தை மேற்கொள்ளல்.
- விசேட பயணிகள் மற்றும் சரக்கு புகையிரத சேவைகளை முன்னெடுத்தல்.
- புகையிரத உள்கட்டமைப்பு வசதிகள் (புகையிரத அணி, புகையிரத சமிக்ஞை கட்டமைப்பு, புகையிரத பாதைகள், கட்டிடங்கள், பாலங்கள்) அபிவிருத்தி செய்தல்

2.1.1.2 தொழிற்பாட்டு குறிகாட்டி

புகையிரத தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் பிரதான குறிகாட்டியின் முன்னேற்றம் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

குறிகாட்டி	2025.12.31 வரை
பயணிகள் எண்ணிக்கை (மில்)	97.46
பயணிகள் கி.மீ. (மில்)	6,198.29
சரக்கு டொன் (மில்)	2.07
சரக்கு டொன் கி.மீ (மில்)	161.99
ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட மொத்த புகையிரத தடவைகள் எண்ணிகை	110,994

2.1.1.3 வருமான செலவு விபரம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

வருமான வகை	இலக்கு வருமானம் (ரூபா.மில்.)	உண்மை வருமான உழைப்பு (ரூபா.மில்.)	உண்மை வருமான உழைப்பு (%)
பயணிகள்	14,700.00	13,499.03	92
பண்டங்கள்	2,200.00	2,462.44	112
ஏனைய	1,100.00	1,204.53	110
மொத்தம்	**18,000.00**	**17,166.00**	**95.37**

செலவு வகை	குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீட்டின் அளவு (ரூபா.மில்.)	2025.12.31 ஆம் திகதிக்கு சதவீதம் (ரூபா.மில்.)	சதவீதம் (%)
மூலதனம்	29,079.20	18,934.22	65.11
மீண்டெழும்	31,378.00	28,242.08	90.01
மொத்தம்	**60,457.20**	**47,176.30**	**78.03**

2.1.1.4 நிறுவனத்தின் மூலதன ஒதுக்கீடுகளின் முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

2025 ஆம் ஆண்டுக்காக நிதி ஒதுக்கீடு		நிதி முன்னேற்றம் (%)	நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டம்			பௌதீக முன்னேற்றம் (%)
திறைசேரி	சுய		இலக்கு	நிறைவு செய்யப்பட்ட	நடைமுறைப் படுத்தப்பட்டுவருகின்ற	
29,079.20	-	65.11	வருடம் முழுவதும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் உள்ளிட்ட பிரதான 2 கருத்திட்டங்கள் உட்பட் 62 செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்	செயற்பாடு 11	கருத்திட்டம் 2 மற்றும் செயற்பாடுகள் 51 மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.	81

2.1.1.5 பிரதான செலவு விடயம் மற்றும் உப திணைக்களங்களுக்கு அமைய மூலதன ஒதுக்கீடுகளுக்குரிய முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

பிரதான செலவு விடயம் / உப திணைக்களம்	மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூபா.மில்.)	குறித்தொதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா.மில்.)	மூலதன முன்னேற்றம்			பௌதீக முன்னேற்றம்		
			இலக்கு (ரூபா.மில்.)	செலவு (ரூபா.மில்.)	%	இலக்கு (%)	பொழிப்பு முன்னேற்றம்	%
நிருவாக, தாபன சேவைகள்	10.40	10.40	10.40	9.61	92.50	100	செயற்பாடு 11 செயற்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது. ஏனைய குறித்த கருத்திட்டம்/செயற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது	100
ஜேர்மன் தொழில்நுட்ப புகையிரத பயிற்சிப்பாடசாலை - ரத்மலாலை	12.00	12.00	12.00	8.21	68.50	100		98
புகையிரத பாதுகாப்புச் சேவை	0.5	0.5	0.5	0.49	99.89	100		99
போக்குவரத்து உப திணைக்களம்	10.50	9.60	9.60	8.87	92.50	100		86
வணிக உப திணைக்களம்	1.50	1.50	1.50	0.99	66	100		72
புகையிரத அணியின் சிறு பழுதுபார்ப்பு செய்தல்	4,672.00	4,171.00	4,171.00	2,912.97	69.84	100		72

புகையிரத அணியின் பிரதான பழுதுபார்ப்பு அலுவல்கள்	8,459.00	7,809.00	7,809.00	4,341.64	55.35	100		58
நிரந்தரப் பாதை,கட்டிடங்கள் மற்றும் புதிய நிருமாணம் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புச் செய்தல்	15,556.00	15,309.20	15,309.20	10,624.94	42.93	100		76
சமிக்ஞை மற்றும் இலத்திரனியல் அமைப்பின் பழுதுபார்ப்பு	1,855.00	1,756.00	1,756.00	1,026.50	57.04	100		72
மொத்தம்		**29,079.20**		**18,934.22**	**65.11**			**81**

2025 ஆம் ஆண்டில் புகையிரதப் பயணிகளின் சேவைகளின் தரத்தை உயர்த்துவதற்காக வீதி வலையமைப்பு, கட்டடங்கள், பாலங்கள் மற்றும் சமிக்ஞை கட்டமைப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

வீதி வலையமைப்பு மற்றும் உள்கட்டமைப்பு

- **பிரதான பாதை அபிவிருத்தி:** கண்டி, பேராதனை மற்றும் கடுகன்னாவை புகையிரதப் பாதை அபிவிருத்தித் திட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தல்
- **மலையகப் பாதை**: மலையக புகையிரதப் பாதையின் தண்டவாளப் பராமரிப்புக்காக 10,000 கொன்கிரீட் சில்பரக் கட்டைகள் மற்றும் செக் ரெயில்களை (Check rails) கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்தல்
- **புதிய திட்டங்கள்:**
  - ✓ களனிவெளி புகையிரதப் பாதையின் நவீனமயமாக்கல் பணிகளை ஆரம்பித்தல்
  - ✓ நீர்கொழும்பு முதல் கொச்சிக்கடை வரையான இரட்டைவழிப் புகையிரதப் பாதை நிர்மாணப் பணிகளை முன்னெடுத்தல்
  - ✓ கெட்டம்பே முதல் சரசவி உயன வரையான இரட்டைப் புகையிரதப் பாதை பணிகளைத் தொடர்ச்சியாகப் பேணுதல்
- **புனரமைப்புகள்:**
  - ✓ மாஹோ முதல் ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை மறுசீரமைக்கும் திட்டத்தின் 96% பணிகளை நிறைவு செய்தல்
  - ✓ கடலோரப் பாதைக்காக 4,000 துருப்பிடிக்காத தண்டவாளங்கள் மற்றும் 10,000 புதிய தண்டவாளங்களை இறக்குமதி செய்தல்
  - ✓ "தித்வா" சூறாவளியால் சேதமடைந்த புகையிரதப் பாதைகளை விரைவாகப் புனரமைத்தல்
- **கட்டடங்கள் மற்றும் பாலங்கள்:**
  - ✓ களனி புதிய இரட்டை வழிப் பாலத்தை தாபித்தல் பணிகளை ஆரம்பித்தல்
  - ✓ கனேவத்தை, லுனுவில மற்றும் கடிகமுவ புகையிரத நிலையங்களில் மேம்பாலங்களை (Overhead Bridges) நிர்மாணித்து முடித்தல்
  - ✓ புதிய புகையிரத நிலையக் கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் தற்போதுள்ள நிலையங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்தல்

புகையிரதத் தொகுதி.:. அணி (Rolling Stock)

- **பெட்டிகள் புனரமைப்பு:** தந்திரி நிறுவனத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட 200 பெட்டிகள் கருததிட்டத்தின் ஒரு நீடிப்பாக, மேலும் 100 பெட்டிகளைப் புனரமைத்து சேவையில் ஈடுபடுத்தல்.
- **தொழிற்சாலை அபிவிருத்தி:** ரத்மலானை புகையிரதப் வேலைத் தளத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) நிதியுதவியுடன் டீசல் வலு அலகுகளை (Power Sets) பழுதுபார்ப்பதற்கான புதிய தொழிற்சாலையை நிர்மாணித்தல்.
- **உள்நாட்டுப் பழுதுபார்ப்பு:** ரத்மலானை தொழிற்சாலையினால் 02 புகையிரதப் பெட்டிகளை முழுமையாகப் பழுதுபார்த்து முடித்தல் மற்றும் மேலும் சில பெட்டிகளின் பணிகளை முன்னெடுத்தல்.
- **புதிய கொள்வனவுகள்:** கொழும்பு புறநகர் சேவைக்காக புதிதாக 05 டீசல் வலு அலகுகளை (Power Sets) கொள்வனவு செய்வதற்கான பெறுகைப் பணிகளை முன்னெடுத்தல்.

சமிக்ஞை மற்றும் தொலைத்தொடர்பு கட்டமைப்பு

- **சமிக்ஞை கட்டமைப்புகளைத் தாபித்தல்:**

✓ கல்கமுவ மற்றும் தலாவ புகையிரத நிலையங்களில் தற்காலிக சமிக்ஞை கட்டமைப்புகளை நிறுவுதல்.

✓ மாஹோ மற்றும் நாகொல்லாகம இடையே 'Block' சமிக்ஞை கட்டமைப்பு மற்றும் மின் விநியோகக் கட்டமைப்பை (Power System) நவீனமயமாக்குதல்.

✓ கண்டி மற்றும் பேராதனை இடையே தானியங்கி சமிக்ஞை கட்டமைப்பை நிறுவுதல்.

- **பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு:** பயணிகள் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக ஹட்டன் மற்றும் அளுத்கம புகையிரத நிலையங்களில் புதிய CCTV கட்டமைப்புக்களை நிறுவுதல்.

2.1.1.6 அடையப்பெற்ற இலக்குகள்

முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், புகையிரதத் திணைக்களத்திற்கு அதிக மூலதன நிதியை ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதற்கமைய, ரத்மலானை புகையிரதப் பழுதுபார்க்கும் பணிமனையின் புதிய கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் ஒரு கட்டமாக, புகையிரத சாரதி பயிற்சிகளுக்காக புதிய புகையிரத பயிற்சி பாவனை முறைமை (Train Simulator) ஒன்று ரத்மலானை புகையிரத பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக, புகையிரதப் பழுதுபார்ப்புக்கான புதிய தொழிற்சாலை ஒன்றின் கட்டுமானப் பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 2026 ஆம் ஆண்டில் அதனைச் செயல்பாட்டு நிலைக்குக்

கொண்டுவர முடியும். மேலும், புகையிரதத் தலைமையகக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

புகையிரதத் திணைக்களத்தில் நிலவிய கடுமையான ஊழியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, திணைக்களத்தின் தொழில்நுட்பச் சேவைகளைப் பராமரிப்பதற்குத் தேவையான அத்தியாவசிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டன. அதற்கமைய, 1,446 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதுடன், அவர்களுள் 628 பேர் 2025 ஆம் ஆண்டிற்குள் ஆட்சேர்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தொ .இல	பதவி	சம்ப ள குறியீடு	ஆட்சேர்ப்புச் செய்யப் பட்ட எண்ணிக் கை
1	சிரேட்ட பு.நி.அதிபர்	MN-07	44
2	புகையிர இன்ஜீன் சாரதி	Railway-2025	13
3	புகையிரத தொ.மு.உதவி யாளர் (பொறியியல்)	MT-02	210
4	புகையிரத தொ.மு.உதவி யாளர் (மின்)	MT-02	45
5	பிரதான தொழில்நுட்பவி யலாளர் பதவி	MT-01	189
6	யாட் போர்மன்	MN-02	6
7	சுற்றுலா பயணச் சீட்டு பரீட்சிப்பாளர்	MN-01	2
9	உறங்கல் அறை ஊழியர்	MN-01	2
10	பயணச் சீட்டு உபசரணையா ளர்	MN-01	8
11	சன்டர்	MN-01	25
12	பொயின்ட்ஸ்மன்	PL-03	43
13	பொலிஸ்மன்	PL-03	20
14	புகையிர தொழில்நுட்பவி யல் உதவியாளர்	PL-03	21
	மொத்தம்		**628**

2.1.1.7 சவால்கள் மற்றும் சிக்கல்கள்

2025 ஆம் ஆண்டில் இலங்கை புகையிரத சேவை எதிர்கொண்ட மிக மோசமான சவால், 2025.11.27 தொடக்கம் 2025.11.30 வரை நிலவிய “தித்வா“ சூறாவளி காரணமாக ஏற்பட்ட அனர்த்த நிலைமையாகும். இதன் மூலம் புகையிரத உள்கட்டமைப்புகளுக்கு பலத்த சேதங்கள் ஏற்பட்டதுடன்,மொத்த புகையிரத ஓட்டமும் ஸ்தம்பிதமடைந்தது.

தித்வா சூறாவளிக்கு முன்னர், இலங்கை புகையிரத சேவை நாளொன்றுக்கு சராசரியாக 330 பயணங்களை மேற்கொண்டதுடன், மாதத்திற்கு சுமார் 8.1 மில்லியன் பயணிகளைக் கொண்டு செல்வதன் மூலம் 1.18 பில்லியன் ரூபா மாதாந்த வருமானத்தைப் ஈட்டியது. இருப்பினும், அனர்த்தத்தின் பின்னர் மாதாந்த பயணிகளின் எண்ணிக்கை 5.7 மில்லியன் வரை 29.7% இனால் வீழ்ச்சியடைந்ததோடு, மாதாந்த வருமானம் 400.8 மில்லியன் ரூபாய் வரை 65.9% இனால் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்தது. உள்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட பலத்த

சேதங்கள் காரணமாக தினசரி புகையிரதச் செயல்பாடுகள் 330 இலிருந்து 280 ஆக (15% வீழ்ச்சி) மட்டுப்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக, வேகக் கட்டுப்பாடுகள் மற்றும் புகையிரத வலையமைப்பின் சில பகுதிகள் மூடப்பட்டமை காரணமாக செயல்பாடுகளுக்கு மேலதிகத் தடைகள் ஏற்பட்டன. இந்தத் தடைகளால் சுற்றுலாத்துறை மற்றும் தோட்டப்புற மக்களின் அத்தியாவசிய போக்குவரத்து நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

தித்வா சூறாவளிக்கு முன்னரே, புகையிரதச் சேவையானது தொடர்ச்சியான கட்டமைப்பு மற்றும் நிறுவன ரீதியான சவால்களை எதிர்கொண்டிருந்தது. பழமையான புகையிரதப் பாதை உள்கட்டமைப்புகள், ஆபத்தான நிலையிலுள்ள பாலங்கள் மற்றும் வடிகால் அமைப்புகள், பிரதான பாதைகளில் காணப்படும் மட்டுப்படுத்தப்பட்ட வசதிகள் மற்றும் காலநிலைக்கு தாக்குப்பிடிக்கம் திறன் ஆகியவை இதில் அடங்கும். மனித வலுவால் இயக்கப்படும் அல்லது பகுதியளவு தானியங்கி சமிக்ஞை கட்டமைப்புகளைச் சார்ந்திருத்தல், தாமதமான பராமரிப்புப் பணிகள் மற்றும் நிதி மற்றும் தொழில்நுட்பத் திறனில் நிலவும் மட்டுப்பாடுகள் காரணமாக சேவைகளை வழங்குவது மேலும் கடினமாக காணப்பட்டது.

தினசரி புகையிரதப் பயணங்களைப் பேணிவருவதற்கு 60 புகையிரத இயந்திரங்கள் மற்றும் 100 டீசல் வலு அலகுத் தொகுப்புகள் தேவைப்பட்ட போதிலும், தற்போதுள்ள எண்ணிக்கை அதைவிடக் குறைவாகவே உள்ளது. மேலும், புகையிரத இயந்திரங்கள் மற்றும் பெட்டிகளில் (Rolling stock) கணிசமான பகுதி காலாவதியாகியுள்ள காரணத்தால், நம்பகமான சேவையை வழங்க முடியாமை, பராமரிப்புச் செலவுகள் அதிகரிப்பு மற்றும் செயல்பாட்டு நெகிழ்வுத்தன்மை குறைவடைதல் ஆகியன ஏற்பட்டுள்ளன.

2.1.1.8 எதிர்காலத் திட்டங்கள்

தித்வா சூறாவளியின் பின்னர் சேதமடைந்த புகையிரதப் பாதைகளை விரைவாகவும், முன்னரை விட சிறந்த முறையிலும் புனரமைப்பதற்கு புகையிரதத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. இதற்காக 427 மில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவியைப் பெறுவதற்கான ஆரம்பக்கட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், 230 மில்லியன் அமெரிக்க டொலர் இந்திய கடன் உதவித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தைகளும் நடைபெற்று வருகின்றன.

அதேபோன்று, புகையிரத சேவையைப் பராமரிக்கத் தேவையான புதிய புகையிரதத் தொகுதிகளைக் கொள்வனவு செய்யவும், தற்போதுள்ள தொகுதிகளைப் பழுதுபார்க்கவும் திட்டமொன்று செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கொழும்பு புறநகர் புகையிரத சேவைகளை படிப்படியாக மின்சார புகையிரத சேவைகளாக மாற்றுவதற்கு உதவும் வகையில், கொழும்பு புறநகர் சொகுசு இலகுரக புகையிரத சேவையை ஆரம்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக 20 புதிய

இலகுரக புகையிரதங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

புகையிரத சேவையைப் பயன்படுத்தும் பயணிகளுக்குத் தரமான சேவையை வழங்கும் நோக்கில் புகையிரத நிலையங்களை நவீனமயமாக்குவதற்கான புதிய திட்டமொன்றும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன்படி கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் கனவு பணயமுடிவிடம் (சிஹின கமனாந்தய) வேலைத்திட்டத்திற்கு இணையாக அனைத்து புகையிரத நிலையங்களையும் நவீனமயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், புகையிரத பயணச்சீட்டு சேவைகள் உள்ளிட்ட டிஜிட்டல் சேவைகளை விரிவுபடுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதன்படி, 2026 ஆம் ஆண்டில் "பிரவேஷா" (ரசயளநளாய) டிஜிட்டல் பயணச்சீட்டுத் திட்டத்தின் முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

2.1.1.9 மாஹோ - ஓமந்தை புகையிரதப் பாதை புனரமைப்புத் திட்டம்

மாஹோ தொடக்கம் ஓமந்தை வரையான புகையிரதப் பாதை புனரமைப்புத் திட்டத்தின் ஆரம்பத் திகதி 2019 நவம்பர் 29 ஆகும்.

பின்வரும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு இத்திட்டம் 04 கட்டங்களைக் கொண்டுள்ளது.

மாஹோ தொடக்கம் அநுராதபுரம் வரையான சமிக்ஞைஅமைப்பு நிருமாணித்தல் கருத்திட்டம் இந்திய கொடையின் கீழ் 2025.10.09 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

- தொழில்வழங்குநர் - இலங்கை புகையிரத திணைக்களம்
- ஆலோசனை நிறுவனம் - பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகம்
- ஒப்பந்ததாரர் - இர்கோன் இன்டர்நேஷனல் கம்பெனி

2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட விசேட பணிகள்

1. புகையிரதப் பாதை புனர்நிர்மாணத் கருத்திட்டத்தின் கீழ்:

- வேலைகள் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்த 03 புகையிரத வளாகங்களின் பக்கவாட்டுப் பாதைகளை நவீனமயப்படுத்தும் பணிகளை நிறைவு செய்தல்.
- III ஆம் கட்டத்தின் கீழ், வவுனியா மற்றும் ஓமந்தை இடையிலான AT (Alumino Thermit) வெல்டிங் பணிகளில் 73% வரை நிறைவு செய்தல்.
- மாஹோ தொடக்கம் அனுராதபுரம் வரையிலான குறுக்கு வீதிகளின Shoulder மற்றும் மேற்பரப்பு சீரமைப்புப் பணிகளை நிறைவு செய்தல்.
- இந்தக்கருத்திட்டத்தின் கீழ் மறுசீரமைக்க முன்மொழியப்பட்டிருந்த மாஹோ - அனுராதபுரம் பிரிவில் உள்ள 05 பாலங்களுக்கான மேம்பாலத் Bridge

Girders மற்றும் ஏனைய உபகரணங்களை நாட்டுக்கு இறக்குமதி செய்தல்.

- மாஹோ தொடக்கம் அனுராதபுரம் வரையிலான புகையிரதப் பாதையின் இருபுறமும் நீர் வழிந்தோடத் தேவையான வடிகால் அமைப்புகளை அமைக்கும் பணிகளை முன்னெடுத்தல்.

2. மாஹோ தொடக்கம் அனுராதபுரம் வரையிலான சமிஞ்கைத் திட்டத்தின் கீழ்:

- இந்திய கடன் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவிருந்த இத்திட்டத்தை, இந்திய நன்கொடையாக மாற்றிக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தொடர்புடைய ஆரம்பக் கொடுப்பனவுகளைச் செலுத்தி, 2025.10.09 ஆம் திகதி கருத்திட்டப் பணிகளை ஆரம்பித்தல்.
- திட்டத்தின் வரைபடத் திட்டப் பணிகளை நிறைவு செய்தல்.

எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள்

- நவீனமயப்படுத்தப்பட்டு புகையிரதப் போக்குவரத்திற்காக வழங்கப்பட்டுள்ள மாஹோ தொடக்கம் அனுராதபுரம் வரையிலான புகையிரதப்பாதைப் பிரிவில், அமைக்கப்படவுள்ள சமிஞ்கை முறைமைப் பணிகளை உரிய காலக்கெடுவுக்குள் நிறைவு செய்தல்.
- மாஹோ மற்றும் அனுராதபுரம் இடையிலான பிரிவில் உள்ள 5 பாலங்களை, புதிய மேம்படுத்தப்பட்ட பாலங்களாக மாற்றியமைத்தல்.
- தற்போது வேலைகள் நிறைவு செய்யப்பட வேண்டியுள்ள புகையிரத வளாகங்களில் உள்ள பக்கவாட்டுப் பாதைகளின் நவீனமயமாக்கல் பணிகளை முன்னெடுத்தல்.
- அன்பன்பொல மற்றும் கல்கமுவ இடையில் யானைகளின் நடமாட்டத்திற்காக அமைக்கப்பட்டுள்ள யானை சுரங்கப்பாதையின் நிருமாணப் பணிகளை நிறைவு செய்தல்.
- மாஹோ தொடக்கம் அனுராதபுரம் வரை காணப்படும் புகையிரதக் கடவைகளுக்கு.:. குறுக்கு வீதிகளுக்குப் பொருத்தமான பாதுகாப்பு சமிஞ்கை முறைமைகளை இத்திட்டத்தின் கீழ் நிறுவுதல்.

பௌதீக முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

கருத்திட்டம்	முனனேற்றம்
மாஹோ - ஓமந்தை புகையிரதப் பாதை புனரமைப்புக் கருத்திட்டம்	96%
மாஹோ, அனுராதபுரம் சமிஞ்கை அமைப்பு நிருமாணித்தல் கருத்திட்டம்	15%

2.1.2 மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்

1927 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மோட்டார் வாகனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 1928 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதி மோட்டார் வாகனப் பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டதுடன், தற்போது அது மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் என இயங்கி வருகின்றது.

பிரதான அலுவலகத்தை மையமாகக் கொண்டு அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் மாவட்ட அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 11 மாவட்ட அலுவலகங்கள் ஆன்லைன் (Online) ஊடாகச செயற்படுகின்றன. அந்த அலுவலகங்களில் 5 மாவட்ட அலுவலகங்கள், சாரதி அனுமதிப்பத்திர அலுவல்களுக்கு மேலதிகமாக வாகனப் உரிமைமாற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றது.

2.1.2.1 பணிப் பொறுப்புக்கள்

வாகன ஒழுங்குபடுத்தல் தொடர்பாக ஏனைய பல நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதுடன், நிலவும் நிலைமைகளை உடனுக்குடன் இற்றைப்படுத்தி சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான மற்றும் சூற்றாடல் நட்பு ரீதியிலான போக்குவரத்து அமைப்பொன்றை அனைவருக்கும் உரித்தாக்குதல்.

2.1.2.2 வருமான செலவு விபரம் (2025.12.31 ஆம் திகதியில்)

செலவு விபரம் (2025.12.31 ஆம் திகதியில்)

செலவு வகை	ஒதுக்கப்பட்ட தொகை (ரூபா.மில்)	நிதி முன்னேற்றம் (ரூபா.மில்)	சதவீதம் (%)
மூலதன	1,455.00	951.43	65.39
மீண்டெழும்	3,614.00	1,395.00	38.60
மொத்தம்	**5,069.00**	**2,346.43**	**46.23**

வருமானப் விபரம் (2025.12.31 திகதியில்)

வருமான விபரம்	**இலக்கிடப்பட்ட வருமான உழைப்பு (ரூபா.மில்)**	**உண்மை வருமான உழைப்பு (ரூபா.மில்)**	**உண்மை வருமான உழைப்பு (%)**
சொகுசு வாகன வரி	40,000.00	52,151.08	130.38
மோட்டார் வாகன விற்பனை மீது வரி	18.00	18.85	104.72
மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணம் மற்றும் ஏனைய கிடைப்பனவுகள	18,000.00	20,300.41	112.78
மோட்டார் வாகன உரிமை மாற்றத்தின் போதுவாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் அறவிடப்படும் கட்டணம்	11.00	16.76	152.36
மொத்தம்	**58,029.00**	**72,487.00**	**124.92**

2.1.2.3 மூலதன ஒதுக்கீடுகளுக்குரிய முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

2025 வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு (ரூபா.மில்)		**நிதி முன்னேற்றம் (%)**	**மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்**			**பௌதீக முன்னேற்றம் (%)**
திறைசேரி	**சுய**		**இலக்கு**	**நிறைவு செய்யப்பட்ட**	**நடைபெற்று வருகின்ற**	
1,455	-	65.39	9	9	-	66

2.1.2.4 அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

தொ. இல	நிகழ்ச்சித்திட்டம் /கருத்திட்ட செயற்பாடு	மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூபா.மில்)	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா.மில்)	நிதி முன்னேற்றம்			பௌதீக முன்னேற்றம்		
				இலக்கு (ரூபா.மில்)	செலவு (ரூபா.மில்)	%	இலக்கு	பொழிப்பு முன்னேற்றம் (அலகு)	%
01	**மூலதனச் சொத்துக்களைப் புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் மேம்படுத்தலும் - ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி. 50**								
1.1	கட்டிடப் பராமரிப்பு மற்றும் நிர்மாணப் பணிகள் (தலைமை அலுவலகம்)	25	25	50	20.53	83	-	கருதிட்டங்களுடன் தொடர்புடைய பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.	100
1.2	இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் (தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்)	15	15		9.15	61	-		100
1.3	வாகனம்	10	10		6	60			80
02	**மூலதனச் சொத்துக்களைப் கையகப்படுத்தல் - ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி.156**								
2.1	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்	25	25	156	24.83	99.5	-		100
2.2	இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் (தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்கள்)	125	125		125	100	-		100

2.3	தலைமை அலுவலகத்தின் தரவு அமைப்பினை புதுப்பித்தல்				(307-2-1-1-2103 இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் செலவு விடயத்துக்கு மாற்றப்பட்டது.)				0
03	**திறன் அபிவிருத்தி - ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி. 5**								38
3.1	பணியாட்குழு பயிற்சி	5	5	5	1.9	38	-		100
04	**ஏனைய மூலதனச் செலவு - ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி.. 1,200**								
4.1	சாரதி அனுமதிப்பத்திர அச்சிடல்	1200	1200	1200	719	60	-		100
05	**மாவட்ட செயலகங்களின் பிரதேச அலுவலகங்களை அபிவிருத்தி செய்தல் - ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி . 50**								
5.1	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணப் பணிகள் (ரூ.மி. 48.8 நிதி ஒதுக்கீடு மாவட்டச் செயலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது)	50	50	50	45.02	90	-		100
06	**இலத்திரனியல் வாகன தரவு முறைமை (E-Motoring) - ஒதுக்கப்பட்ட நிதி ரூ.மி . 55**								
6.1	தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்			இந்த 55 ரூபா.மில். நிதி ஒதுக்கீடானது, மூலதனச் சொத்துக்களைக் கையகப்படுத்தல் என்பதன் கீழ் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் (தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்காக) செலவு விடயத்திற்கு (307-2-1-1-2103) 2025.11.07 ஆம் திகதி மாற்றப்பட்டது.					0
6.2	கட்டிடம் மற்றும் நிர்மாணம்								0
6.3	மென்பொருள் விருத்தி								0
	மொத்தம்	**1,455**	**1,455**	**1,455**	**951.43**	**65.39**	**100**		**66**

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு (போக்குவரத்துப் பிரிவு)

2.1.2.5 நிறுவனத்தின் முன்னேற்றத்தைக் காட்டும் ஏனைய தகவல்கள்

வாகனப் பதிவு மற்றும் உரிமை மாற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

தொ.இல	வாகன வகுப்பு	2025.12.31 ஆம் திகதிக்கு புதிய பதிவு வாகனங்கள் எண்ணிக்கை	2025.12.31 ஆம் திகதிக்கு உரிமை மாற்ற வாகனங்கள் எண்ணிக்கை
1.	மோட்டார் கார்கள்	68,047	187,022
2.	இருநோக்கு வாகனங்கள்	3,263	59,047
3.	முச்சக்கர வண்டிகள்	16,843	183,836
4.	மோட்டார் சைக்கிள்கள்	254,817	316,149
5.	கொட்ரி சைக்கிள்கள்	01	305
6.	மோட்டார் முச்சக்கர வேன்கள்	489	713
7.	நில வாகன டிராக்டர்கள்	4,701	10,951
8.	ஒற்றை கெப் ரக வாகனங்கள்	3,673	37,549
9.	மோட்டார் லொறிகள்	2,269	46,958
10.	˙பிறைம் மூவர்ஸ்	588	854
11.	லொறி இழுவைப் பெட்டிகள்/பௌசர்கள	441	677
12.	டிராக்டர் இழுவைப்பெட்டிகள்/பௌசர்கள	3,052	911
13.	நில வாகனங்கள் (கை டிராக்டர்கள்)	1,326	1,928
14.	பஸ் வண்டிகள்	2,096	19,098
15.	நோயாளர் காவு வண்டிகள	31	98
16.	பிரேத.்.பிண காவு வண்டிகள்	01	12
17.	விசேட நோக்க வாகனங்கள்	448	1,448
18.	மோட்டார் ஹோம்.்.இல்லங்கள்	-	-
19.	முச்சக்கர கார்கள்	-	75
20.	போக் லிப்ட்	-	08
	மொத்தம்	**362,086**	**867,639**

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல் (2025.01.01 இருந்து 2025.12.31 வரை)

தொ.இல	விபரம்	சாரதி அனுமதிப்பத்திரங்கள் எண்ணிக்கை
1	புதிய சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கல்	183,737
2	சாரதி அனுமதிப்பத்திரம் புதுபித்தல்	380,737
3	சாரதி அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக தடைசெய்தல்	5,428

வாகன இறக்குமதியாளர்கள் பதிவு செய்தல் (2025.01.01 இருந்து 2025.12.31 வரை)

தொ.இல	விபரம்	அளவு
01	வாகன இறக்குமதியாளர்கள் புதிதாகப் பதிவு செய்தல்	1,077
02	பதிவு செய்து அந்தப் பதிவை புதுப்பித்துள்ள வாகன இறக்குமதியாளர் எண்ணிக்கை	781
03	தொழிற்படு ரீதியான மொத்த பதிவு செய்யப்பட்ட வாகன இறக்குமதியாளர் எண்ணிக்கை	1,858

ஓட்டத்திற்கு பொருத்தமற்ற வாகனங்கள் மற்றும் புகை வெளியேற்றத் தன்மைகளை பாதையில் பரீட்சித்தல் (2025.01.01 இருந்து 2025.12.31 வரை)

தொ. இல	விபரம்	அளவு
01	புகை வெளியேற்ற தரத்த்தன்மையை பரீட்சித்தல்	16,616
02	புகை வெளியேற்றம் காரணமாக ஓட்டத்திற்கு பொருத்தமற்ற வாகனங்களுக்கான பராமிப்பு மற்றும் தடை உத்தரவு வழங்குதல்	2,581

2.1.2.6 அடையப்பெற்ற விசேட சாதனைகள்

சுமார் ஏழு மில்லியன் வாகனங்கள் மற்றும் பதினாறு மில்லியன் சாரதி அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான சேவைகளை, சுமார் ஆயிரம் உத்தியோகத்தர்களைக் கொண்ட ஊழியர் குழாத்தைக் கொண்டு தொடர்ச்சியாக வழங்கி வருவதுடன், நிறுவன ஊழியர்களின் அர்ப்பணிப்புடன் அரசாங்கத்திற்குப் பாரிய வருமான இலக்கொன்றை ஈட்டிக்கொடுக்க முடிந்துள்ளது.

- சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில், கட்டுநாயக்க விமான நிலையத்தில் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கல் கரும்பீடம் ஒன்றை ஆரம்பித்தல்.
- ஆண்டின் வருமான இலக்கைப் பூர்த்தி செய்தல்.
- அம்பாறை மாவட்ட அலுவலகத்தின் சாரதி அனுமதிப் பத்திரங்கள் விநியோக நடவடிக்கைகளை ஆன்லைன் (Online) முறைமையினூடாக முன்னெடுத்தல்.
- பொதுமக்களின் முறைப்பாடுகளை முகாமைத்துவம் செய்வதற்காக உள்ளக விவகாரப் பிரிவொன்றை ஆரம்பித்தல்.

2.1.2.7 பிரச்சினைகள் மற்றும் சவால்கள்

- பொதுமக்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் போதிய இடவசதி இல்லாமை.
- போதுமானளவு தொழில்நுட்ப ஊழியர் குழாம் இல்லாமை.
- பிரதான அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் போதுமானளவு ஆவணக் காப்பக வசதிகள் இல்லாமை.
- மாவட்ட அலுவலகங்களில் இடவசதி தொடர்பான சிக்கல்கள் மற்றும் நடைமுறைப் பரீட்சைகளை

நடத்துவதற்கும் மற்றும் வாகனங்களை ஆய்வு செய்வதற்கும் போதிய வசதிகள் இல்லாமை.

2.1.2.8 எதிர்காலத் திட்டங்கள்

2028 ஆம் ஆண்டில் நூறு ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம், நிலவுகின்ற சவால்கள் மற்றும் சிக்கல்களைக் கண்டறிந்து, பொதுமக்களுக்கு மிகவும் வினைத்திறனான மற்றும் சுமூகமான சேவையை வழங்குவதற்கான திட்டங்களைத் தயாரித்து வருகின்றது.

2.1.2.9 வாகன புகை வெளியேற்ற பொறுப்பு நிதியம்

2.1.2.9.1 வருமான – செலவு விபரம் (2025.12.31 ஆம் திகதி வ ரை)

செலவு வகை	குறித் தொதுக்கப்பட்ட சுய ஒதுக்கீடு (ரூபா.மில்)	நிதி முன்னேற்றம் (ரூபா.மில்)	சதவீதம் (%)
மூலதன	93.00	3.20	3.30
மீண்டெழும்			
தொழிற்பாட்டுச் செலவுகள்	44.00	23.00	52.30
அபிவிருத்திச் செலவுகள்	290.00	130.00	45.00
மொத்தம்	**427.00**	**156.20**	**36.58**

வருமான வகை	இலக்கிடப்பட்ட வருமானம் (ரூபா.மில்)	உண்மை வருமான உழைப்பு (ரூபா.மில்)	உண்மை வருமான உழைப்பு (%)
வாகனப் புகை வெளிவிடல் பரீட்சித்தல் 10% நிகழ்ச்சித்திட்டக் கட்டணம்	362.00	389.00	100.00
நிலையான வைப்பு வட்டி வருமானம்	70.00	77.00	64.00
மொத்தம்	**432.00**	**466.00**	**107.80**

2.1.2.9.2 அபிவிருத்தி கருத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள்/செயற்பாடுகள்	மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூ.மில்.)	ஒதுக்கிய சுய ஒதுக்கீடு (ரூ.மில்.)	நிதி முன்னேற்றம			பௌதீக முன்னேற்றம்		
			இலக்க (ரூ.மில்.)	செலவு (ரூ.மில்.)	%	இலக்கு(அலகு)	பொழிப்புப் படுத்தப்பட்ட முன்னேற்றம்	%
01. வீதி ஓர புகைப் பரீட்சித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்.ஃ.ஓட்டத்திலுள்ள வாகனப் பரீட்சித்தல் நிகழ்ச்சித் திட்டங்கள்.ஃ.புகைப் பரீட்சித்தல் நிலையங்களைக் கண்காணித்தல் உள்ளிட்ட கண்காணிப்பு மற்றும் ஒழுங்குபடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	10.00	10.00	10.00	3.7	37	01. 15,000 எழுமாறான வாகனப் பரீட்சித்தல்கள் 02. மாதாந்தம் 300 ஓட்டத்திலுள்ள வாகனப் பரீட்சித்தல்கள்/ பொதுமக்களிடமிருந்து 100 முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளல் 03. மாதாந்தம் 20 புகைப் பரீட்சித்தல் நிலையங்களைப் பரிசோதித்தல்	15,404 1,212 72	100 100 30
02.1 வாகனப் புகை வெளிவிடல் பரீட்சித்தல்கள் தொடர்பான விழிப்புணர்வுப் செயலமர்வுகளை	23.5	23.5	23.5	4.2	18	வருடத்திற்கு 04 செயலமர்வுகளை நடாத்துதல் துண்டுப் பிரசுரங்கள்/ஒட்டிகள்/நூல்கள் 5000 வீதம்	07 துண்டுப் பிரசுரங்கள் 5000, அறிவுறுத்தல் பத்திரங்கள் 2000, சான்றிதழ்கள் 1000	100

நடாத்துதல் மற்றும் விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரங்கள்/ஸ்டிக் கர்களை (ஒட்டிகள்) அச்சிடுதல்.						அச்சிடுதல்		
02. 2. வெகுஜன ஊடகங்கள் ஊடாக விழிப்புணர்வுத் கருத்திட்டங்களை மேற்கொள்ளல்.	11.8	11.8	11.8	2.47	20	வருடத்திற்கு 04 வீடியோக்கல் தயாரித்தல் சமூக ஊடக ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்	சமூக ஊடக ஊக்குவிப்புத் நிகழ்ச்சித் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. வெகுஜன ஊடக விழிப்புணர்வுத் திட்டங்களை நடாத்துதல் மற்றும் வாகனப் புகையினால் ஏற்படும் சுகாதார அபாயங்கள் தொடர்பான காணொளியொன்று உருவாக்கப்பட்டது.	100
03. உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு மற்றும் மனிதவள அபிவிருத்தி, திறன்விருத்தி மேம்பாட்டுத் திட்டங்களை நடாத்துவதன் மூலம் வாகனப் புகை வெளியேற்ற கருத்திட்ட அலுவலகத்தின் கொள்ளளவை	93.0	93.0	93.0	4.2	5	மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் வேரஹெர வளாகத்தில் வாகனப் புகை வெளியேற்ற பரீட்சித்தல் நிலையமொன்றை தாபித்தல். வாகனப் புகை வெளியேற்ற பரீட்சித்தல் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.	பரீட்சித்தல் நிலையத்தின் நிருமாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன	100

மேம்படுத்தல்.						மனிதவள அபிவிருத்திப் செயலமர்வுகளை நடைமுறைப்படுத்தல்.	வாகனப் புகை வெளிவிடல் நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய தரப்பினருக்கான திறன் விருத்திப் பயிற்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன	80
04. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான நிதி வழங்குதல்	238.4	238.4	238.4	119.7	50	01.தேசிய வளித் தரத்தன்மை இணையதளத்தை உருவாக்குதல். 02. வளியின் தரத்தை அளவிடுதல் மற்றும் அந்தத் தரவுகளைப் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை மற்றும்	நாட்டின் பெரும்பாலான பகுதிகளை உள்ளடக்கும் வகையில் சூழல் வளிமண்டல வளியின் தரம் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக மென்பொருள் ஒன்றை உருவாக்கி, அந்தத் தரவுகளைத் தேவையான தரப்பினருக்கு வழங்குவதற்கான தேசிய நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. வளியின் தரம் குறித்த தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், தேவையான தரப்பினர் அத்தரவுகளைப்	80

						தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திற்கு நிதி வழங்குதல். 03.வேறு கருத்திட்டங்களுக்கு நிதி வழங்குதல்	பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக அவ்விணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. வளி மாசடைவதைக் குறைப்பதற்காக மர நடுகை வேலைத்திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. போக்குவரத்து முகாமைத்துவத்திற்காக வீதி சமிக்ஞைப் பலகைகளில் Count down timers பொருத்துவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது.	
05.வாகனங்களை முறையாகப் பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் தொடர்பான கராஜ்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல்	5.0	5.0	5.0	-	25	கேரேஜ்களின் தொழில்நுட்பவியலாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துதல் மற்றும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றிதழ்களை வழங்குதல்	பயிற்சிப் செயலமர்வுகளை நடத்துவதற்காக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்குத் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.	20

2.1.2.9.3 நிறுவனத்தின் முன்னேற்றத்தைக் காட்டும் ஏனைய தகவல்கள்

- நிறுவனத்திற்காக ISO 9001:2015 தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல்
- UNESCAP நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வளிமாசடைதல் தொடர்பான பிராந்திய நடவடிக்கை வேலைத்திட்டத்தின் (Regional Action Program on Air Pollution) தொழில்நுட்ப ஆலோசனை மாநாட்டில், வாகனப் புகை வெளியேற்றப் பரீட்சித்தல்களுக்கான புதிய தொழில்நுட்பப் பயன்பாடுகள் குறித்த சமர்ப்பித்தலை முன்வைத்துதல்

2.1.2.9.4 சவால்கள் மற்றும் சிக்கல்கள்

- வாகனப் புகை வெளியேற்ற நம்பிக்கை நிதியத்தை (Vehicle Emission Trust Fund) நியதிச்சட்டரீதியான நிறுவனமாக மோட்டார் வாகனச் சட்டத்தில் உள்வாங்குதல்
- பணிகளைச் செய்வதற்குத் தேவையான குறைந்தபட்ச ஊழியர்கள் இல்லாமை மற்றும் நிரந்தரப் பதவிகளைக் கொண்ட உத்தியோகத்தர்கள் எவரும் இல்லாமை.

2.1.2.9.5 அடையப்பெற்ற விசேட சாதனைகள்

வாகனப் புகை வெளியேற்ற நம்பிக்கை நிதியத்தை சட்டரீதியானதாக மாற்றுவதற்காக, மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவையின் கொள்கை ரீதியான அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.

2.1.2.9.6 எதிர்காலத் திட்டங்கள்

- நிலையான போக்குவரத்து முகாமைத்துவத்திற்குப் பொறுப்பான நிறுவனமாக, வாகனப் புகை வெளியேற்ற நம்பிக்கை நிதியத்தின் அலுவலகத்தை தாபித்தல் மற்றும் தேவையான உத்தியோகத்தர்களைப் பணியில் அமர்த்துதல்
- 2028 ஆம் ஆண்டில் புதிய வாகனப் புகை வெளியேற்றத் தரநிலைகள் மற்றும் புதிய பரீட்சித்தல் முறைகளை அறிமுகப்படுத்துவதற்கான ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை ஆரம்பித்தல்
- வளிமண்டலத் தரத்தன்மை முகாமை மற்றும் வீதிப் பாதுகாப்புத் தொடர்பாக தேசிய ஆராய்ச்சி மாநாடொன்றை நடாத்துதல்

2.1.3 இலங்கை போக்குவரத்துச் சபை

"1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின்" கீழ், அப்போது காணப்பட்ட பஸ் கம்பனிகளை/நிறுவனங்களை மக்கள் மயமாக்குவதன் மூலம், இலங்கை போக்குவரத்துச் சபை 1958 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. அதன் பின்னர், பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்ட 2005 ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்து சபைச் சட்டத்தின் மூலம் இலங்கை போக்குவரத்து சபை (இ.போ.ச) நிறுவப்பட்டது. அதன்படி, தற்போது, இலங்கை போக்குவரத்து சபை, 24,468 ஊழியர்களைக் கொண்ட, நாடு முழுவதும் அமைந்துள்ள 107 டிப்போக்கள் மற்றும் 12 துணை டிப்போக்கள் மூலம், இந்நாட்டு மக்களின் தினசரி பயணிகள் போக்குவரத்து சேவை தேவைப்பாட்டில் 40% - 50% வரை சேவைகளை வழங்குகிறது. இதற்காக, தினமும் சுமார் 5,061 பஸ் வண்டிகள் ஓட்டத்திற்காக வழங்கக்கப்படுகின்றன.

12 பிராந்திய அலுவலகங்கள், மூலம் டிப்போக்களுக்கு ஆலோசனை வழங்குவதோடு தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைப்பதன் கீழ், தரமான, வினைத்திறன் கொண்ட மற்றும் பயனுள்ள பஸ்வண்டிச் சேவையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேம்படுத்தப்படுவதோடு இலங்கை போக்குவரத்து சபையினால் பின்வருகின்ற பணிகள் ஆற்றப்படுகின்றன.

- சிசு செரிய,கெமி செரிய மற்றும் நிசிசெரிய ஆகிய நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பொருளாதார இலாபமற்ற வீதிகளில் பஸ் சேவைகளை ஈடுபடுத்தல்
- தூர இடங்களுக்கான பஸ் சேவைகளை ஈடுபடுத்தல்
- அரச மற்றும் தனியார் துறையினருக்கு இடையிலான போக்குவரத்துப் பிரதிநிதியாக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
- விழாக்கள், விசேட நிகழ்வுகள், பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் போன்ற சந்தர்ப்பங்களில் பஸ் சேவைகளை ஒருங்கிணைத்தல்
- பரீட்சைத் திணைக்களத்துடன் உடன்படிக்கை செய்துகொண்டு, பரீட்சை வினாத்தாள்களைக் கொண்டு செல்வதற்கும் ஊழியர் போக்குவரத்துக்கும் பஸ்களை வழங்குதல்
- அஞ்சல் மற்றும் பத்திரிகைப் போக்குவரத்துச் சேவைகளை முன்னெடுத்தல்
- ஓட்டுநர்கள், நடத்துனர்கள், இயந்திர தொழில்நுட்பவியலாளர்கள் மற்றும் மேற்பார்வை உத்தியோகத்தர்களுக்காக கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப் செயலமர்வுகளை நடத்துதல்
- முதியவர்கள் மற்றும் மாணவர்களுக்காக சலுகை விலையிலான பருவக்கால பயணச் சீட்டுகளை வழங்கல்
- பஸ் போக்குவரத்து தொடர்பாக பிரதேச அலுவலகங்கள், திறைசேரி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, மாகாண சபைகள், சம்பந்தப்பட்ட அமைச்சுகள்

மற்றும் ஏனைய பிரதிநிதித்துவ நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படல்

- இலங்கை போக்குவரத்துச் சபையின் சாரதி பயிற்சிப் பாடசாலைகள் மூலம் சிறந்த பயிற்சி பெற்ற, ஒழுக்கமான சாரதிகளை உருவாக்குதல்/வழங்குதல்
- பிரதேச வேலைத்தளங்களில் உற்பத்தி செய்யப்படும் இயந்திரக் தொகுதிகள் / துணைத் தொகுதிகளை (என்ஜீன்கள்,கியர் பெட்டி, ஸ்டாடர் மோட்டர், ஓல்டநேட்டர் மற்றும் இன்ஜெக்டர் பம்பி) ஆகியவற்றை டிப்போக்களுக்கு வழங்குதல்
- மாகாண வேலைத்தளங்களுக்கு மிகவும் அவசியமான மேலதிக உதிரிப்பாகங்களை விநியோகிப்பதற்காக, நாரஹேன்பிட்டியில் உள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைமை அலுவலகக் களஞ்சியசாலையைப் பராமரித்தல்.
- டிப்போக்களின் பஸ் போக்குவரத்துச் சேவைகள் தொடர்பாக பாதுகாப்பு விசாரணைகள், திடீர் சோதனைகள் மற்றும் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

2.1.3.1 வருமான செலவு விபரம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

செலவு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூபா.மில்)	நிதி முன்னேற்றம் (ரூபா.மில்.)	சதவீதம் (%)
மூலதனம்			
2025 வருடத்தின் மொத்த மூலதன செலவு மதிப்பீடு	**10,225.25**	**36.02**	**0.35**
மீண்டெழும்			
பஸ் வண்டிகளின் செயற்பாட்டு செலவு	61,125.67	55,337.16	90.53
பஸ் வண்டிகளின் ஏனைய மாறும் செலவுகள்	10,393.73	8,861.55	85.26
அலுவுலக ஊமியர் சம்பளம் மற்றும் வேதன செலவுகள்	4,524.17	4,007.47	88.58
ஏனைய நிருவாகச் செலவுகள்	6,207.68	3,712.61	59.81
நிதிச் செலவுகள்	6.47	7.26	112.21
பிரதேச வேலைத்தளம்	1,946.26	874.32	44.92
மீண்டெழும் மொத்தம்	**84,203.98**	**72,800.37**	**86.46**
மூலதன மொத்தம்	**10,225.25**	**36.02**	**0.35**
முழு மொத்தம்	**94,429.23**	**72,836.39**	**77.13**

வருமான செலவு அறிக்கை (2025.12.31 ஆம் திகதிக்கு)

மாதம்	மொத்த பஸ் வண்டிகள் எண்ணிக்கை	ஒரு நாளைக்கு ஓட்டத்திற்கு வழங்கிய வண்டிகள் எண்ணிக்கை	ஒரு நாளைக்கு ஓட்டப்பட்ட வண்டிகள் எண்ணிக்கை	ஓட்டப்பட்ட கீ.மீற்றர் எண்ணிக்கை	வீதி ஆவண வருமானம் (ரூ.மி.)	எரிபொருள் செலவு (ரூ.மி.)	மொத்த வருமானம் (ரூ.மி.)	மொத்த் செலவு (ரூ.மி.)
சனவரி	7,137	5,105	4,590	34,426,312	4,347.95	2,854.85	5,871.82	5,976.18
பெப்ருவரி	7,137	5,077	4,382	31,124,503	3,979.22	2,575.31	5,780.56	5,531.83
மார்ச்	7,136	5,084	4,541	34,426,312	4,448.69	2,857.41	6,471.72	5,948.40
ஏப்ரல்	7,135	5,138	4,330	30,116,410	4,271.80	2,655.63	6,015.86	5,795.38
மே	7,135	5,009	4,350	30,817,533	4,118.72	2,598.19	5,956.19	5,790.32
யூன்	7,136	4,961	4,422	30,672,072	4,167.12	2,584.58	6,364.36	5,741.86
யூலை	7,137	4,981	4,428	32,168,579	4,419.78	2,827.42	6,516.64	6,158.18
ஆகஸ்ட்	7,141	4,966	4,431	31,752,732	4,494.98	2,831.13	6,635.68	6,066.10
செப்தெம்பர்	7,137	4,954	4,428	30,955,713	4,168.68	2,697.05	6,403.41	5,967.64
ஒக்தோபர்	7,137	4,985	4,612	31,821,542	4,205.18	2,702.69	6,430.24	5,959.44
நவம்பர்	7,137	4,946	4,138	28,378,636	3,780.79	2,361.32	5,872.47	5,372.67
திசெம்பர்	7,137	4,976	4,352	28,378,652	4,087.85	2,531.88	6,700.92	5,863.87

2.1.3.2 நிறுவனத்தின் மொத்த முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

செலவு வகை		2025 நிதி ஒதுக்கப்பட்ட தொகை		நிதி முன்னேற்றம் (ரூ.மி.)	செயற்படுத்தப்பட்ட கருத்திட்டம்			பௌதீக முன்னேற்றம் (%)
		திறைசேரி (ரூ.மி.)	சுய (ரூ.மி.)		இலக்கு	நிறைவு செய்யப்பட்ட	செயற்படுத்தப்பட்டு வருகின்ற	
2025.12.31	**மூலதன**	1,500.00		1,399.45	1	-	1	கருத்திட்டம் செயற்படுமுத்தப்பட்டு வருகின்றது (திறைசேரி ஒதுக்கீடு கருத்திட்ட 2.1.3.3 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது)
		*2,676.50		2,439.17	7	4	3	
	மூலதன	15,150.00		15,150.00	4	-	4	
2025.12.31	**மூலதன**		10,225.25	57.88	6	-	6	
	மீண்டெழும்		84,203.98	72,800.37	இதனுள் ஊழியர் சம்பளம் உள்ளிட்ட அனைத்து நிருவாகச் செலவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது			

*2025 வருடத்தினுள் மேலதிக ஒதுக்கீடாக இ.போ சபைக்கு வழங்கப்பட்டது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு (போக்குவரத்துப் பிரிவு)

2.1.3.3 அபிவிருத்திக் கருத்திட்டங்களின் தகவல்கள் (2025.12.31 ஆம் திகதிக்கு)

தொ.இ.	நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டம்/செயற்பாடுகள்	மதிப்பீட்டு பெறுமதி (ரூ.மி)	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மி)	நிதி முன்னேற்றம்			பௌதீக முன்ஆேனற்றம்		
				இலக்கு (ரூ.மி)	செலவு (ரூ.மி.)	சதவீதம் (%)	இலக்கு	பொழிப்புப்படுத்தப்பட்ட முன்னேற்றம்	சதவீதம் (%)
திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்கள்									
1	பஸ் வண்டி அணியின் புனரமைப்பு அலுவல்கள் மற்றும் பஸ் அணியை விஸ்தரித்தல்	1,500.00	1,500.00	1,500.00	1,399.45	93.3			
	என்ஜீன்						1,073	என்ஜீன் 415 தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது.	39
	கியர் பெட்டி						1763	கியர் பெட்டிகள் 284 தயாரித்து முடிக்கப்பட்டுள்ளது	15
	பஸ் உடல் கோப்பு / பஸ் பொடி						2070	பஸ் உடற் கோப்புகள் 211 பழுதுபார்க்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது	23
2	பஸ் வண்டி புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் பஸ் வண்டி நவீனமயப்படுத்தல்	758.00	357.47	357.47	154.89	43.33	400	பஸ் வண்டிகள் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 242 பஸ் வண்டிகள் நவீனமயப்படுத்தப்பட்டு டிப்போக்களுக்.்.க வழங்கப்பட்டுள்ளது.	60.5
3	அசோக் லேலண்ட் BS III என்ஜீன் தொகுதி 60 கொள்வனவு செய்து பஸ் வண்டிகளுக்குப் பொருத்துதல்	345.6	345.6	345.6	332.39	96.18	60	என்ஜீன் கிட் 60 கொள்வனவு செய்யப்பட்டு தாபிப்பதற்காக டிப்போக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.	100

4	BS IV என்ஜீன் தொகுதி 60 கொள்வனவு செய்து பஸ் வண்டிகளுக்குப் பொருத்துதல்	374.4	374.4	374.4	360.83	96.38	60	என்ஜீன் கிட் 60 கொள்வனவு செய்யப்பட்டு தாபிப்பதற்காக டிப்போக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.	100
5	BS III AC என்ஜீன் தொகுதி 12 கொள்வனவு செய்து பஸ் வண்டிகளுக்குப் பொருத்துதல்	84	84	84	78.53	93.49	12	என்ஜீன் கிட் 12 கொள்வனவு செய்யப்பட்டு தாபிப்பதற்காக டிப்போக்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.	100
6	YUTONG என்ஜீன் தொகுதி 30 கொள்வனவு செய்து பஸ் வண்டிகளுக்குப் பொருத்துதல்	186	186	186	212.00	98.83	30	பண்டங்கள் பெறப்பட்டு கட்டுபெத்த SLTTS இற்கு வழங்கப்பட்டுள்ளது.	100
7	YUTONG கியர் பெட்டி 30 கொள்வனவு செய்து பஸ் வண்டிகளுக்குப் பொருத்துதல்	28.5	28.5	28.5					
8	டிப்போ பாதை மற்றும் வளாகம் காபட் இடுதல். (மட்டக்குளி, மொரட்டுவை, பாணந்துறை, அவிஸ்ஸாவளை, தலங்கம, கடவத்தை, கிரிந்திவெல, கம்பஹா, மத்துகம)	900	1,300.53	1,300.53	1,300.53	100	டிப்போ வளாகம் 9	அவிஸ்ஸவாளை, பாணந்துறை,கம்பஹா,கிரிந்திவெல,தலங்கம டிப்போக்களின் பணிகள் நிறைவு செயயப்பட்டுள்ளதோடு மொரட்டுவ 80% பணிகள் நிறைவு செயயப்பட்டுள்ளது.மட்டக்குளிய பணிகள் வழங்கப்பட்டுள்ளன. கடவத்தை மற்றும் மத்துகம டிப்போக்கள் நீக்கப்பட்டுள்ளன.	80

கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சித்திட்டத்தின கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

கிளீன் ஸ்ரீலஙகா நிகழ்ச்சித்திட்டத்தின கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியொதுக்கீட்டின் மூலம் பின்வரும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு தற்போது அக்கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன

i. மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளைக் கொண்ட 10 தாழ்தளப் பஸ் வண்டிகளைக் கொள்வனவு செய்தல்: இதன் மொத்த மதிப்பீடு 430.7 மில்லியன் ரூபாவாகும். இந்த பஸ் வண்டிகள் 2026 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படவுள்ளன. 2025.12.31 ஆம் திகதி வரையான நிதி முன்னேற்றம் 340 மில்லியன் ரூபாவாகும்.

ii. புறக்கோட்டை மத்திய பஸ் நிலைய நவீனமயமாக்கல் திட்டம்: இதன் மொத்த மதிப்பீடு 425 மில்லியன் ரூபாவாகும். 2025 ஆம் ஆண்டுக்காக வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடு 120 மில்லியன் ரூபா நிதியொதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தை 2026 ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுவதுடன், 2025.12.31 ஆம் திகதியன்று நவீனமயமாக்கல் பணிகள் 45% மற்றும் கட்டுமானப் பணிகள் 12% முன்னேற்றத்தை எட்டியுள்ளன. 2025.12.31 வரையான நிதி முன்னேற்றம் 119.67 மில்லியன் ரூபாவாகும்.

2.1.4 தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

பஸ் வண்டி மூலம் பயணிகள் போக்குவரத்தை மேற்கொள்வது தொடர்பான தேசியக் கொள்கை தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கும், அந்த கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும் 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டம், 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க இலங்கை போக்குவரத்துச் சபைச் சட்டம், 2017 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து (திருத்தச்) சட்டம் மற்றும் 2025 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் ஆகியவற்றின் மூலம் 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க முதன்மைச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தின் ஊடாக, "பஸ்வண்டிகள் மூலம் பயணிகள் போக்குவரத்து" என்பதற்குப் பதிலாக "வீதிப் போக்குவரத்து" எனும் பதம் மாற்றீடு செய்யப்பட்டதன் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் விடயப் பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. அதற்கமைய இதுவரை காலமும் ஒழுங்குபடுத்தலுக்கு உட்படுத்தப்படாத பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற முச்சக்கர வண்டிகள், அலுவலக போக்குவரத்துச் சேவை மற்றும் பாடசாலை போக்குவரத்துச் சேவைகளுக்காக ஒழுங்குவிதிகளை தயாரிக்கும் அதிகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு கிடைத்துள்ளது

2.1.4.1 வருமான செலவு விபரம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

செலவு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)	சதவீதம் (%)
விசேட கருத்திட்டச் செலவு			
மூலதனம்	54.01	44.21	81.85
மீண்டெழும்			
- திறைசேரி	1,913.00	1,700	88.87
- தே.போ.ஆ.குழு	58.91	46.59	79.08
மொத்தம்	2,025.92	1,790.80	88.39
கருத்திட்டமல்லாத் செலவு			
மூலதனம்	30.60	9.98	32.61
மீண்டெழும்	433.07	364.09	84.07
மொத்தம்	**463.67**	**374.07**	**80.67**

வருமான வகை	இலக்கு வருமானம் (ரூ.மி.)	உண்மை வருமான உழைப்பு (ரூ.மி.)	உண்மை வருமான உழைப்பு (%)
1.அனுமதிப்பத்திர வருமானம்			
வீதி அனுமதிப்பத்திர வருமானம்	134.96	133.29	98.76
வீதி டெண்டர் வருமானம்	414.53	413.40	99.72
மொத்தம்	**549.49**	**546.69**	**99.49**
2. இதர வருமானம்	187.16	170.34	91.01
3. வட்டி வருமானம்	57.23	68.38	119.48
மொத்தம்	**244.39**	**238.72**	**97.68**
முழு மொத்தம்	**793.88**	**785.41**	**98.93**

2.1.4.2 நிறுவனத்தின் மூலதனம் ஒதுக்கீடுகளின் முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

2025 வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு (ரூ.மி.)		நிதி முன்னேற்றம் (%)	மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டம்			பௌதீக முன்னேற்றம் (%)
திறைசேரி	சுய		இலக்கு	நிறைவு செய்யப்பட்ட	மேற்கொள்ளப்பட்டு வருகின்ற	
-	54.01	81.85	5	2	3	80

2.1.4.3 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் (2025.12.31 ஆம் திகதிக்கு)

நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடு	மதிபிடப்பட்ட பெறுமதி (ரூ.மி)	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி)	நிதி முன்னேற்றம்			பௌதீக முன்னேற்றம்		
			இலக்கு (ரூ.மி)	செலவு (ரூ.மி)	%	இலக்கு(அலகு)	பொழிப்புப்படுத்தப்பட்ட முன்னேற்றம் (அலகு)	%
சிசு செரிய	1,628.228	1,628.228	1,628.228	1,562.50	95.96	100 புதிய சேவைகளை ஆரம்பித்தல்	77 புதிய சிசு செரிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டது.	77
கெமி செரிய	26.431	26.431	26.431	2.78	10.51	120 புதிய சேவைகளை ஆரம்பித்தல்	1 புதிய கெமி செரிய சேவை ஆரம்பிக்கப்பட்டது.	0.83
நிசி செரிய	245.34	245.34	245.34	134.72	54.91	600 புதிய சேவைகளை ஆரம்பித்தல்	611 புதிய சேவை ஆரம்பிக்கப்பட்டது .	102
பஸ் முனையத்தை செயற்படுத்தல் மற்றும் பராமரித்தல்	9.5	9.5	9.5	10.01	105	16 நடமாடும் பஸ் வண்டி பரீட்சித்தல் மற்றும் 6 பஸ் வண்டி பரீட்சித்தல் செயலமர்வு நடாத்துதல்	16 நடமாடும் பஸ் வண்டி பரீட்சித்தல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் 5 பஸ் வண்டி பரீட்சித்தல் செயலமர்வு நடாத்தப்பட்டது	95
போக்குவரத்து கேள்வி மற்றும் சேவைத் தர கணக்கெடுப்பு	7.0	7.0	7.0	6.16	88	30 கணக்கெடுப்புக்களை நடாத்துதல்	106 கணக்கெடுப்புக்களை நடாத்தப்பட்டது	100
பஸ் வண்டி பணியாட்குழு பயிற்சி	9.0	9.0	9.0	8.56	95.5	45 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்	44 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன	98
நேர அட்டவணை மற்றும் சேவை மேற்பாரவை	6	6	6	4.96	83	கொழும்பிலிருந்து பஸ் வண்டிகள் பயணம் செய்கின்ற பிரதான நுழைவுப் பாதைகள் 02 இற்காக ஒன்றிணைந்த நேர அட்டவணையை நடைமுறைப்படுத்தல்	புத்தளம் நுழைவு வீதியில் ஒருங்கிணைந்த கால அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. வார நாட்களுக்கு ஏற்ப மாறுபடும் பயணிகளின்	60

							தேவையைக் கருத்திற்கொண்டு, தட்சிண அதிவேக நெடுஞ்சாலையின் ஒருங்கிணைந்த கால அட்டவணைகளைத் திருத்தியமைத்தல் மற்றும் பயணிகளின் தேவைக்கேற்ப தற்போதுள்ள கால அட்டவணைகளைத் திருத்தியமைத்தல்.	
பஸ் வண்டிக் கட்டணம் தயாரித்தல்	0.1	0.1	0.1	0.054	54	வருடாந்த பஸ் கட்டண திருத்தத்தை பிரகடனப்படுத்துதல் மற்றும் எரிபொருள் விலை மாற்றங்களுக்கு ஏற்ப இடைக்கால பஸ் கட்டண திருத்தங்களை மேற்கொள்ளல், கட்டண முரண்பாடுகளை நீக்குதல் மற்றும் பஸ் கட்டண கொள்கையை இக்காலத்திற்கு ஏற்ப புதுப்பித்தல்.	வருடாந்த பஸ் கட்டண திருத்தம் பிரகடனப்படுத்தப் பட்டது. பஸ் கட்டணக் கொள்கையை திருத்தியமைப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதோடு, அக்குழுவினால் பஸ் கட்டண கொள்கையைத் திருத்துவதற்கு தேவையான தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. 37 பாதைகளின் பஸ் கட்டண முரண்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.	55
உள்ளகத் தகவல் தொழில்நுட்ப முறைமை	12.906	12.906	12.906	5.4	42	உள்ளகத் தகவல் தொழில்நுட்ப முறைமைக்கான பராமரிப்பு செலவுகளைச் செய்தல்	உள்ளகத் தகவல் தொழில்நுட்ப முறைமைக்கு செலவாகும் பராமரிப்புச் செலவுகளைச் செய்தல்	55
ஜீ பீ எஸ் உபகரணங்கள் மற்றும் கட்டுப்பாட்டு அறை பராமரிப்பு கிரயம்	8.65	8.65	8.65	8.34	96.4	ஜீ பீ எஸ் மற்றும் கட்டுப்பாட்டு அறையை தொழிற்படு அடிப்படையில் பேணிச்செல்வதற்கான செலவுகளைச் செய்தல்	ஜீ பீ எஸ் மற்றும் கட்டுப்பாட்டு அறையை தொழிற்படு அடிப்படையில் பேணிச்செல்வதற்கான செலவுகளைச் செய்தல	100

ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல்	0.1	0.1	0.1	0.05	50	தேசிய போக்குவரத்து ஆணைக்குழு சட்டத்திற்கு அமைய ஒழுங்கு விதிகளைத் தயாரித்தல்	செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான ஒழுங்குவிதிகள் வரைவு செய்யப்பட்டுள்ளன. மாகாணங்களுக்கிடையிலான பஸ் போக்குவரத்து சேவைகள், பாடசாலை போக்குவரத்து சேவைகள், அலுவலக போக்குவரத்து சேவைகள் மற்றும் முச்சக்கர வண்டிகளுக்கான ஒழுங்குவிதிகள் வரைவு செய்யப்பட்டுள்ளன.	65
நீண்ட தூர சேவை சமிக்ஞை பலகை பொருத்துதல்	1.2	1.2	1.2	0.89	74	750 நீண்ட தூர பஸ் நிறுத்தங்களை ∴தரிப்பிடங்களை அடையாளம் காணுதல்	நீண்ட தூர பயணங்களின் போது பஸ் வண்டிகள் நிறுத்தப்படும் 1836 இடங்கள் இனங் காணப்பட்டுள்ளன.	100
நீண்ட தூர சேவை ஓய்விடங்கள்	0.2	0.2	0.2	0.09	45	நீண்ட தூர சேவை பஸ்கள் நிறுத்தப்படும் சிற்றுண்டிச்சாலைகளின் தரத்தை உயர்த்துதல்	கொழும்பிலிருந்து பஸ்கள் பயணம் செய்யும் 2 பிரதான நுழைவு வீதிகளில், பஸ்கள் நிறுத்தப்படும் சிற்றுண்டிச்சாலைகள் பரிசோதிக்கப்பட்டு, அவற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. புத்தளம் வீதியில் தற்போது பஸ்கள் நிறுத்தப்படும் சிற்றுண்டிச்சாலைகளை	88

							அடையாளம் காண்பதற்கான ஆய்வொன்று நடத்தப்பட்டது.	
வாடிக்கையாளர் சேவை	0.5	0.5	0.5	0.40	80	பொதுமக்களுடனான தொடர்பாடல் முறைகளைத் தயாரித்தல்	பயணிகள், பயணிகள் போக்குவரத்து சேவை உரிமையாளர்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து சேவை சாரதிகளிடமிருந்து தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல் (பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுதல் மற்றும் ஸ்டிக்கர்களைக் காட்சிப்படுத்துதல்). NTC WhatsApp இலக்கத்தின் ஊடாகப் பொதுமக்கள் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கும் விதம் குறித்துப் பயணிகளுக்குத் தெளிவுபடுத்துவதற்காக ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டுள்ளன.	10
மூலோபாயத் திட்டம் தயாரித்தல்	0.1	0.1	0.1	-	-	எதிர்வரும் 5 ஆண்டுகளுக்காக மூலோபாயத் திட்டம் தயாரித்தல்	நிறுவனத்தின் அலுவலர்களால் ஏற்கனவே உத்தேச மூலோபாயத் திட்டம் தயாரிக்கப்பட்டு வரைவு செய்யப்பட்டுள்ளது.	20

வருடாந்த தேசிய போக்குவரத்து புள்ளிவிபரங்களைத் தயாரித்தல்.	2.0	2.0	2.0	0.02	1	தேசிய போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கை 2025 வெளியிடுதல்	2025 திசெம்பர் 31 ஆம் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.	100
பங்குதாரத் தரப்பினர்களுக்காக போக்குவரத்து சார்ந்த அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டம்	1.0	1.0	1.0	0.25	25	பங்குதாரத் தரப்பினர்களை அறிவுறுத்தும் 8 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்	பயணிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் - 1 நடத்துனர்களுக்கான பயிற்சித் நிகழ்ச்சித்திட்டம˙1 போக்குவரத்து அதிகார சபை அதிகாரிகள் - 1 அதிவேக வீதி பஸ் உரிமையாளர்கள் - 1 மாகாணங்களுக்கிடையிலான பஸ் சாரதிகள் - 1 மகளிர் தின தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டம் - 1 மகளிர் தின ஊடகவியலாளர் சந்திப்பு -1 மகளிர் தின ஸ்டிக்கர் ஒட்டும் நிகழ்ச்சித்திட்டம் - 1	100

நகரப் போக்குவரத்து திட்டம்	0.15	0.15	0.15	0.42	280	• மெட்ரோ பஸ் கம்பனிகளுக்கான பஸ் பாதைகளை அடையாளம் காணுதல் • மாற்றுத்திறனாளிகளுக்கான பஸ் பாதைகளை அடையாளம் காணுதல் • உத்தேச பல்மாதிரி போக்குவரத்து நிலையங்களுக்கான போக்குவரத்து திட்டங்களைத் தயாரித்தல்	லங்கா மெட்ரோ ட்ரான்சிட் (தனியார்) பஸ் கம்பனிக்கு 5 பாதைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் மூலம் குருநாகல்-கெட்டுவன பன்மாதிரி போக்குவரத்து இடம்மாறல் நிலையத்திற்கான போக்குவரத்து திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கான பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்காக 6 பாதைகள் அடையாளம் காணப்பட்டு, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.	40
மூலதன கருத்திட்டம்								
உள்ளக தகவல் தொழில்நுட்ப அமைப்பு	6.43	6.43	6.43	6.93	107	உள்ளக தகவல் அமைப்புக்குத் தேவையான மூலதன செலவுகளைச் செய்தல்	உள்ளக தகவல் அமைப்புக்குத் தேவையான மூலதன செலவுகளைச் செய்தல்	50
வாடிக்கையாளர் சேவை அலகு	0.58	0.58	0.58	-	-	அழைப்பு நிலையமொன்றை விருத்தி செய்தல்	பெறுகை அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளது	100
தேசிய போக்குவரத்து	2	2	2	1.97	98.5	தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வளாக	வாகன நுழைவுக் கூடாரத்தின் கூரையை	60

ஆணைக்குழு வளாக மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பு						மறுசீரமைப்பு மற்றும் பராமரிப்பு	நவீனமயமாக்கல், கொங்கிரீட் தளத்திற்கு நீர் புகாத காப்பு (Waterproofing slab) செய்தல், வாகன நுழைவுக்கூடாரம் மற்றும் சுற்றுமதிலுக்கு வர்ணம் பூசுதல், பெஸ்டியன் மாவத்தை பஸ் முனையத்தை நவீனமயமாக்கல் மற்றும் பெஸ்டியன் மாவத்தை பஸ் முனையத்தில் காகங்கள் தங்குவதைத் தடுக்கும் வகையில் உரிய இடங்களை மறைத்தல்	
பெஸ்டியன் மாவத்தை மற்றும் வவுனியா முனையத்தை மறுசீரமைத்தல்	30	30	30	23.58	78.6	பெஸ்டியன் மாவத்தை மற்றும் வவுனியா முனையத்தை மறுசீரமைத்தல்	வவுனியா பஸ் முனையத்தின் சிவிலின் தயாரித்தல், Louver பெனல் தயாரித்தல் மற்றும் வர்ணம் பூசுதுல்	90
பெஸ்டியன் மாவத்தை தரைமேடை அமைத்தல் - அதிவேக பஸ்வண்டிகளுக்காக மேடை அமைத்தல்	15	15	15	11.72	78	பெஸ்டியன் மாவத்தை தரைமேடை அமைத்தல் - அதிவேக பஸ் வண்டிகளுக்காக கட்டம் I மேடை 01 அமைத்தல்	4 பஸ் வண்டிகளை நிறுத்துவதற்காக மேடை அமைத்தல்	100

2.1.4.4 நிறுவனத்தின் முன்னேற்றத்தைக் காட்டும் ஏனைய தகவல்கள்

1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துதல்.

இது 2025 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தப்பட்ட) சட்டம் என 2025 யூன் மாதம் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்டது.

2.1.4.5 சவால்கள் மற்றும் சிக்கல்கள்

- 2025 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் (திருத்தச்) சட்டத்தின் மூலம் நிறுவனத்தின் விடயப்பரப்பு விரிவடைந்துள்ள நிலையில், அதற்குத் தேவையான பயிற்சி பெற்ற மனித வளங்கள் மற்றும் பௌதீக வளங்களைப் பூர்த்தி செய்வதற்கு காலதாமதம் ஏற்படுதல்
- போக்குவரத்துத் தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்கு ஒரு மத்திய தரவு அமைப்பு (Centralized Data System) இல்லாமை மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பிரிவொன்று தாபிக்கப்படாமை
- புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் போது அதற்குத் தகுதியான பயிற்சி பெற்ற அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதில் காணப்படுகின்ற சிக்கல்கள்
- ஒழுங்குமுறை அதிகாரம் வரையறுக்கப்பட்டதாக இருத்தல்
- தனியார் பயணிகள் போக்குவரத்துச் சேவையானது தனிப்பட்ட முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரு துறையாக இருத்தல்

2.1.4.6 எதிர்காலத் திட்டங்கள்

- 2025 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் (திருத்தச்) சட்டத்திற்கான ஒழுங்குவிதிகளைத் தயாரித்து வர்த்தமானியில் வெளியிடுதல்
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் மேலும் தேவைப்படுகின்ற திருத்தங்களை மேற்கொள்ளல்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான மூலோபாயத் திட்டம் / இணைந்த திட்டத்தைத் தயாரித்தல்
- போக்குவரத்து தரவு மையம் ஒன்றைத் (National Transport Data Centre – NTDC) தாபித்தல்
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிறுவனக் கட்டமைப்பை விரிவுபடுத்துதல்
- வெளிநாட்டு நிதி உதவிகளுடன் (ADB, JICA, World Bank) உடன் இணைந்து E-Transport Project, Sector Reform தொடர்பாக ஆய்வு செய்தல் மற்றும் தேசிய

போக்குவரத்துத் திட்டத்தைத் (National Transport Plan) தயாரித்தல்

- Integrated Transport Management System (ITMS): GPS, E-ticketing, Vehicle Monitoring, Complaint Handling ஆகியவற்றை அறிமுகம் செய்தல்
- போக்குவரத்து தொடர்பான தேசிய பயிற்சி நிறுவனமொன்றை நிறுவுதல்.
- வீதிப் பாதுகாப்பு தொடர்பான கருத்திட்டங்களைச் செயற்படுத்துதல்
- தேசிய ரீதியில் செயற்படக்கூடிய ஊடகப் பிரிவொன்றை நிறுவுதல்
- பயணிகள் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் பயணிகள் சங்கங்களை நிறுவுதல்
- சமூக நலனோம்பல் பஸ் சேவைகளை விரிவுபடுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்தல்.
- அனைத்து வீதிப் பயணிகள் போக்குவரத்துச் சேவைகளுக்கான கட்டணங்களை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான வழிமுறையைத் தயாரித்தல்.

2.1.5 தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்

வரையறுக்கப்பட்ட சவுத் வெஸ்டர்ன் பஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான அந்த ஊழியர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்குவதற்காக மருத்துவ நிலையமாக ரத்மலானை டிப்போ வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனம் 1958 இல் பஸ் கம்பனிகள் மக்கள் மயமாக்கப்பட்டதை தொடர்ந்து இலங்கை போக்குவரத்துச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. பஸ் மக்கள் மயப்படுத்தியதன் பின்னர் இது "இ.போ.ச. மருத்துவப் பிரிவு" என அழைக்கப்பட்டது.

சேவைகளை விரிவுபடுத்தும் நோக்கில், ரத்மலானை டிப்போ வளாகத்தில் தாபிக்கப்பட்டிருந்த மருத்துவ நிலையம் 1970 ஆம் ஆண்டில் ”இ.போ.சபைக்குச் சொந்தமான நுகேகொடை, ஹைலெவல் வீதி, இலக்கம் 170 என்ற முகவரிக்கு மாற்றப்பட்டது. தற்போது இது ”தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம்” எனும் பெயரில் போக்குவரத்து அமைச்சின் கீழ் சுய வருமானம் ஈட்டும் ஒரு அரச நியதிச் சட்டரீதியான நிறுவனமாகச் செயற்படுகின்றது.

இது 1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்டது. நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக 1999 இல் நுகேகொடை பிரதான அலுவலகத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது 25 மாவட்டங்களிலும் பரந்து விரிந்த கிளை அலுவலக வலைப்பின்னலைக் கொண்டுள்ளது.

2.1.5.1 நிறுவனத்தின் பிரதான பணிகள்

கனரக வாகன சாரதிகள், இலகுரக வாகன சாரதிகள், சாரதி பாடசாலைகளில் பயிற்சியைப் பெறவுள்ளவர்கள், கௌரவ நீதிமன்றம், இலங்கைப் போக்குவரத்துச் சபை, வீதிப் பயணிகள் போக்குவரத்து

அதிகாரசபை உள்ளிட்ட ஏனைய வெளி நிறுவனங்களினால் அனுப்பி வைக்கப்படுகின்ற சாரதிகளுக்கு மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொண்டு, அவர்களின் தகுதியை உறுதிப்படுத்தி மருத்துவச் சான்றிதழ்களை வழங்குவது இந்நிறுவனத்தின் பிரதான பணியாகும்.

2025 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட மொத்த மருத்துவப் பரிசோதனைகளின் எண்ணிக்கை 1,037,390 ஆகும். இதன் மூலம் 2025 திசெம்பர் 31 வரை சுகாதாரக் காரணங்களினால் சாரதி தொழிலில் ஈடுபடுவதற்குத் தகுதியற்றவர்கள் என மருத்துவர்களால் தீர்மானிக்கப்பட்டவர்களின் விகிதம் 8.25% ஆகும். அதாவது, பரிசோதனைக்குத் தோற்றிய ஒவ்வொரு 100 விண்ணப்பதாரிகளிலும் சுமார் 8-9% பேர் சுகாதார உடல்நலக் குறைபாடுகள் காரணமாக வாகனம் ஓட்டுவதற்குத் தகுதியற்றவர்கள் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது



இனங்காணப்பட்ட நோய்களில் அதிக சதவீதத்திற்குக் காரணம் கண்பார்வைக் குறைபாடு என்பது மேற்படி மருத்துவ சான்றிதழ் விநியோகித்தல் முன்னேற்ற வரைபடம் மூலம் தெளிவாகின்றது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு (போக்குவரத்துப் பிரிவு)

2.1.5.2 வருமானம் - செலவு விபரம் (2025.12.31 ஆம் திகதி)

செலவு வகை	ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)	சதவீதம் (%)
மூலதன	101.90	25.37	24.90
மீண்டெழும்	1,090.00	1,052.00	96.51
மொத்தம்	**1,191.90**	**1,077.37**	**90.39**

வருமான வகை	இலக்கிடப்பட்ட வருமானம் (ரூ.மி.)	உண்மை வருமான உழைப்பு (ரூ.மி.)	உண்மை வருமான உழைப்பு (%)
வைத்திய சேவை	1,694.00	1,708.00	100.82
ஏனைய	110.00	156.00	141.82
மொத்தம்	**1,804.00**	**1,864.00**	**103.33**

2.1.5.3 நிறுவனத்தின் மூலதன ஒதுக்கீடுகளுக்குரிய முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

2025 வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு (ரூ.மி)		நிதி முன்னேற்றம் (%)	செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்			பௌதீக முன்னெற்றம் (%)
திறைசேரி	சுய		இலக்கு	நிறைவு செய்யப்பட்ட	மேற்கொள்ளப்பட்டு வருகின்ற	
-	101.9	24.90	15	5	10	45

2.1.5.4 அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

தொ. இல	நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடு	மதிபிடப்பட்ட பெறுமதி (ரூ.மி)	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி)	நிதி முன்னேற்றம்			பௌதீக முன்னேற்றம்		
				இலக்கு (ரூ.மி)	செலவு (ரூ.மி)	(%)	இலக்கு(அலகு)	பொழிப்புப்படுத்தப்பட்ட முன்னேற்றம் (அலகு)	(%)
01	தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகத்திற்காக கணனி, உதிரிப்பாகங்கள் கொள்வனவு								
	PC	14	14	14	13.22	94.43	42	39	92.85
	Fire wall	12	12	12	-	-	-	-	-
	Multi-function printers	1	1	1	0.94	94	6	6	100
	Bar code reader	0.05	0.05	0.05	-	-	தேவைக் கேற்ற கொள்வளவு செய்யப்பட்டது	-	-
	Network switch	1.2	1.2	1.2	1.14	95	1	1	100
	POS system for pharmacy	1	1	1	-	-	1	ஏற்கனவே குறித்த பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது	5
02	தலைமை அலுவலகத்திற்கு CCTV கெமரா பொருத்துதல்	0.4	0.4	0.4	0.4	100	5	5	100
03	அலுவலகத்தின் சாரதி மற்றும் பாதுகாப்பு	3	3	3	3	100	1	1	100

தொ. இல	நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடு	மதிபிடப்பட்ட பெறுமதி (ரூ.மி)	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி)	நிதி முன்னேற்றம்			பௌதீக முன்னேற்றம்		
				இலக்கு (ரூ.மி)	செலவு (ரூ.மி)	(%)	இலக்கு(அலகு)	பொழிப்புப்படுத்தப்பட்ட முன்னேற்றம் (அலகு)	(%)
	உத்தியோகத்தர் ஓய்வறையின் நிருமாணம் பணிகளை நிறைவு செய்தல்								
04	தலைமை அலுவலகத்தில் சூரிய சக்தி தகடுகளை (Solar Panels) நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்	25	25	25	-	-	-	பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன	10
05	தலைமை அலுவலகத்தின் இடிந்து விழுந்திருந்த பின்புற மதில் சுவரின் நிருமாணப் பணிகளை நிறைவு செய்தல்	1.75	1.75	1.75	1.75	100	1	1	100
06	கம்பஹா, கேகாலை, காலி, மாத்தறை மற்றும் பொலன்னறுவை அலுவலகங்களை அரச கட்டடங்களில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்	24	24	24	-	-	5	கம்பஹா, காலி, மற்றும் பொலன்னறுவை ஆகிய அலுவலகங்களுக்கான அரச கட்டடங்கள் கண்டறியப்பட்டுள்ளன	10

தொ. இல	நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடு	மதிபிடப்பட்ட பெறுமதி (ரூ.மி)	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி)	நிதி முன்னேற்றம்			பௌதீக முன்னேற்றம்		
				இலக்கு (ரூ.மி)	செலவு (ரூ.மி)	(%)	இலக்கு(அலகு)	பொழிப்புப்படுத்தப்பட்ட முன்னேற்றம் (அலகு)	(%)
07	தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களுக்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.	2	2	2	1.4	70	தேவைப்பாட்டுக்கு அமைய கொள்வனவு செய்யப்படுகின்றது		90
08	தலைமை அலுவலகத்தை குளிரூடடல் செய்தல் (ரூபா.மில்லியன் 7). தேவையேற்படின் ஏனைய அலுவலகங்களுக்காக (ரூபா.மில்லியன் 2).	9	9	9	1.89 (ஏனைய அலுவலகங்களுக்காக)	21	9 (தலைமை அலுவலகத்தின் குளிரூட்டல் இயந்திரம்)	9 குளிரூட்டல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு அறிக்கை நிறைவு செய்யப்பட்டுள்ளது	20 - தலைமை அலுவலகம் 100- கிளைகள்

தொ. இல	நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடு	மதிபிடப்பட்ட பெறுமதி (ரூ.மி)	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி)	நிதி முன்னேற்றம்			பௌதீக முன்னேற்றம்		
				இலக்கு (ரூ.மி)	செலவு (ரூ.மி)	(%)	இலக்கு(அலகு)	பொழிப்புப்படுத்தப்பட்ட முன்னேற்றம் (அலகு)	(%)
09	தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களுக்கு மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.	2	2	2	0.65	32.5	தேவைப்பாட்டுக்கு அமைய கொள்வனவு செய்யப்படுகின்றது		10
10	ஊழியர் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.	4	4	4	-	-	1	-	-
11	உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தல்.	2	2	2	0.98	48	தேவைப்பாட்டுக்கு அமைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மேற் கொள்ளப்படுகின்றன		75
	மொத்தம்	101.9	101.9	101.9	25.37	24.9			

2.1.5.5 நிறுவனத்தின் முன்னேற்றத்தைக் காட்டும் ஏனைய தகவல்கள்

- மருத்துவப் பரிசோதனைகளில் சித்தியடைவதற்குத் தேவையான சுகாதாரத் தகுதிகள் பற்றிய சரியான புரிதல் இல்லாத காரணத்தினால், வாடிக்கையாளர்கள் முறையற்ற வழிகளில் மருத்துவச் சான்றிதழ்களைப் பெறுவதைத் தடுக்க மருத்துவ அளவுகோல்களைப் புதுப்பித்தல் மற்றும் அது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களின் கருத்துக்கள், முறைப்பாடுகள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் முறைப்பாடுகளுக்கு விரைவாகப் பதிலளித்தல்.

- தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளைத் தயாரித்தல்.

- பணியாட் குழுவினர்களுக்கான பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- பணியாளர் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுத்தல்.

- வினைத்திறன் தடைப் பரீட்சைகளை (Efficiency Bar Exams) நடாத்தி, ஊழியர்களைத் தரப்படுத்துதல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளல்

- பணியாட்குழுவினர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிப் பாடநெறிகளுக்கான வாய்ப்புகளை வழங்குதல்.

- ஒரு வருடகாலமாக நிலவிய வெற்றிடங்களுக்கு உரிய நிறுவனங்களின் அனுமதியுடன் உடனடியாக ஆட்சேர்ப்பு செய்தல்.

- வருடாந்த இடமாற்றக் கொள்கையை முதன்முறையாக நடைமுறைப்படுத்துதல்.

- கிளை அலுவலகங்களின் பணிகளை விதிமுறைப்படுத்துவதற்காக மேலதிக மற்றும் வெற்றிடமாகவுள்ள பணியாளர்களை மீளாய்வு செய்து இடமாற்றம் செய்தல்.

- நிறுவனம் தொடர்பாக பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுததும் நிகழ்ச்சித்திட்டமாக ஊடகப் பிரிவு ஒன்றை நிறுவுதல்.

- கிளை அலுவலகங்களின் வசதிகளை மேம்படுத்துதல்.

- “மறுமலர்ச்சி நகரம்” எனும் கருப்பொருளின் கீழ் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, மஹர பிரதேச சபையின் தலைமையின் கீழ் 2025.09.15 ஆம் திகதி பொதுமக்களின் நலன்கருதி சாரதி அனுமதிப்பத்திற்கான மருத்துவச் சான்றிதழ்களை வழங்கும் நடமாடும் சேவை எல்தெனிய

அபினவாராமயவில் நடைபெற்றது. இதன் போது 152 பயனாளிகளுக்குச் சேவை வழங்கப்பட்டது.

- ”கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்தின் கீழ் மாவட்ட மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள நடமாடும் சேவை மற்றும் விசேட மக்கள் நலன்புரி திட்டத்தின் கீழ், 2025.11.26 ஆம் திகதி தொம்பே பிரதேச செயலகப் பிரிவை மையப்படுத்தி மே.்.கம் ஓவிட்டிகம போதிராஜ மகா வித்தியாலயத்தில் மருத்துவ முகாம் ஒன்று நடாத்தப்பட்டது.

- 2025.11.26 மற்றும் 27 ஆகிய இரு தினங்களில் லுணுகம்வெஹெர பிரதேச செயலகப் பிரிவை மையமாகக் கொண்டு சூரியவெவ மற்றும் திஸ்ஸமஹாராம பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியதாக நடத்தப்பட்ட நடமாடும் சேவை வேலைத்திட்டத்தின் கீழ் 141 பயனாளிகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சாரதி அனுமதிப்பத்திம் புதுப்பிப்பதற்காக மருத்துவச் சான்றிதழ் பெற வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறனான மற்றும் திருப்திகரமான சேவையை வழங்கும் நோக்கில், மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் நுகேகொடை பிரதான அலுவலக வளாகத்தில் தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் சேவை 2025.09.30 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

- போதைப்பொருள் பாவித்துவிட்டு வாகனம் செலுத்தும் சாரதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, கொழும்பு நகருக்குள் நுழையும் வீதிகளில் பொதுப் போக்குவரத்து பஸ் வண்டிகளை எழுமாறாகப் போதைப்பொருள் சோதனைக்கு உட்படுத்தும் முன்னோடித் திட்டத்தின் ஆரம்ப விழா, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பிமல் ரத்நாயக்க அவர்களின் தலைமையில் 2025.11.24 ஆம் திகதி நடைபெற்றது.

2.1.5.6 சவால்கள் மற்றும் பிரச்சினைகள்

- **நிறுவனத்திற்கு நிரந்தர வைத்திய அதிகாரிகளை நியமிப்பதில் உள்ள சிரமம்.**

- **பணியாட்குழு சம்பளம் மற்றும் கொடுப்பனவுப் பிரச்சினைகள்:** முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் சம்ளம் மற்றும் விசேட கொடுப்பனவுகளுக்காக அனுமதி பெறுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக ஊழியர்களின் சம்பளம்

மற்றும் சலுகைகளை அதிகரிப்பதில் தடை ஏற்பட்டுள்ளது. ஏனைய அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுடன் ஒப்பிடுகையில் இலாபம் பெறும் நிறுவனமாக இருப்பினும் இந்த நிறுவனத்தின் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் கவர்ச்சிகரமானதாக இல்லை என்பதால் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

2.1.5.7 அடையப்பெற்ற விசேட சாதனைகள்

- நீண்டகாலமாக நடைமுறைப்படுத்த முடியாமல் இருந்த மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் மற்றும் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனம் ஆகியவற்றிற்கு இடையிலான சேவைகளை ஒன்லைன் (Online) ஊடாக இணைத்து, நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மருத்துவச் சான்றிதழ்களை வழங்கும் முறைமையை 2025.04.07 முதல்: நுகேகொடை பிரதான அலுவலகம் மற்றும் வேரஹெர கிளை அலுவலகத்திலும், 2025.10.01 ஆம் திகதி தொடக்கம் கம்பஹா மற்றும் அம்பாறை கிளை அலுவலகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டன.

2.1.5.8 எதிர்காலத் திட்டங்கள்

- இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான தெரிவு செய்யப்பட்ட 25 டிப்போக்களின் ஊழியர்களின் தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு குறித்து ஆராயந்து பார்த்தல்.
- சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களின் இரத்தச் சர்க்கரை அளவு 250mg/dL இற்கும் அதிகமாக இருக்கும் பட்சத்தில், அவர்களுக்கு மேலதிகமாக HbA1C பரிசோதனையை நடாத்துதல்.
- புதிய அரசாங்கக் கொள்கையின்படி அம்பாறை, மட்டக்களப்பு, பதுளை, திருகோணமலை, அனுராதபுரம், மாத்தளை மற்றும் குருநாகல் ஆகிய கிளை அலுவலகங்களை அரச கட்டடங்களில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- கம்பஹா, கேகாலை, காலி மற்றும் மாத்தறை கிளை அலுவலகங்களில் CCTV கெமராக்களைப் பொருத்துதல்.
- அனைத்துக் கிளை அலுவலகங்களிலும் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வரிசை முகாமைத்துவ முறைமையை (Queue Management System) அறிமுகப்படுத்துதல்.
- நிறுவனத்தின் உட்புறத்தில் உள்ள மருந்தகத்தை வெளித்தரப்பினருக்கும் பயன்படும் வகையில் திறத்தல்.

- மின்சாரம் தடைப்படும் வேளையில் சேவைகளைத் தடையின்றி வழங்குவதற்காக மட்டக்களப்பு, காலி மற்றும் பதுளை கிளைகளுக்கு மின்பிறப்பாக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்தல்.

- நிறுவனத்தின் ஊழியர்களைப் பயிற்சித் திட்டங்களுக்கு உட்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் திருப்தியை மையமாகக் கொண்ட தரமான சேவையை வழங்குதல

- மாத்தறை, காலி மற்றும் கம்பஹா கிளை அலுவலகங்களை வளிசீராக்கம் செய்தல்.

2.1.6 வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை

1998 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க மோட்டார் வாகனச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்திற்கு அமைய 213 (அ) பிரிவின் கீழ் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை நிறுவப்பட்டுள்ளதோடு 1387/4 ஆம் இலக்க மற்றும் 2005 ஏப்ரல் 07 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தின் மூலம் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையினால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பணிகள் பின்வருமாறு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

1) கீழே தரப்பட்டுள்ளவைகள் பற்றிய கணினிமயப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தைப் பேணி வருதல்:
   - வாகனங்களின் எண்ணிக்கை, அவற்றின் பண்புகள் மற்றும் உள்ளடக்கம்.
   - வீதி விபத்துக்கள் மற்றும் இறப்புகள்.
   - வீதிப் பாதுகாப்பு தொடர்பான உள்நாட்டு மற்றும் சர்வதேச புள்ளிவிபரங்கள்.
2) வீதிப் பாதுகாப்பு தொடர்பான விடயங்களைக் கொண்ட இணைய வசதியுடன் கூடிய நூலகத்தைப் பேணி வருதல்
3) வீதிப் பாதுகாப்பு தொடர்பான விடயங்கள் பற்றிய ஆராய்ச்சிகளுக்கு உதவி வழங்குதல்.
4) சமமான சர்வதேச ரீதியிலான நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணுதல் மற்றும் அனுபவ நிபுணத்துவ அறிவைப் பரிமாறிக்கொள்ளுதல்.
5) வீதிப் பாதுகாப்பு மற்றும் தொடர்புடைய விடய கருத்திட்டங்கள் தொடர்பில் பொறுப்பு வகிக்கின்ற அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குத் தேவையான அறிவு மற்றும் தகவல்களை வழங்குதல்.
6) வீதிப் பாதுகாப்பு தொடர்பான திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதல்.

7) அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு இடையிலான வீதிப் பாதுகாப்புப் பணிகளை ஒருங்கிணைத்தல்.

8) அடையாளம் காணப்படாத வாகனங்களினால் விபத்துக்குள்ளானவர்களுக்கும் மற்றும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் நிதி உதவிகளை வழங்குதல்.

9) வீதிப் பாதுகாப்புப் பணிகளுக்காக நிதி மற்றும் ஏனைய உதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல்.

10) வீதிப் பாதுகாப்பு தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

“அனைவருக்கும் பாதுகாப்பான வீதி அமைப்பு” எனும் தொனிப்பொருளின் கீழ் செயற்படும் ஒரேயொரு அரச நிறுவனம் வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையாகும் என்பதோடு, தற்போது இந்த நிறுவனம் போக்குவரத்து அமைச்சின் கீழ் இயங்கி வருகின்றது. வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படும் ஒரு தலைவரின் தலைமையின் கீழ், மற்றும் 16 அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் குழுவொன்றைக் கொண்டுள்ளது.

2004 நவம்பர் 24 ஆம் திகதிய 1368/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் ஊடாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நிதியம் தொடர்பான கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளதோடு, 2021 செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிய 2245/31 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம், மூன்றாம் தரப்பு இடர்.்.ஆபத்து தொடர்பில் சந்தர்பத்திற்கேற்ப காப்புறுதி ஆவணங்கள் அல்லது பிணைகளை வழங்கும் ஒவ்வொரு காப்புறுதியாளர் அல்லது நபர், அந்த காப்புறுதிக் கட்டணத்தில் 2% வீதத்தை வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் நிதியத்துக்குப’ பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

2.1.6.1 வருமான -செலவு விபரம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

செலவு வகை	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)	சதவீதம் (%)
மீண்டெழும்	8.91	4.5	50.5
மூலதனம்	73.7	60.98	82.74
மொத்தம்	82.61	65.48	79.26

வருமான வகை	இலக்கிடப்பட்ட வருமானம் (ரூ.மி.)	உண்மை வருமான உழைப்பு (ரூ.மி.)	உண்மை வருமான உழைப்பு (%)
காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் 2% மூன்றாம் தரப்பு காப்புறுதி பங்களிப்பு நிதி	84.65	79.74	94.20
நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் திறைசேரி உண்டியல் வருமானம்	63.32	49.48	78.14
மொத்தம்	**147.97**	**129.22**	**87.33**

2.1.6.2 நிறுவனத்தின் மூலதன ஒதுக்கீடுகளுக்குரிய முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

ஒதுக்கீடு (ரூ.மி) சுய ஒதுக்கீடு	நிதி முன்னேற்றம் (%)	செயற்படுத்தப்பட்ட கருத்திட்டம்			பௌதீக முன்னேற்றம் (%)
		இலக்கு	முடிக்கப்பட்ட	செயற்படுத்தப்பட்டு வருகின்ற	
73.7	82.74	15	4	11	76.75

2.1.6.3 அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடு	மதிபிடப்பட்ட பெறுமதி (ரூ.மி)	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி)	நிதி முன்னேற்றம்			பௌதீக முன்னேற்றம்		
			இலக்கு (ரூ.மி)	இலக்கு (ரூ.மி)	%	இலக்கு(அலகு)	பொழிப்புப்படுத்தப்பட்ட முன்னேற்றம் (அலகு)	%
அதிவேகமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை பொலிஸாருக்குத் தேவையான நிதி உதவியை வழங்குதல் speed guns கொள்வனவு செய்வதற்காக	50	50	50	50	100	100%	2025.01.08 ஆம் திகதி 50 மில்லியன் ரூபாவை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், 2025.12.31 ஆம் திகதியாகும் போது இலங்கை பொலிஸாரினால் வேகஅளவீட்டு மானிகளை கொள்வனவு செய்வதற்கான பெறுகைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.	100
மோதிவிட்டுத் தப்பிச் சென்ற வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சித்த்திட்டம்	08	08	08	1.85	23	100%	2025 ஆம் ஆண்டு முடிவடையும் போது கிடைக்கப்பெற்றிருந்த தகுதியுள்ள அனைத்து விண்ணப்பப்பத்திரங்களும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.	100
வாகன விபத்துக்களினால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு நிதி உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்	05	05	05	5.26	100	100%	2024 ஆம் ஆண்டில் கோரப்பட்ட அனைத்து விண்ணப்பப்பத்திரங்களிலிருந்து தகுதியுள்ள அனைத்து விண்ணப்பங்களுக்கும் நட்டஈடு வழங்கப்பட்டுள்ளன.	100
மேல் மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஒன்றிற்கு, கொழும்பு மாநகர சபையின் (விஹாரமகாதேவி பூங்காவில் அமைந்துள்ள) வீதி பாதுகாப்பு சிறுவர் அலகில் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடாத்துதல்	0.4	0.4	0.4	0.4	100	100%	தேசிய சாரணர் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் புனித ஜோன் ஆம்புலன்ஸ் சேவையுடன் இணைந்து வீதிப் பாதுகாப்பு தொடர்பான பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.	100

*** பௌதீக ரீதியான முன்னேற்றம் 100% ஆகக் காணப்படும் திட்டங்களின் தகவல்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ளன.**

2.1.6.4 சவால்கள் மற்றும் பிரச்சினைகள்

i. வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையில் தற்போது பதில் பணிப்பாளர் ஒருவர், பதில் கணக்காளர் ஒருவர் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சின் போக்குவரத்துப் பிரிவிலிருந்து இணைக்கப்பட்ட 6 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஒரு முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், ஒரு புகையிரத அலுவலக உதவியாளர் மற்றும் ஒரு சாரதி ஆகியோர் அலுவலகப் பணிகளுக்காக அமர்த்தப்பட்டுள்ளனர். நிறுவனத்தின் விடயப்பரப்பைக் கருத்திற்கொள்ளும் போது, நிறுவனத்தின் நடவடிக்கைகளை மிகவும் உகந்த மட்டத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கு இந்த ஊழியர் குழாம் போதுமானதாக இல்லை.

ii. கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் பணிப்பாளர், கணக்காளர் போன்ற நிறுவனத்தின் அலுவலகப் பணிகளுக்கு அத்தியாவசியமான பதவிகள் அவ்வப்போது வெற்றிடமாக இருந்தமையால், வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் செயற்பாடுகளை உகந்த மட்டத்தில் பேண முடியாமல் போயுள்ளது.

2.1.6.5 எதிர்காலத் திட்டங்கள்

i. வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையை, போக்குவரத்து பாதுகாப்பு தொடர்பான ஆணைக்குழுவாக நிறுவுதல்.
ii. வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய தரவு அமைப்பை நிறுவுதல்.
iii. வீதிப் பாதுகாப்பு தொடர்பான 2025 – 2026 தேசியச் செயல் திட்டத்தை மீளாய்வு செய்து, 2027 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்காக புதிய செயல் திட்டத்தைத் தயாரித்தல்.
iv. அதிவேகமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை பொலிஸாருக்குத் தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல்.
v. போதைப்பொருள் பயன்படுத்திக் கொண்டு வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டத்தில் இலங்கை பொலிஸாருக்கு ஆதரவளித்தல்.
vi. பஸ் சாரதிகளுக்கு பயணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான சட்டப் பின்னணியை உருவாக்குதல்.
vii. வாகனங்களின் தகுதிச் சான்றிதழ்களை வழங்குவதற்கான சட்டப் பின்னணியைத் தயாரித்தல்.
viii. மலைப்பாங்கான பகுதிகள் மற்றும் அதிக அபாயம் கொண்ட இடங்களை மையப்படுத்தி வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தேசியத் திட்டமொன்றைத் தயாரித்தல்.
ix. இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளில் செயற்கை நுண்ணறிவு (AI) கெமராக்களைப் பொருத்துதல்.
x. பாடசாலை மாணவர் போக்குவரத்து வாகனங்களுக்கு நிதி வசதிகளை வழங்குவதற்கான வழி முறையொன்றை

உருவாக்குவதற்கான வேலைத் திட்டத்தைத் தயாரித்தல்.

xi. பொதுப் போக்குவரத்து ஊடகங்களைப் பயன்படுத்தும் பயணிகள் வீதி விபத்துக்குள்ளாகும் போது, அவர்களுக்கு அதிகபட்சமாக ஒரு மில்லியன் ரூபா இழப்பீடு வழங்குவதற்கான முறையொன்றைத் தயாரித்தல்

2.1.7 வ/ப லக்திவ பொறியியல் (தனியார்) நிறுவனம்

1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க, அன்றைய போக்குவரத்து அமைச்சரினால் 1970.11.20 ஆம் திகதி 14933 இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இதன் மூலம் "ஆட்டோமொபைல் தனியார் (லங்கா) லிமிடெட்" நிறுவனத்திற்குச் சொந்தமான 24 ஏக்கர் நிலப்பரப்புடைய இலங்கை போக்குவரத்துச் சபையின் பயன்பாட்டிற்காகக் கையகப்படுத்தப்பட்டு, இந்நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கான முதற் படிகள் எடுக்கப்பட்டன.

அதன்படி, ஏக்கல மத்திய வேலைத்தளம் 1974.02.15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பம் முதலே இந்நிறுவனம் புதிய பஸ் வண்டிகளின் உடற்பகுதிகளை.ஃ. உடற்கோப்புகளை அமைத்தல் மற்றும் பழைய பஸ்களின் உடற்பகுதிகளைப் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளை முதன்மையாக மேற்கொண்டு வருகின்றது. இந்த வேலைத்தளம் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருந்தது. ஒரு பிரிவு மத்திய வேலைத்தளமாக இயங்கியதுடன், ஏக்கல வேலைத்தளம் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமானதாக இருந்தது.

மக்கள் மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1993.06.14 ஆம் திகதி இந்த இரண்டு வேலைத்தளங்களும் ஒன்றிணைக்கப்பட்டு, "ஏக்கல பொறியியல் பணிகள் தொடர்பான தனியார் நிறுவனம்" எனத் தனியார் மயமாக்கப்பட்டது.

பின்னர், இந்தத் தனியார் நிறுவனம் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 400 "கிரேட்வோல்" பஸ் வண்கெளுக்கான கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. 2001 ஆம் ஆண்டு முதல் போக்குவரத்து விடயப்பொறுப்பு அமைச்சின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனமாக "லக்திவ பொறியியல் தனியார் நிறுவனம்" என இது முகாமைத்துவம் செய்யப்பட்டது. மேலும், பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில், பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகளை இணைத்துக்கொண்டு நாட்டுக்குத் தேவையான பஸ்வண்டி உடற் பகுதிகளைத்.ஃ. கோப்புகளை தயாரிக்கும் பணிகளை இந்நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.

2.1.7.1 பிரதான பணிகள் மற்றும் பொறுப்புகள்

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளைக் குறைந்த செலவில், உயர்தரத்துடன் பழுதுபார்த்து பொதுமக்களின் சேவைக்காகப்

பயன்பாட்டுக்கு விடுவதே இந்நிறுவனத்தின் முதன்மை நோக்கமாகும். இதன்போது, இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பழுதடைந்த மற்றும் விபத்துக்குள்ளான பஸ் வண்டிகளின் உடற் பகுதிகளைப் பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய, ஒரு பிரிவில் பஸ் வண்டிகளின் உடற் பகுதிகள் பழுதுபார்க்கப்படுவதுடன், நவீன இயந்திர உபகரணங்களைக் கொண்ட வாகன சேவை நிலையம் மற்றைய பிரிவில் இயங்கி வருகின்றது. கடந்த ஆண்டுகளில் மாதம் ஒன்றுக்கு 08 – 10 வரையான பஸ் வண்டி உடற்பகுதிகளே பழுதுபார்க்கப்பட்டன. ஆனால், 2025 ஆம் ஆண்டில் மாதம் ஒன்றுக்கு 10 – 14 வரையான பஸ்வண்டிகள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன.

2.1.7.2 வருமானம் - செலவு விபரம் (2025.12.31ஆம் திகதி)

செலவு வகை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி)	சதவீதம் (%)
மூலதனம்	7.0	6.4	91
மீண்டெழும்	314.0	291.3	92
மொத்தம்	**321.0**	**297.7**	**92**

வருமான வகை	இலக்கிடப்பட்ட வருமானம் (ரூ.மி.)	உண்மை வருமான உழைப்பு (ரூ.மி.)	உண்மை வருமான உழைப்பு (%)
பஸ் வண்டி பழுதுபார்ப்பு	324.0	287.6	88
மொத்தம்	324.0	287.6	88

மீண்டெழும் செலவு வகை	செய்யப்பட்ட செலவு (ரூ.மி.)
ஊழியர் சம்பளம் மற்றும் வேதனம்	154.53
உதிரிப்பாகம்	130.01
ஏனைய செலவுகள்	6.94
மொத்தம்	**291.48**

பழுதுபார்க்கப்பட்ட பஞ்வண்டி எண்ணிக்கை	125
இபோச இடமிருந்து கிடைத்த தொகை (ரூ.மி.)	287.63
உற்பத்திக்கான செலவு (ரூ.மி.)	250.12
இலாபம் (ரூ.மி.)	37.52

2.1.7.3 நிறுவனத்தின் மொத்த முன்னேற்றம் (2025.12.31 ஆம் திகதிக்கு)

2025 வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு ((ரூ.மி.)		நிதி முன்னேற்றம் (%)	மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டம்			பௌதீக முன்னேற்றம் (%)
திறைசேரி	சுய		இலக்கு	நிறைவுசெய்யப்பட்ட	மேற்கொள்ளப்பட்டு வருகின்ற	
-	7.0	91	01	-	01	90

2.1.7.4 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான தகவல்கள் (2025.12.31 ஆம் திகதிக்கு)

நிகழ்ச்சித்திட்டம்/ கருத்திட்டம்/ செயற்பாடு	மதிபிடப்பட்ட பெறுமதி (ரூ.மி)	ஒதுக்கப்பட்ட நிதி (ரூ.மி)	நிதி முன்னேற்றம்			நிதி முன்னேற்றம்		
			இலக்கு (ரூ.மி)	இலக்கு (ரூ.மி)	%	இலக்கு (அலகு)	பொழிப்புப்படுத்தப்பட்ட முன்னேற்றம் (அலகு)	%
கட்டிடங்கள் பழுதுபார்த்தல்	7.0	7.0	7.0	6.4	91	100%	நிறைவு செநய்யப்பட்டுள்ளது	90

2.1.7.5. நிறுவனத்தின் முன்னேற்றத்தைக் காட்டும் ஏனைய தகவல்கள்

நிதி முன்னேற்றம் (2019 – 2025 வரை)

வருடம்	வருமானம் (ரூ.மி)	செலவு (ரூ.மி)
2019	193.70	169.80
2020	131.70	146.00
2021	142.00	153.00
2022	256.52	248.22
2023	214.65	186.64
2024	229.00	199.74
2025	287.63	250.11

2.1.7.6 சவால்கள் மற்றும் பிரச்சினைகள்

- நிறுவனம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமானவை என்பதால், புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதிலும் மற்றும் சேவைகளை விரிவுபடுத்துவதிலும் சிக்கல்கள் ஏற்படுதல்.

- அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகள் கிரமமாகச் செயற்படுத்தப்படாததால், நிறுவனத்தில் பயிற்சி பெற்ற ஊழியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுதல்.

- பழுதுபார்ப்புப் பணிகளுக்காக இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளை லக்திவ பொறியியல் தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதைக் குறைத்தல் அல்லது மட்டுப்படுத்துதல்.
- மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகளுக்கு இணங்க பழுதுபார்ப்புப் செய்யும் போது வழங்கும் கொடுப்பனவுகளைக் குறைத்தல் மற்றும் அக்கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் ஏற்படுதல்.

- தொழிற்படு மூலதனம் இல்லாமை மற்றும் பஸ்வண்டி உதிரிப் பாகங்களின் விலைகள் வேகமாக அதிகரித்தல்.

2.1.7.7 எதிர்கால இலக்குகள்

- இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் வண்டிகளின் உடற்பகுதிகளை அமைப்பதற்கு மேலதிகமாக, உதிரிப் பாகங்களை ஒன்றிணைத்து புதிய பஸ் வண்டிகளைத் தயாரிக்கும் வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது

- இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பயணிகள் போக்குவரத்து பஸ் வண்டிகளின் பழுதுபார்ப்புப் பணிகளை மேலும் விரிவுபடுத்துதல்.

- ஆமைச்சின் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றத்தை ஜனாதிபதி செயலகத்துடன் இணைந்து காலாண்டக்கு ஒருமுறை மீயாங்வு செய்வதய்கு இணையவழி அமைச்சு செயல்திறன் கண்காணிப்பு முறைமையினை புதுப்பிக்கப்பட்டது.

1.5.1.8 கிராமிய அபிவிருத்தி பிரிவு

அறிமுகம்

வீதி அபிவிருத்தியின்போது தேசிய மற்றம் மாகாண வீதிகளை தொடர்புபடுத்தும் கிராமிய விதிகளின் அபிவிருத்தி செய்வது மிகவும் முடுக்கியமானதாகும். கிராமிய வீதிகளின் அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு 2020ஆம் ஆண்டில் இல. 2187/27 09.08.2020 அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தலின்படி கிராமிய வீதி அபிவிரத்தி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சானது உருவாக்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மீண்டும் கிராமிய வீதி அபிவிருத்தி விடயப்பரப்பானது போக்குவர்த்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன்படி கிராமிய வீதிகள் மற்றும் பாலங்கள் பிரிவானது தற்போது போக்குவர்த்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் நெடுஞ்சாலைகள் துறையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

கிராமிய விதி அபிவிருத்தி, கிராமிய பாலங்கள் அபிவிருத்தி மற்றும் கிராமிய வீதிகளின் கட்டமைப்பு மேம்படுத்தல் நடவடிக்கைகளானது கிராமிய வீதிப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

1.6. ஏனைய நியதிச் சட்டவாக்க நிறுவனங்கள்

1.6.1 வீதி அபிவிருத்தி அதிகாரசபை

தூரநோக்கு

''சமூகத்தின் எதிர்ப்பார்ப்புகளை சிறப்பான நெடுஞ்சாலை வழியமைப்பை பெற்றுக்கொடுத்து பூர்த்தி செய்யும் நெடுஞ்சாலைப் பொரியியல் பல்துறை மேதகு நிருவனமாக இருப்பதாகும''



பணிக்கூற்று

"வீதித்துறையின் தேசிய முதன்மை நிருவனமாக, உரிய பாதுகாப்பு திட்டத்துடன் சொகுசான மற்றும் சூழல் நடப்பான முறையிலான திறனான தேசிய நெடுஞ்சாலைகள் கட்டமைப்பை வழங்குவதனூடாக போக்குவரத்து மற்றும் தொடர்புகளையும் உறுதிப்படுத்துவதனூடாக மக்கள் மற்றும் பொருட்களின் நகர்விற்கு வழியமைத்து நாட்டின் சமூகப்பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதாகும''.

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது வீதிகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைசச்சின் கீழ்வரும் நாட்டின் நெடுஞ்சாலைகள் துறையின் பிரதான நிறுவனமாகும். வீதி அபிவிருத்தி அதிகார சபையானது 1981 ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் கீழ் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழான ஒரு நியதிச் சட்டவாக்க நிருவனமாக நெடுஞ்சாலைகள் திணைக்களத்திற்கு பிரதியீடாக 1986 இல் உருவாக்கப்பட்டதாகும். அதனைத் தொடர்ந்து வீதி அபிவிருத்தி அதிகார சபையானது தேசிய நெடுஞ்சாலைகள் வலையமைப்பை பராமரித்து தரமுயத்தும் பொறுப்பினை கொண்டுள்ளது

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது நாட்டின் பிரதான நெடுஞ்சாலைகள் அதிகார சபையாக (ஏ-தர) நெடுஞ்சாலைகள் (பீ-தர) நெடுஞ்சாலைகள், மற்றும் அதிவேகப்பாதைகளை பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் புதிய நெடுஞ்சாலைகள் மற்றும் பாலங்களை திட்டமிடல் வடிவமைத்து நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் என்பன இதன் பொறுப்பாகும்.

1.7நெடுஞ்சாலைத்துறை முதலீடு

அரசாங்கமானது ஒரு உயர்ந்த பொருளாதார வளர்ச்சியினை அடைவதை இலக்காக கொண்டுள்ளது. இவ் இலக்கினை அடைந்து கொள்வதற்கு வீதி கட்டமைப்பினை உரிய தரத்தில் பேணுவது இன்றியமையாததாகும் என அடையாளம் கண்டுள்ளது. அரசாங்கமானது நாடு முழுவதும் மக்களின் வாழ்கைத்தரத்தை முன்னேற்றுவதற்காக பெருமளவு முதலீட்டினை மேற்கொண்டு வரும் அதே வேலை வீதித்துறை அபிவிருத்தியிலும் பெருமளவான நிதியினை ஒதுக்கி போக்குவரத்துறையில் அதிகரித்த கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு பங்களிப்பு செய்துள்ளது. வீதித்துறையின் மீதான முதலீடுகளானது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஏனெனில் இம்முதலீட்டின் மூலம் பிரயாணிகள் தமது போக்குவரத்து தேவையினை இலகுவில் பூர்த்தி செய்து கொள்ளல், எரிபொருள் சிக்கனம், குறைந்த போக்குவரத்து செலவு, குறைந்த வாகன கிரயம்போன்ற நலன்களை பெற்றுக் கொள்ளலாம். 2015 - 2025 இடைப்பட்ட காலப்பகுதியில் ெ மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் சுருக்கம் கீழ்வருமாறு அட்டவணை 1.7.1 இல் தரப்பட்டுள்ளது.

குறிபிடப்பட்ட அட்டவணையின்படி அதிகூடிய முதலீடானது 2025 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறைந்தளவான முதலீடானது 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வீதித்துறை மீதான முதலீடானது துரிதமாக அதிகரித்துச் சென்றுள்ள அதேவேளை 2016ஆம் ஆண்டில் சிறியதொரு வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இவ்வளர்ச்சியானது பிரதானமாக தேசிய முக்கியத்துவம் மிக்க அதிவேகப்பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் நிர்மாணப்பணிகள் மற்றும் பாலங்கள் மற்றும் வான் பாலங்கள் நிர்மாணித்தல் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டு நாட்டினுள் போக்குவரத்து வசதியின் அணுகலை அதிக்கரிக்கப்பட்டமையினால் ஏற்பட்டதாகும்.

அட்டவணை 1.7.1 பெருந்தெருக்கள் துறை முதலீடுகள் (2007 – 2023)

வருடம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூபா பி)	செலவுகள் (ரூபா பி)	திரண்ட செலவுகள் (ரூபா பி)
2015	196.8	178.0	776.85
2016	172.6	141.7	918.58
2017	206.3	192.0	1110.61
2018	196.4	166.7	1277.28
2019	256.6	156.8	1434.08
2020	255.0	226.3	1660.34
2021	358.3	211.6	1871.94
2022	254.61	200.39	2072.33
2023	348.6	227.2	2299.53
2024	322.5	231.4	2530.93
2025	374.5	353.4	2884.33

தெற்கு அதிவேகப்பாதை, கொழும்பு-கட்டுநாயக்கா அதிவேகப்பாதை மற்றும் கொழும்பு வெளிவட்டப் பாதைகளின் நிர்மாணங்களானது பூரணப்படுத்தப்பட்டமையானது நகரங்களுக்கான போக்குவரத்து நெரிசல் குறைவடைந்து கிராமங்களானது நாட்டின் பொருளாத மையங்களோடு இணைக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிராந்தியத்தின் அபிவிருத்தியும் துரிதமடைந்துள்ளது. இக்குறுகிய காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு

உற்பத்தியில் மாகாணங்களின் பங்களிப்பானது அதிகரித்துள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 2025ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டதில் 117 தலைப்பின் கீழ் ரூபா 374,922.27மில். ஒதுக்கப்பட்டதோடு இது வருட இருதியில் ரூபா். 374,583.24 மிலகுறைக்கப்பட்டது.

2025 ஆம் அண்டில் அமைச்சானது 94சத வித நிதிச்செயலாற்றுகையை அடையப்பெற்றுள்ளது.



அத்தியாயம் 2

செயலாற்றுகைமற்றும் எதிர்காலகண்ணோட்டம்

2.1 புதிய நடவடிக்கைகள்

இலங்கை அரசாங்கமானது ஒரு உயர் பொருளாதார வளர்ச்சியை பேனுவதற்கு எதிர்பார்க்கின்றது. இவ் இலக்கினை அடைவதற்கு வீதிவலயமைப்பினை உரிய தரத்தில் பேனுவது மிகவும் முக்கியமானதாகும். நாடு பூராகவும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக பாரிய அளவிலான முதலீடுகளை மேற்கொகொள்ளும் அதேவேலையில் அரசாங்கமானது நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு வரவு செலவுத்திட்ட தலைப்பு 117இன் கீழ் 2025 ஆண்டில் ரூபா 371,813.77 மில்லியன் ஒதுக்கியுள்ளது. இவ்வறிக்கை காலப்பகுதியில் கீழ்வரும் கருத்திட்டங்கள புதிய முயற்சிகளாக் அமுல்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டிருந்தன.

2..1.1 மத்திய அதிவேக நெடுஞ்சாலை – பகுதி 3 (பொதுஹர – கலகெதர) கட்டம் 2 : ரம்புக்களை – கலகெதர

இலங்கை அதிவேக நெடுஞ்சாலை வலயமைப்பு அபிவிருத்தியில் பொதுகர – கலகெதர வரையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் பகுதி 3 (CEP 3) ஒரு முக்கிய பகுதியாகும். இந்த பிரிவு 2 கட்டங்களாக அமுல்படுத்தப்படுகின்றது.

கட்டம் I: பொதுஹர – ரம்புக்கனை (0+800 km – 13+800 km) பகுதியானது 13.8 km துாரத்தை கொண்டுள்ளதோடு கட்டம் II ரம்புக்கயிலிருந்த கலகெதர வரையில் 18.65 km துாரத்தைக் கொண்டதாகும்

இத்திட்டத்தின் முதன்மை நோக்கமாவது பயண நேரத்தை குறைத்தல், பிராந்தயங்களை இணைத்தல் மற்றும் மத்திய மாகாணத்தில் அதிகரித்து வரும் போக்குவர்த்து தேவையை நிவர்த்தி செய்யவும் CEP 3 இன் மீதமுள்ள பகுதியை நிறைவு செய்வது இத்திட்டத்தின முதன்மை நோக்கமாகும்.

கட்டம் II இன் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயமானது ரூபா 130,039 மில்லயனாகும். போக்குவர்த்து ,நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சானது திறைசேரியின் ஒத்துழைப்புடன் இந்த அதிவேக நெடுஞ்சாலையின் இரண்டாம் கட்டத்தை 2026 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு பொருத்தமான நிதி மூலத்தை அடையாளம் காண்பதில் கவனம் செலுத்தி வருகின்றத.

உரிய காலத்தில் திட்டத்தனை அமல்படுத்துவதை உறுதி செய்யம் வகையில் காணி அளவீடு, முதற்கட்ட வடிவமைப்பு பணிகள், நிர்மானப்பணிகளுக்கு முந்தைய நடவடிக்கைகள் மற்றம் தற்காலிகப் பாதை கட்டுமானப்பணிகள் போன்ற ஆரம்ப பணிகளானது ஆரம்பிக்கப்படவள்ளன.

2.1.2. துறைமுக அணுகல் மேல் உயர்த்தப்பட்ட அதி வேக நெடுஞ்சாலை – ராம்ப் 1 (அலுத்மாவத்தை இடைமாறல்)

துறைமுக அணுகல் மேல் உயர்த்தப்பட்ட அதிவேக நெடுஞ்சாலையானது சரிவுப் பாதை (RAMP) 1 (அலுத்மாவத்தை) மற்றும் சரிவுப்பாதை (RAMP) 2 (புறக்கோட்டை) ஆகியவற்றின் கட்டுமானங்களையும் உள்ளடக்கியதாகும். இவ் இடைமாறல்கள் புறக்கோட்டை மற்றம் அலுத்மாவத்தை பகுதிகளுனூடாக உள்நுழைவதற்கும வெளியேறுவதற்குமான வசதியினை கொண்டிருப்பதனால் கொழும்பு நகரத்திற்கான அனுகலை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

RAMP 1மற்றும் அதனுடன் தொடர்புபட்ட வீதிகளின் நிர்மானப் பணிகளானது குறித்த காலத்திற்குள் மற்றம் வினைத்திறனாக செயல்படத்துவதை உறுதி செய்யும் வகையில் உள்ளுர் ஒப்பந்தக்காரர்களுக்கு முக்கியத்துவமளித்து பிரத்தியேகமான ஒரு ஒப்பந்தமாக செயற்படுத்துவதற்க திட்டமிடப்பட்டுள்ளனது.

2.1.3 மத்திய அதிவேக நெடுஞ்சாலை பகுதி 1 (CEP 1)கடவததை முறைமை இடைமாறல் மற்றம் மீரிகமையை நோக்கி 500 மீ வீதி நிர்மானம்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் பகுதி 1 கடவத்தையிலிருந்து மிரிகம வரையிலான (37.0 கி.மீ) துாரமான பகுதியானது மதிதிய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் பகுதி 2 (மீரிகம – குருநாகல்) அணைக்கம்

பகுதியானது இலங்கை அதிவேக நெடுஞ்சாலை வலயமைப்பில் முக்கிய பகுதியாகம்.

கடவத்தை – மீரிகம நெடுஞ்சாலை திட்டத்தின கட்டுமான வேலை விடயப்பரப்பின் உப்பந்த பொதி 3 இன் கீழ் அதிவேக நெடுஞ்சாலை பகுதிகளக்கிடையில் தடையற்ற தொடர்பினை உறுதி செய்யமு வகையில் கடவத்தை முறைமை இடைமாறல் மற்றம் மீரிகமை நோக்கிய 500 மீ விதி நிர்மானம் ஆகிய பணிகளுடன் கடடணம் அறவிடும் நிலையம் மற்றும் 5 அதிவேக நெடுஞ்சாலை ராம்களையும் உள்ளடக்கியதாகும்.

2.1.4. மத்திய அதிவேக நெடஞ்சாலை திட்டம் IV (குருநாகலை – தம்புள்ள)

குருநாகல் - தம்புள்ள அதிவேக நெடுஞ்சாலை பகுதியாயது மத்திய தெிவேக நெடுஞ்சாலையின் 4 பகுதியாகும். இது 4 ஓடுபாதைகளைக் கொண்ட 60.3 கிமீ துாரமான நெடுஞ்சாலையாகும்.. ரிதீகமஇ மல்சிரிபுரஇகலேவலஇ தம்புள்ள (A009) வீத மற்றம் தம்புள்ள (A006) வீதி ஆகிய இடங்களில் 5 இடைமாறல்களையும் கொண்டதாகம்.

இத்திட்டம் முக்கிய பொருளாதார மையங்களுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம் குறிப்பிடும்படியான பொருளாதார தாக்கத்தை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படகின்றது. இதன் மூலம் பொருட்கள் மற்றும் சேவைகளின் போக்குவர்த்தை வினைத்திறனாக்குவதோடு கலாச்சார மக்கோண பிரதேசத்தில் சுற்றுலாவை மேம்படுத்தி, வழித்தடத்தில் மதலீட்டு வாய்ப்புக்களை உரவாக்கும். மேலும் இது கிராப்புறங்களை நகர மையங்களுடன் இணைப்பதன் மூலம் சமச்சீரான பிராந்திய வளர்ச்சிக்கும் போட்டித்தன்மைக்கம் பங்களிப்பச்செய்யம்.

இந்நெடுஞ்சாலை பகுதிக்கான சாத்திய வள ஆய்வானது நிறைவு செய்யப்பட்டள்ளதோடு சூழல் தாக்க மதிப்பீட்டு ஆய்வுக்கான அனுமதியும் கிடைக்கபெற்றுள்ளது. இத்திட்டத்திற்கான காணி சுவீகரிப்பு வேலைகளானத 2017இல் ஆரம்பிக்கப்பட்டு 2023 இல் கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படும் வரை தொடரப்பட்டது.. 15.02.2023 அமைச்சரவை வீஞ்ஞாபணத்திற்கான 20.03.2023 தேதிய அமைச்சரவை முடிவு இல. අමප/23/0345/608/030 படி நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமைவாக ஏற்கனவே சுவீகரிக்கப்பட்டு பகுதியளவில் இழப்பீடு பெற்றுக்கொடுக்கப்பட்ட காணிகளுக்கு மிகுதி இழப்பீட்டை பெற்றக்கொடக்கவும், அதன் பிறகு அக்காணிகள் தொடர்பான மேலதிக நடவடிக்கைகளுக்கான பொறுப்பை பிரதேச செயலாளருக்கு பெற்றுக்கொடுப்பதற்கும் இழப்பீடு பெற்றக்கொடக்கப்படாத காணிகளை காணி கையகப்படுத்தல் சட்டத்தின்படி உரிமையாளார்களுக்க மீளப் பெற்றுக்கொடுப்பதற்கும் அனுமதி அளிக்கப்படடுள்ளது.

மத்திய அதிவேக நெடுஞ்சாலை பகுதி IV திட்டத்தின் எதிர்காலத்தில் அமுல்படுத்தும் நோக்கில் இடைநிறுத்தப்பட்ட காணிச்சுவீகரிப்ப செயன்முறையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு, 05 ஜூன் 2025 தேதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் 21/2024ன் படி முன்மொழியப்பட்டு 20.03.2023 தேதிய அமைச்சரவை முடிவு இல. අමප/23/0345/608/030 கீழ் பணிகளைத் தொடர அனுமதி அளிக்கப்பட்டது.

2.1.5 இரத்தினபுரி அதிவேக நெடுஞ்சாலை

இவ.அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதன் நோக்கம்இ சப்ரகமுவ மாகாணத்திற்கம் மேற்கு மற்றம் தெண் மாகாணங்களக்கிடையிலான இணைப்பை வலுப்படுத்துவதன் மூலம் மேற்கூறிய மாகாணங்களக்கள் போக்கவர்த்து வசதிகள், அணுகல் மற்றம் இணைப்பை மேம்படுத்துவதமாகம்.

இத்திட்டம் 3 கட்டங்களாக அமுல்படுத்தப்படவள்ளது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்தரைக்கமைய கட்டம் Iஐ அமுல்படுத்துவதற்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

- கட்டம் I – வீதிப்பகுதி கஹதுடுவ - இங்கிரிய (0.00கி.மீ – 25.00கி.மீ)

இப்பகதியானது கஹதுடுவ, ஹொரண மற்றம் அங்கிரிய ஆகிய 3 இடைமாறல்களடன் 25.00கி.மீ தாரமான வீதியாக வடிவமைக்கப்பட்டள்ளது.

2.1.6 கொழும்பு - இரத்திணபுரி – வெல்லவாய – மட்டக்களப்பு A004 வீதியின் கொடகமையிலிருந்து – அவிஸ்ஸாவல்லை வரையிலான பகுதியினை (27+430km to 58+550km) மேம்படுத்தல்

கொழும்பை சப்ரகமுவ, ஊவா மற்றம் மத்திய மாகாணத்தின் சில பகுதிகளடன் இணைக்கம் முதன்மை போக்கவர்த்து வழித்தடங்களில் ஒன்றாகக் கரதப்படும் இவ்விதியானது அவிசாவல்லையை ஊடருத்துச் செல்கின்றத. மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள இவ் வீதப்பகதியானது A004 வீதி மற்றம் களனி வெளிப் பகையிரத பாதைக்கும் தொடர்புபடுவதனால் இது பயணிகளக்கு பல்முனை போக்கவர்த்து அணுகலை எளிதாக்ககின்றது.

இவ்வீதியில் புவக்பிடியவை ஊடருத்துச் செல்லும் 8 கி.மீ வீதிப்பகுதியானது சந்துகள் அற்ற மிகவும் குறுகிய வீதிப்பகுதியாக காணப்படுவதொடு 3.5 கி.மீ துாரத்திற்கள் 4 புகையிர பாதகாப்பு கடவைகளுடன் விதி மற்றம் தண்டவாளமும் குறுகிய இடைவெளியில் வழித்தடத்தை பகிர்ந்து கொள்கின்றன. இத்திட்டமானது A004 விதியை 4 ஓடுபாதைகளுடன் கூடிய வீதியாக விரிவுபடுத்துவதன் மூலமும் மற்றும் புகையிரத பாதையை இடமாற்றம் செய்து நவீன மயப்படுத்துவதனுாடாக போக்குவர்த்து நெரிசலுக்கு தீர்வு காணப்படவுள்ளது.

இவ்வீத மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் 31.12 கி.மீ வீதியானது ருபா 57 பில்லியன் செலவில் மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வீதி மேம்படுத்தலின் போது பல புகையிரதக்கடவைகள் அகற்றப்பட்டு வீதயின் இயலளவானது விரிவாக்கப்பட்டு போக்குவர்த்து நெரிசலானது குறைக்கப்பட்டு பயணிகள் நமபகத்தன்மையானது மெம்படுத்துவதற்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வீதியானது காலநிலை மாற்றம் மற்றம் பேரிடர் அபாயங்களக்க தாங்கும் திறனையும் கொண்டதாக மேம்படுத்தப்படும். துற்போது இத்திட்டமானது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மீளாய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டள்ளது.

2.2 அதி வேக நெடுஞ்சாலைகளின் அபிவிருத்தி

ஒரு நாட்டின் துரித பொருளாதார அபிவிருத்திக்கும் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தின் முன்னேற்றத்திற்கும் ஒரு திறனான போக்குவரத்து முறையானது இன்றியமையாததாகும். இலங்கையின் பெரும்பாலான தேசிய மற்றும் மாகாண நெடுஞ்சாலைகளானது 50 வருடங்களுக்கு முன்பு அப்போதைய வாகனங்களின் எண்ணிக்கை, வாகனங்களின் வகைகள் மற்றும் வேகத்திற்கு பொருத்தமானதாக நிர்மாணிக்கப்பட்டதாகும். ஆகவே தற்போதைய போக்குவரத்துச் சேவைகளின் கேள்விக்கு அமைவாக நாட்டின் அனைத்து பிராந்தியங்களையும் தொடர்புபடுத்தக்கூடிய வீதிக் கட்டமைப்பொன்று தேவையானது இன்றியமையாததாகும்.. நாட்டின் அனைத்து பொருளாதார மையங்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் நாடு பூராகவும் 800 கி.மீ. அதிவேகப் பாதை வலையமைப்பு ஒன்றை உருவாக்க திட்ட்மிடப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்டுள்ள உயர் போக்குவரத்து அதிவேகப் பாதை வலயமைப்பின் கூறுகளாக பின்வரும் அதிவேகப் பாதைகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

1	**கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதை (25.1கி.மி)**
2	தெற்கு அதிவேகப் பாதை கொட்டாவையிலிருந்து மத்தலை வரை மற்றும் அந்தரவ - ஹம்பந்தோட்டை நெடுஞ்சாலைப் பகுதி (16.6 கி.மீ)
3	வெளிவட்டப் பாதை கொட்டாவை- கெரவலப்பிடிய (29.5 கி.மீ)
4	மத்திய அதிவேக நெடுஞ்சாலை 166.6 கி.மீ)
5	மேல் உயர்த்தப்பட்ட நெடுஞசாலை புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துருகிரிய வரை (16.4 கி.மீ)
6	துறைமுக நுழைவு வீதி (6.0 கி.மீ)
7	ருவன்புர அதிவேக நெடுஞசாலை (76.4 கிமீ)

மேற்கூறப்பட்டுள்ள நிரலில் கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதை, கொட்டாவையிலிருந்து மத்தலை வரை மற்றும் அந்தரவ - ஹம்பந்தோட்டை நெடுஞ்சாலைப் பகுதி, kw;Wk; கொட்டாவை - கெரவலப்பிடிய வரையிலான வெளிவட்டப் பாதை மற்றும் மத்திய அதிவேகப்பாதையின் கட்டம் IIஎன்பன செயற்பாட்டில் உள்ளது.

இதற்கு மாற்றமாக, துறைமுக நுழைவு வீதி (6.0 கி.மீ) கிட்டத்தட்ட நிறைவு செய்யப்படும் தருவாயில் உள்ளதோடு புதிய களனிப் பாலத்திலிருந்து அத்துருகிரிய வரை மேல் உயர்த்தப்பட்ட நெடுஞசாலை மற்றும் ருவன்புர அதிவேக நெடுஞசாலை எனடபவற்றின் கட்டுமான பணிகளானது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலை வலயமைப்பின் வரைபடம் ***பின் இணைப்பு -02***

2.2.1 அதிவேகப் பாதைகளின் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவம்

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிவேக நெடுஞ்சாலைகள் பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவானது இவ் அதிவேகப் பாதைகளின் சிறப்பான செயற்பாட்டிற்கு பொருப்பாகவுள்ளது. இது போக்குவர்த்து, நெடுஞ்சாலைகள்,துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இடம்பெறுகின்றது.

நிதி, பொருளாதார மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் 26.06.2023 சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞானத்தின் படி அதி வேக நெடுஞ்சாலைகளின் சொத்துக்கள் மற்றும் முகாமைத்துவமானது நிதி அமைச்சின் கீழ் உருவாக்கப்படவுள்ள வரையருக்கப்பட்ட “ஷஹஸ்யா” முதலீட்டுக்கம்பனியிற்கு மாற்றப்படல் வேண்டும்.இது முழுமையாக அரச உடமைக் கம்பனியாகும். இவ்அமைச்சரவதைத் தீர்மானமானது இதுவரை அமுல்படுத்தப்படவில்லை.

அதிவேகப் பாதைகளின் ஆரம்ப திட்டமிடல், போக்குவரத்து நடவடிக்கைகளின் முகாமைத்துவம் மற்றும் செயற்படுத்துகை, கட்டணம் அறவிடல் மற்றும் பராமரித்தல் நடவடிக்கைகளுடன் பாதீடு மற்றம் கணக்காய்வு என்பனவும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

போக்குவர்த்துச் செய்யும் வாகணங்களின் எண்ணிக்கை

கொழும்பு - கட்டுநாயக்க, தெற்கு வெளிவட்ட அதிவேகப் பாதை கொட்டாவையிலிருந்து மத்தலை வரையிலான தெற்கு அதிவேகப் பாதை மற்றும் அந்தரவ - ஹம்பந்தோட்டை பயணித்த வாகனங்களின் எண்ணிக்கையானது கீழ்வரும் அட்டவணை 2.2.1.1 காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை2.2.1.1: அதிவேக நெடுஞ்சாலைகளில் நாளாந்த சராசரி பொக்குவர்த்து 2025.12.31 இல் உள்ளவாரு.

வருடம்	தெற்கு மற்றும் வெளிவட்ட அதிவேகப் பாதையில் நாளாந்தம் பயணித்த வாகணங்களின் சாரசரி	கட்டுநாயக்க அதிவேகப் பாதையில் நாளாந்தம் பயணித்த வாகணங்களின் சாரசரி
2015	27,736	20,782
2016	44,384	23,974
2017	52,977	25,844
2018	60,524	27,971
2019	65,246	27,640
2020	71,857	19,117
2021	77,056	21,762
2022	59,833	24,764
2023	80,416	29,434
2024	81,561	34,292
2025	103,211	30,724

2023ஆம் ஆண்டிலிருந்து அனைத்து செயற்பாட்டிலுமுள்ள அதி வேக நெடுஞ்சாலைகளினதும் போக்குவர்த்து தரவுகளானது தனித்தனியாக பிரிக்கப்பட்டு தரப்படுகின்றது.

தனித்தனியாக ஒவ்வொரு அதி வேகப் பாதைகளினதும் நாளாந்த சராசரியானது 2025 முடிவில் கீழ் தரப்படுகின்றது.

அட்டவணை2.2.1.2: 2025 இல் ஒவ்வொரு அதிவேக நெடுஞ்சாலைகளினதும் நாளாந்த சராசரி பொக்குவர்த்து.

அதிவேக நெடுஞ்சாலையின் பெயா பெயர்	நாளாந்த சராசரி போக்குவர்த்தின் அளவு
தெற்கு அதிவேகப் பாதை	37,732
தெற்கு அதிவேகப் பாதையின் நீடிப்பு	9,528
வெளிவட்டப் பாதை	40,971
கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதை	30,724
மத்திய அதிவேக நெடுஞசாலை பகுதி II (Meerigama – Kurunegala)	14,980

மேற்தரப்பட்டுள்ள தரவுகளின் படி வெளிவட்ட நெடுஞ்சாலையில் அதிகூடிய போக்குவர்த்தானது பதிவாகியுள்ளதோடு தெற்கு நெடுஞ்சாலையின் நீடிப்பில் மிகக் குறைந்த போக்குவர்த்து பதிவாகியுள்ளது.

அட்டவணை 2.2.1.1 இன் தரவுகள்ன் படிவெளிவட்டப் வெளிவட்ட நெடுஞ்சாலை,தெற்கு அதிவேகப் பாதை மற்றும் அந்தர வெவ - ஹம்பாந்தோட்டை அதிவேகப் பாதைகளில் பயணித்த வாகனங்களின் எண்ணிக்கையானது 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையின் நாளாந்த வாகன போக்குவர்த்தானது அது பயன்னாட்டிற்கு வந்ததிலிருந்து தொடர்ந்து அதிரித்துச் சென்றாலும் 2025இல் 11 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

2025இல் அதிவேக நெடுஞ்சாலைகளில் மாதாந்த போக்குவர்த்தகளின் அளவு

2025ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை தவிர அனைத்து நெடுஞ்சாலைகளிலும் அதிகூடிய வாகனங்கள் பதிவாகியுள்ளதோடு அதில் டிசம்பர் மாதத்தில் அதிகூடிய வாகனங்கள் பதிவாகியுள்ளது.

2025இன் அதி வேக நெடுஞ:சாலைகளின் மாதாந்த சராசரி போக்குவர்தின் ஒப்பீடானது ***பின்இணைப்பு 2 (A) and (B)***தரப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைக் கட்டண வருமனம்

அட்டவணை 2.2.1.3: அதிவேக நெடுஞ்சாலைகளின் டோல் கட்டண வருமானம் - 2025

அதி வேகப்பாதையின் பெயர்	டோல் வருமானம் (Rs. Mn)
தெற்கு அதிவேகப் பாதை	5,039.95
தெற்கு அதிவேகப் பாதையின் நீடிப்பு	1,921.11
வெளிவட்டப் பாதை கொட்டாவை-கெரவலப்பிடிய	4,356.95
கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதை	4,048.65
மத்திய அதிவேக நெடுஞ்சாலை பகுதி II (Meerigama – Kurunegala)	1,580.47

இதற்கு மேலதிகமாக 2024இல் ஆகக் குறைந்த கட்டண வருமானமானது மத்திய அதிவேகப்பாதையின் பகுதி IIபெற்றுக்கொள்ளப்பட்டள்ளதோடு அதகூடிய வருவாயானது கொட்டாவையிலிருந்து மாத்தறை வரையிலான தெற்கு அதிவேகப்பாதையிலிருந்து பெறப்பட்டுள்ளது.

கோழம்பு கட்டுநாயக்க அதி வேக நெடுஞ்சாலையில் டோல் வருமானமானது 2020 மற்றும் 2021 கொவிட் தொற்று காலத்தை தவிர்த்து ஏனைய வருடங்களில் தொடர்ந்து அதிகரித்துச் சென்றுள்ளதை அவதானிக்கமுடிகின்றது.

2025இல் அதி கூடிய டோல் கட்டண வருமானமானது ஆகஸ்ட் மாதத்தில் பதிவாகியுள்ளதோடு மிகக்குறைந்த கட்டண வருமானது பெப்ரவரியில் பதிவாகியுள்ளது.

அட்டவணை 2.2.1.4– கொழும்பு கட்டுநாயக்க வீதியின் கட்டண வருமானத்துடன் தெற்கு மற்றும் வெளிவட்ட அதிவேகப் பாதைகளின் வருமான ஒப்பீடு

வருடம்	தெற்கு மற்றும் வெளிவட்டப் பாதைகளின் கட்டண வருமானம் (ரூபா.மி)	கொழும்பு கட்டுநாயக்க அதிவெகப் பாதையின் வருமானம் (ரூபா. மி)
2011	83.19	-
2012	1,017.02	-
2013	1,256.65	282.16
2014	2,141.35	1,887.73
2015	3,128.89	2,163.27
2016	4,550.89	2,496.81
2017	5,214.20	2,606.75
2018	5,893.92	2,821.78
2019	6,192.18	2,744.82
2020	5,811.61	1,461.55
2021	6,528.33	1,734.92
2022	6,239.04	2,008.80
2023	9,078.84	2,946.43
2024	11,404.12	3,588.21
2025	12,898.47	4048.65

அதிவேகப் பாதைகளின் வருமான ஒப்பீடானது ***பின்இணைப்பு 2 (C) மறறும் (D)***தரப்பட்டுள்ளது.

2.2.2 மத்திய அதிவேக நெடுஞ்சாலை

மத்திய அதிவேக நெடுஞ்சாலை என்பது ஏற்கனவே முன்மொழியப்பட்ட இரண்டு அதிவேக நெடுஞ்சாலைகளான கொழும்பு – கண்டி மற்றும் வடக்கு அதிவேகப்

பாதையிற்கு அடையாளம் காணப்பட்ட தடங்களின் இணைப்பாகும். இப்புதிய இணைந்த ஏற்பாட்டினையே மத்திய அதிவேக நெடுஞ்சாலை என அழைக்கப்படுகின்றது.

இப்புதிய தடத்திற்கான பொருளாதார சாத்திய வள ஆய்வானது மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அதேபோல் முழு தடத்திற்குமான சூழல் தாக்க மதிப்பீட்டுக்கான அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டது. மத்திய அதிவேகப்பாதையின் நிர்மாணப்பணிகளானது 4 கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

கட்டம் 1: கடவத்தை –மீறிகம(36.59 Km)

மொத்த நீளம்	36.59 க.மீ
நிதி	ஏற்றுமதி சீன இறக்குமதி வங்கி
மொத்த கிரயம்	ரூபா 186,572மி
திருத்தப்பட்ட கிரயம்	267,976 மி
கடன் தொகை	ஐ.அ. 989.45 மி

Date of Commencement:
Package I & II - 15.09.2020
Package III – 07.10.2025
Original Date of Completion :
Package I & II - 14.09.2024
Package III – 06.01.2027
Revised Date of Completion
Package I & II – 28.03.2027
Package III – 01.09.2028
Contract Amount : Package I & II – Rs.229 Bn
Package III – Rs. 10 Bn

இது நான்கு சுவடுகளைக் கொண்ட நெடுஞ்சாலையானதுகம்பஹா, வெயாங்கொடை மற்றும் மீறிகம தெற்கு ஆகிய 3 இமாற்றல்களையும்காண்டதாகும். இப்பிரிவானது இரண்டு கொந்தராத்து ஒப்பந்தங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

I. ஒப்பந்தம் பொதி I கடவத்தையில் இருந்து கொஸ்லின்ன (4.04 Km) வரையிலான நிரமாணப் பணிகள்.
II. ஒப்பந்தம் பொதி II கொஸ்லின்ன – மீறிகம(32.55 Km) வரையிலான நிர்மாணப் பணிகள்
III. ஒப்பந்தம் பொதி III கடவத்தை இடைமாறலிலுந்து கொஸ்லின்ன வரையிலான நிரமாணப் பணிகள்.

நிர்மாணப்பணிகளுக்கான கடன் ஒப்பந்தமானது .2020 மார்ச் மாதத்தில் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கியுடன் செய்துகொள்ளப்பட்டது. நிர்மாணப்பணிகளாபது 2020 செப்டம்பரில் 15இல் ஆரம்பிக்கப்பட்டது.

2025 முடிவில் நிர்மானபணிகளில் 39.6 சதவீத முன்னேற்றத்தை பதிவுசெய்துள்ளதோடு 2024 முடிவில் முன்னோடிப் பாதை நிர்மாணவேலைளில் 81 சத வீதம் அதாவது 42 கி.மீ மொத்த தூரத்தில் 34.0 கி.மீ நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இது 26 தற்காலிகப்பாலங்களில் 21பாலத்தையும் உள்ளடக்கியதாகும்.

அறிக்கைக்குரிய கால முடிவில் முடிவில் முன்னோடிப் பாதை நிர்மாண வேலைளில் 89 சத வீதம் அதாவது 42.1 கி.மீ மொத்த தூரத்தில் 37.47 கி.மீ நிறைவுசெய்யப்பட்டுள்ளது. இது 29 தற்காலிகப்பாலங்களில் 27பாலத்தையும் உள்ளடக்கியதாகும்.

31.12.2025 முடிவில் நிதி செயலாற்றுகை

பாதீட்டு குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் 2022 (ரூபா. மி)	செலவு ரூபா .மி)
117-02-03-18	2105 காணி &காணி அபிவிருத்தி	300.00	243.00
	2104 கட்டிடம் மற்றும்கட்டமைப்பு	70,465.00	70,453.92
	மொத்தம்	**70,765.00**	**70,696.92**

2025ஆம் ஆண்டில் இத்தட்டத்தின் நிதி செயலாற்றுகையானது 99.9 சதவீதமாகும்.

கட்டம் 2: மீறிகம – குருநாகல்

மொத்த நீளம்	40.09 கி.மீ
நிதி	உள்நாட்டு வங்கி கடன்
மொத்த கிரயம்	ரூ. 149,0210 மி
திருத்தப்பட்ட கிரயம்	ரூ. 149,020 மி
ஆரம்பிக்கப்பட்ட திகதி	16.01.2017
பூரணப்படுத்தப்படவுள்ள திகதி	31.03.2021
ஒப்பந்த தொகை	ரூ. 148,520 மி

நான்கு ஓடுபாதைகளைக் கொண்ட இவ்வீதிப் பகுதியானது மீறிகம வடக்கு, நாகலகமுவ, பொத்துகர (முறைமை இடமாறல்) தம்பொக்க, மற்றும் குருநாகல ஆகிய 5 இடமாறல்களைக் கொண்டதாகும். இத்திட்டத்திற்கான நிதியானது உள்ளுர் வங்கிகளில் இருந்து கடனாகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இபபகுதியின் சிவில் நிர்மாணப் பணிகளானது 2021 இறுதியில் நிறைவு செய்யப்பட்டு பாதையானத பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 2022 இல் திறந்து வைக்கப்பட்டது.

31.12.2025 முடிவில் நிதி செயலாற்றுகை

பாதீட்டு குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் 2022 (ரூபா. மி)	செலவு (ரூபா .மி)
117-02-03-18	2105 காணி &காணி அபிவிருத்தி	100.00	100.00
	2104 கட்டிடம் மற்றும்கட்டமைப்பு	1,090.00	960.87
	மொத்தம்	**1,190.00**	**1,060.87**

2025 ஆம் ஆண்டில் 89 சதவீத நிதிசெயலாற்றுகையை பதிவுசெய்துள்ளது.

கட்டம் 3. பொத்துகர –கலகெதர

மொத்த நீளம்	32.45 கி.மீ
நிதி	இலங்கை அரசு
மொத்த கிரயம்	Rs. 129,897.64Mn
திருத்தப்பட்ட கிரயம்	Rs.214,866 Mn
ஆரம்பிக்கப்பட்ட திகதி	ஜனவரி 2021
நிறைவுசெய்யப்படவுள்ள திகதி	ஜூன் 2029

இக்கட்டத்தின் மொத்த நீளம் 32.45 கி.மீ. இது 4 சுவடுகளுடன் பொத்துகரவில் ஒரு முறைமை இடமுாற்றலுடன் பொல்கஹவல, ரம்புக்கனை கலகெதர ஆகிய 3சேவை இடமாற்றல்களையும் கொண்டதாகும்.

மத்திய அதி வேக நெடுஞ்சாலையின் கட்டம் I :- பகுதி IIICh 0+800 km (பொத்துஹர லிஹினியாகமவிலிருந்து Ch.13+800 km (ரம்புக்கனை) வரையாகும். இப்பகுதியின் நிர்மாண பணிகளானது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நேரடி கண்காணிப்பின் கீழ் உள்ளுர் ஒப்பந்தக்காரர்களால் உள்ளுர் நிதியீட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டது.

முதற்கட்டத்தில் இத்திட்டமானது 17 உப கொந்தராத்து பொதிகளாக பிரிக்கப்பட்டு 17உள்ளுர் ஒப்பந்தக்காரர்களுக்கு நிர்மாணிப் பணிகளானது பெற்றுக்கொடுக்கப்பட்டது. உப மட்டத்திலான நிர்மாணப்பணிகளானது 2021 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டு நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக நிர்மாணப் பணிகளானது 15 மாதங்களாக இடைநிறுத்தப்பட்ட பணிகளானது 2023இல் ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாம் கட்டத்தின் கீழ் இவ்வீதிப்பகுதியின் மேற்பரப்பு மற்றும் பூரணப்படுத்தல் நடவடிக்கைகளானது 3 ஒப்பந்தங்களாக (IT, IU, IV) 2025 மே மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ரம்புக்கனையிலிருந்து(Ch.13+800 km) கலகெதர (Ch.32+450)வரையிலான பகுதியானது இரண்டாம் கட்டமாக அமுல்படுத்தபடவுள்ளதுடன் அதற்கான நிதி மூலமானது தீர்மாணிக்கப்படவுள்ளது. 2025முடிவில் முழுத்தட்டத்திமும் அடையப்பெற்ற திரண்ட முன்னேற்றமானது 28.30 சதவீதமாகும்.இது 2024இல் 22.61 சதவீதமாகும்.

அறிக்கைக்குரிய காலப்பகுதியின் முடிவில் இத்திட்டத்தின் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றமானது 89.67% பதிவாகியுள்ளதோடு இது 2024இல் 90% முன.னேற்றத்தை பதிவு செய்திருந்தது.

31.12.2025 முடிவில் நிதி செயலாற்றுகை

பாதீட்டு குறியீடு	விபரம்	பாதீட்டு ஒதுக்கம் 2022 (ரூபா. மி)	செலவு (ரூபா .மி)
117-02-03-20	2105 காணி &காணி அபிவிருத்தி	250.00	232.28
	2104 கட்டிடம் மற்றும்கட்டமைப்பு	15,155.31	15,110.21
	மொத்தம்	**15,405.31**	**15,342.50**

2025 டிசமபா் முடிவில் கருத்திட்டத்தின் நிதி செயலாற்றுகையானது 99.60% சதவீதமாகும். இது 2024 முடிவில் 100%செயலாற்றுகையை பதிவுசெய்தது.

மத்திய அதிவேகப் பாதையின் வரைபடம் ***பின் இணைப்பு 4***இல் காட்டப்பட்டுள்ளது.

2.2.3 துறைமுக அணுகல் மேல் உயர்த்தப்பட்ட அதி வேக நெடுஞ்சாலை

மொத்த நீளம	: 5.27 km+0.6 km
நிதி நிறுவனம:ஆசிய அபிவிருத்தி வங்கி	
மொத்த கிரயம:ரூபா 78,903 மி	
ஒப்பந்த தொகை	: ரூபா.60,018.64 மி
கடன் தொகை	: USD 300 Mn
ஆரம்பிக்கப்பபடட திகதீ	:மார்ச் 2019

வீதிப் பாவனையாளர்களுக்கு திறனான மற்றும் துரிதமான போக்குவரத்து சேவையைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் துறைமுக அணுகல் வான்வழிப் பாதையானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்தட்டத்தின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு

- மேல் உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலையானது புதிய களனிப் பாலத்தில் ஆரம்பித்து காலி முகத்திடலில் முடிவடையும்.
- கொழும்புத் துறைமுகத்தினுள் துறைமுககம்சார் செயற்பாட்டு மையமொன்றினை நிர்மாணித்தல்.

இத்திட்டத்தின் மூலம் கொல்களன் போக்குவரத்து மற்றும் பயணிகள் போக்குவரத்தானது மிகவும் வினைத்திறனாக இடம்பெறும். ஏனெனில் இதன்மூலம் மெட்றோ கொழும்பு பிரதேசத்தை உள்ளடக்கிய பிரதேசங்களின் வாகன நெரிசலானது மிகவும் குறைவடையும்.

இதற்கு மேலதிகமாக இப்புதிய தொடர்பினூடாக கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளுக்கிடையில் கொழும்பு துறைமுகத்தை மையமாகக் கொண்டு சரக்கு மற்றும் கொல்களன் போக்குவரத்து மற்றும் சேவை நகர்த்தலானது மேலும் மேம்படுத்தப்படும்.

வீதியின் நிர்மானப் பணிகளானது 2019 ஆம் ஆண்டு செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் 97.4 சதவீத முன.னேற்றத்தை பதிவுசெய்திருந்ததோடு 2025 முடிவில் சிவில் கட்டுமான பணிகளானது 99 சதவீத முன்னேற்றத்தை பதிவுசெய்துள்ளது. 2024 முடிவில் துறைமுக சேவைகள் வசதியளிப்பு மையத்தின் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றமானது 48 சதவீதமாக காணப்பட்டதோடு 2025 மடிவில் அது 64 சதவீதமாக பதிவாகியள்ளது.

31.12.2025 முடிவில் நிதி செயலாற்றுகை

பாதீட்டுக் குறியீடு	வீபரம்	பாதீட்டு ஒதுக்கம் (ரூ.மி)	செலவு (ரூ.மி)
117-02-03-16	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	8,013.5	3,878.66
	மொத்தம்	**8,013.5**	**3,878.66**

2024 ஆம் ஆண்டில் 61 சத வித நிதி செயலாற்றுகையை பதிவுசெய்துள்ளதோடு 2025 காலப்புகுதிக்கான நிதிச்செயலாற்றுயையானது 48 சதவிதமாகும்.

அதிவேக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் திட்டங்களின் 2024 ஆண்டின் திருத்தப்பட்ட நடவடிக்கை திட்டத்தின்படி பௌதீக முன்னேற்றம்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கருத்திட்டங்களானது எவ்வித தடைகளுமின்றி சிறப்பாக செயலாற்றும் என்ற கருதியே ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் பல்வேறுபட்ட உள்ளக மற்றும் வெளியக காரணிகள் காரணமாக அலக்குகளானது திருத்தியமைக்கப்பட்டது. அடையப்பெற்ற பௌதீக இலக்குகளின் அடைவகளானது பின்வருமாறு அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

- **மத்திய அதிவேகப்பாதை கருத்திட்டம் - காணி சுவீகரிப்பு**

	2024			2025			
	திருத்தப்பட்ட இலக்கு (%)	உண்மையான செயலாற்றுகைள (%)	அடைவு (இலக்கு/ உண்மை) (%)	த்டமிடப்பட்ட இலக்கு (%)	திருத்தப்பட்ட இலக்கு (%)	ஊண்மையான முன்னேற்றம் (%)	அடைவு (இலக்கு/ உண்மை) (%)
கட்டம் I	15%	8.79	58%	7.21	7.21%	3.71	51%
கட்டம் III	9%	0.6%	6.6%	4%	4%	0.03	0.75%
கட்டம் IV	திட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது						

- **மத்திய அதிவேகப்பாதை கருத்திட்டம் - நிர்மாணப்பணிகள்**

	2024			2025			
	இலக்கு (%)	உண்மையான முன்னேற்றம் (%)	அடைவு (இலக்கு/ உண்மை) (%)	த்டமிடப்பட்ட இலக்கு (%)	திருத்தப்பட்ட இலக்கு (%)	ஊண்மையான முன்னேற்றம் (%)	அடைவு (இலக்கு/ உண்மை) (%)
கட்டம் I (ஒப்பந்தம் I ,&II)	6.75%	0.19%	2.8%	-	1.44%	3.47%	100%>
கட்டம் I (ஒப்பந்தம் III)					6.11%	7.06%	100%>
கட்டம் II	2021 முடிவில் நிர்மாணப் பனிகள் நிறைவு செய்யப்பட்டன. 2022இல் பொதுமக்களின் பாவனைக்கு திறந்துவைக்கப்பட்டதது						
கட்டம் III	25.6%	22.6%	88%	23.2%	9.08%	5.7%	63%

- **துறைமுக நுழைவு மேல் உயர்த்தப்பட்ட அதி வேக நெடுஞ்சாலை**

	2024			2025			
	இலக்கு (%)	**ஊண்மையான செயலாற்றுகைள (%)**	**அடைவு (இலக்கு/ உண்மை) (%)**	**த்டமிடப்பட்ட இலக்கு (%)**	**திருத்தப்பட்ட இலக்கு (%)**	**ஊண்மையான முன்னேற்றம் (%)**	**அடைவு (இலக்கு/ உண்மை) (%)**
நிர்மாணப்பணிகள	17.4	14.8	85%	2.6%	10.35%	6.5%	63%

2.3 நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி

2.3.1 தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி

இலங்கையில் காணப்படும் ஏ மற்றும் பீ தர வீதிகள் அனைத்தும் தேசிய நெடுஞ்சாலைகள் வலயமைப்புக்குள் காணப்படும் வீதிகளாகும். இவற்றை அபிவிருத்தி செய்து பராமரிப்பது போக்குவர்த்து,நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாகும். ஒவ்வொரு வகை நெடுஞ்சாலைகளினதும் நீளமானது கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

உரு 2.3.1.1 வீதிகளின் அகலத்தின் அடிப்படையில் தேசிய வீதிகளினை வகைப்படுத்தல்

வீதியின் வகை	மொத்த தூரம் (கிமீ)
‘ஏ’ வகுப்பு நெடுஞ்சாலை	4,217.42
‘பீ’ வகுப்பு நெடுஞ்சாலை	8,045.42
அதிவேகப்பாதை	312.59
மோத்தம்	**12,575.43**

அட்டவணை2.3.1.2 – அதிவேக நெடுஞ்சாலைகள் (E),A தர மற்றும் B தர தேசிய செடுஞ்சாலைகளின் மாகாண மட்டத்திலான பரம்பல் - 2025

மாகாணம்	தேசிய வீதி (கி.மீ)			
	ஏ’ தர வீதிகள்	பீ’ தர வீதிகள்	ஈ	மொத்தம்
மேல்	373.79	1242.70	113.24	**1,729.73**
மத்திய	408.59	1,348.34	-	**1,756.93**
தெற்கு	352.91	1,155.47	161.82	**1,670.19**
வடக்கு	734.49	524.99	-	**1,259.48**
கிழக்கு	619.55	557.74	-	**1,177.29**
வடமேல்	352.80	1,010.89	35.67	**1,399.36**
வட மத்திய	491.19	708.81	-	**1200.00**
ஊவா	468.52	692.94	-	**1,161.46**
சப்ரகமுவ	415.58	803.55	1.86	**1,220.98**
மொத்தம்	4,217.42	8,045.42	312.59	**12,575.43**

தேசிய நெடுஞ்சாலைகள் வலயமைப்பானது 2025 ஆம் ஆண்டில் எவ்விதமயற்றத்திறமும்

உற்படாமல் 2024ஆம் ஆண்டின் அளவிலேயே காணப்படுகின்றது. ஆகவே மாகாண அடிப்படையிலான தேசிய வீதி வலயமைப்பின் பங்கீடும் 2025இல் டிவ்வித மயற்றமுமின்றி காணப்படுகின்றத. 2025 முடிவின்போது அதிவேக செடுஞ்சாலைகளின் பெரும்பபுகுதியானது தென் மெகாணத்தை ஊடறுத்து-செல்வதோடு குறைந்தளவிலான அதிவேக நெடுஞ்சாலைகளானது சப்ரகமுவ மாகாணத்தை ஊடுறுத்து செல்கின்றது.

அதிகூடிய செறிவான A தர நெடுஞ்சாலைகள்வடமாகாணம் கொண்டிருப்பதோடு வடமேல் மாகாணம் மிகவும் குறைந்த அளவிலான A தர வீதிகளைக் கொண்டுள்ளது. அதேபோல் மத்திய மாகாணமானது மிகவும் கூடிய B தர பாதைகளைக் கொண்டிருப்பதோடு மிகவும் குறைந்த அளவிலான B தர வீதிகள் வட மாகாணத்திலேயே காணப்படுகின்றன.

தேசிய வீதி வலையமைப்பானது பின்வருமாறும் வகைப்படுத்தப்படலாம்



உரு 2.3.1.2 வீதிகளிப் கடினத்தன்மையின் அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலைகளினை வகைப்படுத்தல்



தேசிய வீதி வலயமைப்பின் நிலைமை

2024 மற்றும் 2025 ஆம் ஆண்டு காலப்பகதிகளில் புதிதாக அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்படாத அதேவேலை நிர்மாணிக்கப்பட்டுக்கொண்டிருந்த அதிவேகநெடுஞ்சாலையினதும் நிர்மாணப்பனிகளானது 2025இல் பூாத்திசெய்யப்படவில்லை. 2025ஆம் ஆண்டு காணப்பட்ட 312கி.மீ துாரமா அளவே 2025 ஆம் அண்டிலும் எவ்வித மாற்றமுமின்றி காணப்பட்டது.

2025 ஆம் ஆண்டில் 1300.40கி.மீ துாரமான தேசிய விதிகளின் மேம்படுத்தல்கள் மற்றும் புனரமைப்பு பணிகளானது பூர்த்தி செய்யப்பட்டதோடு இன்னும் 377.13கி.மீ விதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றது.

2024இல் 1960.84 கி.மீ துாரமான வீதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன.

2025இல் ஒரு மேம்பாலமேனும் நிறைவுசெய்யப்பட்டு தேசிய விதிவலயமைப்பிற்கு சேர்க்கப்படாவிட்டலும் 2024இல் தேசிய வீதிகளில் 03 மேம் பாலங்களின் நிர்மானப் பணிகளானது நிறைவுசெய்யப்பட்டது. அவையாவன கொஹுவல மற்றும் கொம்பனி வீதியில புகையிரத பாதைக்கு குறுக்கேஉத்தரகாந்த மாவத்தை மற்றநம் ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தையில் நிர்மானிக்கப்பட்டுள்ள மேம்பாலங்களாகும். இதற்கு மேலதிகமாக 2024இல் உள்ளுர் நிதியீட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் பலவீனமான பாலங்களை புனரமைத்தல் திட்டத்தின் கீழ்20 பாலங்களின் புனரமைப்பு பனிகள் நிறைவுசெய்யப்பட்டுள்ள2025 இல்31 பாலங்கள் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

2025 நொவம்பர் மாதத்தில் வீசிய ''தித்வா'' புயலினால் நாட்டில் 22 மாவட்டங்களில் வீதி வலயமைப்பிற்கு பாரிய சேதஙங்கள் ஏற்பட்டன. இதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக 287 விதிகள் மற்றம் 572 வீதிப் பகுதிகளானது சேதமடைந்தத. உடனடியாக குப்பைகள் அகற்றல், தற்காலிக பழுது பார்த்தல;, மீள்கட்டமைப்பு மதிப்பீடுகள் மற்றும் அவசரகால புனரமைப்பு நடவடிக்கைகள் மூலம் வீதி அபிவிருத்தி அதிகார சபையானது 2025 மடிவில் பல தேசிய விதிகளை போக்குவர்த்திற்க உகந்ததாக சீரமைத்துள்ளது. இவ் விரைவான நடவடிக்கைகள் போக்கவர்த்து செவைகளின் தொடர்ச்சியை உறுதி செய்ததோடு, இடர் மீட்பு நடவடிக்கைகளக்கு ஆதரவளித்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகளக்கான இடையூறுகளைக் குறைத்து நிலையான புனர்வாழ்வு மற்றம் புனரமைப்பு வேலைகளானத 2026அலும் தொடர்கின்றது.

2.3.2 வீதிகளையும் பாலங்களையும் பராமரித்தல்

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது நாடுபூராகவும் 12,255.4 கி.மீ நெடுஞ்சாலைகள், 4,413 பாலங்கள் பராமரித்து வருகின்றது. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண பணிப்பாளர்கள், பிரதான பொருளியலாளர்கள் மற்றும் நிறைவேற்று பொருளியலாளர்கள் வருடாந்த வீதிப் பராமரிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாளாந்த, பருவகால, மற்றும் உடனடியான பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். இவ்வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீள் தார் ஊற்றி மணலினால் மூடுதல், சிறிய குழிகள் மற்றும் ஓட்டைகளை அடைத்தல், வீதி ஓர சந்துகளை நிர்மாணித்தல், வீதிகளை மேம்படுத்தல், சமிக்ஞை விளக்குகள் மற்றும் வீதி சமிக்ஞைகளை அடையாளம் இடல் போன்ற பல்வேறுபட்ட பராமரிப்பு நடவடிக்கைகளை நாடுபூராகவும் மேற்கொள்கின்றது

அட்டவணை 2.3.2.1– வீதி பராமரிப்பின் பௌதிக முன்னேற்றம் - 2025

மாகாணம்	வழமையான பராமரிப்பு	மீண்டெலும் அவ்வப்போதான பராமரிப்பு	ஆவசர பராமரிப்பு வே_ந	வெள்ள சேதங்கள்	மொத்தம்
	Kms				
மேல்	1,616.48	230.5	139.70	62.40	12.50	**2,061.58**
மத்திய	1,756.93	260.4	167.30	76.30	15.60	**2,267.53**
தெற்கு	1,508.37	210.8	169.80	54.20	10.30	**1,953.47**
வடக்கு	1,259.48	180.6	129.10	40.50	8.20	**1,617.88**
கிழக்கு	582.99	120.4	75.80	20.60	4.10	**803.89**
கிழக்கு (அக்கறைப் பற்று)	594.30	103.5	87.80	18.30	3.60	**807.5**
வடமேல்	1,363.69	178.30	128.16	44.20	7.80	**1,722.50**
வடமத்திய	1,199.90	208.60	151.45	46.60	7.30	**1,613.85**
ஊவா	1,161.46	187.50	135.0	50.20	6.50	**1,540.66**
சப்ரகமுவ	1,219.12	240.50	183.10	63.60	8.20	**1,714.52**
மொத்தம்	**12,262.72**	**1,921.1**	**1,367.21**	**476.90**	**84.1**	**16,112.03**

2024இல் வழமையான பராமரிப்பின் கீழ் 12,262.72 கி.மீ வீதிகள் பராமரிக்கப்பட்டுள்ளது. அவசர பராமரிப்பின் கீழ் 84.1கி.மீ வீதிகளானது பராமரிக்கப்பட்டுள்ளது.

மேலும் அதிகூடிய வீதிகளானது 2,267.53 கி.மீ மத்திய மாகாணத்தில் பராமரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணம் அக்கறைப்பற்று பொறியியல் பிரிவில் ஆகக்குறைந்த தூரம் பதிவாகியுள்ளது.

ஆடட்டவணை2.3.2.1 – மாகாண அடிப்படையில் தார் ஊற்றி மேற்பரப்பு மணலினால்/ சிறிய கற்களினால் மீள் நிரப்பப்பட்ட வீதி பராமரிப்பின் முன்னேற்றம்.

மாகாணம	31/12/2025 வரையில் தார் ஊற்றி மணலினால் மூடி திருத்தப்பட்ட வீதிகளின் தூரம் கி.மீ.
மேல்	**115.40 km**
மத்திய	**141.10 km**
தெற்கு	**146.20 km**
வடக்கு	**96.60 km**
கிழக்கு	**64.5 0km**
கிழக்கு (அக்கறைப்பற்று)	**79.20 km**
வடமேல்	**111.66 km**
வடமத்திய	**131.15 km**
ஊவா	**117.40 km**
சப்ரகமுவ	**154.80 km**
மொத்தம்	**1,158.00 km**

மேலுள்ள தரவுகளின்படி சப்ரகமுவ மாகாணத்திலே அதிகமான புனரமைப்புச் செய்து சீர்செய்யப்பட்டுள்ளஅதேவேலை கிழக்கு மாகாணத்தில் மிகக்குறைந்தளவிலான வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதற்கு முறனாக 2023இல் அதிகூடுதலான திருத்த நடவடிக்கைகள் ஊவா மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டள்ளதொடு குறைந்தளவானது கிழக்கு (அக்கரைப்பற்று) மாகாணத்தில் பதிவாகியள்ளது. 2024 ஆம் ஆண்டில் 100,000கி.மீ விதி அபிவிருத்தி திட்டமானது முடிவுருத்தப்பட்டமையினால் 2023ஐ விட குறைவாகக் பதிவாகியுள்ளது.

31.12.2025 நிதிச் செயலாற்றுகை

பாதீட்டுக் குறியீடு	விபரம்	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி)	செலவு செலவு (ரூ.மி)
117-02-04-01	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	26,151.87	26,091.16
	மொத்தம்	26,151.87	26,091.16

இத்தட்மானது 2025 டிசம்பர் 31 முடிவில் 99.8 சதவீத நிதி செயலாற்றுகையை அடையப்பெற்றுள்ளதோடு 2024இல் 99 சதவீத செயலாற்றுகையையே காட்டியுள்ளது.

நிறைவு செய்யப்பட்ட மற்றும் அமுல்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் வீதகளானது ***பின்இணைப்பு 05*** தரப்பட்டுள்ளது.

2.3.3 உட்கட்டமைப்புஇ வீதிப் பாதுகாப்புஇ மற்றும் போக்குவர்த்து முகாமை

வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் சிறப்பான வலயமைப்பு திட்டமிடலை மேம்படுத்தும் நோக்கில் இது ஒரு வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தேசிய வீதிக் கட்டமைப்பில் பெருமளவிலான வாகன விபத்துக்கள் இடம்பெருகின்றமையினால்இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், வீதிப் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் பிரிவின் வலயமைப்பு திட்டமிடல் பிரிவு மற்றும் வீதிப்பாதுகாப்பு அலகானது இத்திட்டத்தினை அமுல்படுத்தும் பொறுப்பை கொண்டுள்ளது. இப்பகுதியின் நோக்கமாவது வீதி வலயமைப்பானது ஆபத்துக்கள் அற்ற மற்றும் பயணிகள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கு பாதுகாப்பான வீதியாக காணப்படுவதை உறுதி செய்வதாகும்.

வீதிப் பாதுகாப்பு தொடர்பாக பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து பொலீசாரின் வேண்டுகோல்களுக்கு அமைவாக தேசிய வீதிக் கட்டமைப்பில் உருவாகும் முன்னுரிமைகளின் அடிப்படையில் வருடாந்தம் பல்வேறுபட்ட நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

2025ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் செயலாற்றுகையானது கீழே தரப்பட்டுள்ளது.

- ஆபாயகரமான இடங்களில் பாதுகாப்பை மேம்படுத்துதல்
- ஆதிக மக்கள் நடமாட்முள்ள இடங்களில் பாதுகாப்பை மெம்படுத்துதல்
- ஆபாயகரமான வீதிப புகதிகளில் நெகிழ்வுத்தன்மையான தடுப்பக்களை ஏற்படத்த்தல்.

அட்டவணை2.3.3.1வலயமைப்பு திட்டமிடல் மற்றும் வீதிப் பாதுகாப்பு திட்டத்தின் கீழான பிரதான நடிவடிக்கைகள் - 2025

வகை எண்	நடவடிக்கை	அமைவிடம்	பௌதீக முன்னேற்ற ம் (%)
01	பெல்மதுள்ள பொரியியலாளர் பிரிவில்பாதுகாப்பு மெம்பாடு கட்டம் 1	பெல்மதுள் ள	100%
02	எம்பிலிபிடிய பொரியியலாளர் பிரிவில்பாதுகாப்பு மெம்பாடு கட்டம் 1	எம்பிலிபிடிய	100%
03	பதுள்ள பொரியியலாளர் பிரிவில்பாதுகாப்பு மெம்பாடு கட்டம்	பதுள்ள	100%
04	ஹம்பாந்தோட்டை பொரியியலாளர் பிரிவில் சாரதிகளுக்கான முன் எச்சரிக்கை விளக்குகள்	ஹம்பாந்தோ ட்டை	100%
05	கண்டி பொரியியலாளர் வலயத்திற்குட்பட் பகுதிகளில் அதிகம் நடை பயணிகள் நடமாடும் இடங்களில் (பூஜாபிடிய மத்திய கல்லூரி மற்றும் சுஜாதா பெண்கள் கலடலுூரி ஆகிய பாடசாலை வலயங்களில்) பாதுகாப்பை மேம்படுத்தல்.	கண்டி	100%
06	நுலந்தா பொரியியலாளர் பிரிவில்பாதுகாப்பு மெம்பாடு கட்டம் 1	நுலந்தா	100%
07	நுவரஎலிய பொரியியலாளர் பிரிவில்பாதுகாப்பு மெம்பாடு கட்டம் 1	நுவரஎலிய	100%

வகை எண்	நடவடிக்கை	அமைவிடம்	பௌதீக முன்னேற்றம் (%)
08	ஆவிசாவல்ல பொறியியலாளர் பிரிவில்பாதுகாப்பு மெம்பாடு கட்டம் 1	அவிசாவல்	100%
09	கம்பஹா பொறியியலாளர் வலயத்திற்குட்பட் பகுதிகளில் அதிகம் நடை பயணிகள் நடமாடும் இடங்களில் (செனரத் பரணவிதாரன பாடசாலை வலயங்களில்) பாதுகாப்பை மேம்படுத்தல	கம்பஹா	100%
10	நீர்கொழும்பு பொறியியலாளர் பிரிவில் சாரதிகளுக்கான முன் எச்சரிக்கை விளக்குகள்	நீர் கொழும்பு	100%

2025 முடிவில் இத்திட்டத்தின் முழுமையான செயலாற்றுகையானது 100 சதவீதமாகும்.

நிதி செயலாற்றுகை 31/12/2025

பாதீட்டுக் குறியீடு	விபரம்	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2025	செலவு (ரூ.மி)
117-2-4-21	2104-உட்கட்டமைப்பு அபிவிருத்தி	1,250.00	149.70
மொத்தம்		**1,250.00**	**149.70**

இந்.நிகழ்ச்சித்திட்டமானது 2025 முடிவில் 12 சத வீத முனா.னேற்றத்தை அடையப்பெற்றுள்ளதோடு 2024 இல் 98 சதவீத முன்னேற்றத்தை காட்டியது.

எவ்வாராயினும் திட்டமானது 100 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடையப்பெற்றள்ளதோடு பின்வரும் 2 காரணங்களுக்காக குறைந்தளவிலான நிதி செயலாந்நுகையை பதிவுசெய்துள்ளது. ரூபா 1000மில்லியன்களுக்கான நிதி ஒதுக்கமாகது 2025 ஒக்டோபர் 30இல் கிடைக்கப்பெற்றதோடு பதுள்ளை மாவட்டத்திற்கான “திட்வா” மீள்கட்டுமானங்களுக்கான பற்றுச்சீட்டுக்களான கொடுப்பனவுகளானது செலுத்தப்படாமையுமாகும்.

2.3.4 வாகன போக்குவரத்து முகாமை

இக்கருத்திட்டமானது ஒரு வருடாந்த நிகழ்ச்சித்திட்டமாக அமுல் படுத்தப்படுகின்றது. இதன் மூலம் தேசிய நெடுஞ்சாலைகளில் பிரதான சந்திகளில் வாகன நெரிசலை குறைத்தல், மற்றும் விபத்துக்களை தவிர்த்தல் மற்றும் வைத்தியசாலைகள், பாடசாலைகள், பொது இடங்கள் போன்ற இடங்களில் பாதசாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அமுல்படுத்தப்படுகின்றது. இது வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நெடுஞ்சாலைகள் வடிவமைப்பு பிரிவின் வாகனப் போக்குவரத்து முகாமை அலகினால் மேற்கொள்ளப்பட்டுவந்தது. 2022இல் உட்கட்டமைப்பு,வீதிப் பாதுகாப்பு மற்றும் போக்குவர்த்து முகாமை பிரிவானது உருவாக்கப்பட்டு இத்திட்டமானது கையளிக்கப்பட்டது. இவ் அலகினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- பொருத்தமான இடங்களில் போக்குவர்த்து நமிக்ஞை விளக்குகளை பொருத்துதல்.
- பேலிக்கன் கடவைகளை பொருத்துதல்
- போக்குவர்த்து சமிகஞைகள் மற்றும் அடையாளங்களை மேம்படுத்துதல் மற்றும் மீளாய்வுசெய்தல்

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் ஒவ்வொரு நடவடிக்கையும் 2024 இல் அடையப்பெற்றுள்ள முன்னேற்றமானது பினவருமாரு முன்வைக்கப்படலாம்.

அட்டவணை 2.3.4.1 போக்குவர்த்தது முகாமைத்துவ திட்டத்தின் கீழான நடவடிக்கைகள் - 2025

வகை எண்	நடவடிக்கை	பௌதீக முன்னேற்றம்
01	A1 வீதியில் கிரிபத்கொடை சந்தியில் சமிக்ஞை மேம்படுத்துதல்	100%
02	AB101 வீதியில் தொட்டலங்க சந்தியில் சமிக்ஞை மேம்படுத்துதல்	100%
03	கட்டுபத்த – கொஸ்பலான B204 விதியில் சுவர்ணசீல பிம்பராம விகாரையில் பெலிக்கன் முறைமையினை நிறுவுதல்	100%
04	கெஸ்பாவ புவக்கஸ் சந்தியில் பெலிகன் சமிக்ஞை முறைமையினை பொருத்ததல்	100%
05	மட்க்களப்பு A04 வீதியல் களுவாஞ்சிக்குடி சந்தியில் சமிக்ஞை விளக்கு முறைமையினை பொருத்துதல்	100%
06	B084 வீதி பேலியகொடை சந்தியில் சமிக்ஞை விளக்கு முறைமையினை பொருத்துதல	100%

நிதிச் செயலாற்றுகை 31/12/2025

பாதீட்டுக் குறியீடு	விபரம்	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி)	செலவு (ரூ.மி)
117-2-4-22	2504 கட்டிடம் மற்றும் கட்டுமானம்	250.00	93.77
	மொத்தம	**250.00**	**93.77**

2025 டிசம்பர் 31 இல் அடையப்பெற்ற நிதி முன்னெற்றமானத 37.5 சதவீதமாகும். அது2024முடிவில்99சதவீதமுன்னேற்றம் பதிவுசெய்தது.

2.3.5 பேராதெனிய – செங்கலடி– பதுளை வீதி புனரமைப்பு (ஏ 5) திட்டம்

மோத்த நீளம் :
147 km(இரண்டாம் I), 136 Km ((இரண்டாம் II)

நிதி நிறுவனம் : ஒபெக் சர்வதேச நிதியம் (OFID)
அபிவிருத்திக்கான சவூதி நிதியம் (SDF)
மொத்தக் கிரயம் : ரூபா 18200 மி(இரண்டாம் I)
ரூபா 15963 மி((இரண்டாம் II)
திருத்தப்பட்ட கிரயம்: OFID - Rs. 16,950 Mn
SFD – Rs.17,201Mn
ஒப்பந்த தொகை :
இரண்டாம் I-OFID – Rs. 7.44 Bn,SFD – Rs. 7.52 Bn
இரண்டாம் II-OFID – Rs. 7.5 Bn,SFD – Rs. 8.3 Bn

கடன் தொகை: OFID –USD 60 Mn
SFD - USD 60 Mn
ஆரம்பம் :
கட்டம் I-17.01.2017,
கட்டம் II-01.12.2022

நிறைவு செய்யப் படவுள்ள திகத 21.04.2021(I)
30.05.2022(திருத்தப்பட்டது),
31.12.2025(II)

இலங்கை அரசாங்கமானது ஊவா மாகாணத்தின் பதுளையிலிருந்து கிழக்கு மாகாணத்தின் செங்கலடி வரை 147கி.மீ தூரமான பேராதனை – பதுளை – செங்கலடி (A5) வீதியினை 2 வழிப்பாதையாக புனரமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. திட்டமானது இரண்டு கூறுகளைக் கொண்ட ஆறு கொந்தராத்துப் பொதிகளைக் கொண்டதாகும்.

அட்டவணை 2.3.5.1 பேராதனை – பதுளை – செங்கலடி கருத்திட்டத்தின கீழ்வீதிப் புனர்நிர்மாண கொந்தராத்துப் பொதிகள

சவூதி அபிவிருத்தி நிதியின் கீழ் புனர்நிர்மாண கொந்தராத்துப் பொதிகள் *(கூறு 'ஏ')*		
பொதி 1	பிபில்லை – பதியதலாவை வரை	29 km
பொதி 2	புதியதலாவை – தம்பிடிய	30 km
பொதி 3	தம்பிடிய – செங்கலடி	27.8 km
ஒபிட் நிதியின் கீழ் புனர்நிர்மாண கொந்தராத்துப் பொதிகள் *(கூறு 'பீ')*		
பொதி 1	பதுளை – பஸ்ஸர	20 km
பொதி 2	பஸ்ஸர – லுனகல வீதி	21 km
பொதி 3	லுனுகல – பிபில்லை வீதி	19 km

மேல் உள்ள அனைத்து வீதி நிர்மான பொதிகளும் 2022இல் நிறைவு செய்யப்பட்டன.

<u>கடன் சேமிப்பு பயன்பாடு மற்றும் அமுல்படுத்தவுள்ள கருத்திட்டங்கள்</u>

இலங்கை ரூபாவானது ஐ.அ டொ எதிராக பெருமளவில் தேய்மானத்திற்கு உட்பட்டதால் இக்கடன்களில் பெருமளவு சேமிப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. இச் சேமிப்புக்களானது புதிய திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பயன் படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 2,3.5.2: கடன் சேமிப்புக்களால் அமுல்படுத்தப்படவுள்ள வேலைகள

ஒப்பந்த பொதி	நீளம் (Km)	பௌதீக முன்னேற்றம் 31.12.2025 (%)
சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி (OFID)		
லுனுபல – யல்கும்புர வீதின் மிகுதி பகுதியை புனரமைத்தல்	8.7 km	100
யல்கும்புரையிலிருந்து – பிபில்லை வரையிலான வீதிப் பகுதி	10.3 km	99.88
பதுள்ளை - பிபில்லை வரையிலான வீதிப்பகுதியில் உள்ள சரிவுப் பாதுகாப்பு		நிதியளிப்பு நிறுவனத்தின் உடன்பாடு பெறவேண்டியுள்ளது
கந்தேஹந்திய – ரந்தனிகலை வீதியை மேம்படுத்தல்	8 km	விடயப்பரப்புக்கு அப்பபாற்பட்மையினால் நிதியளிப்பு நிறுவனமானது திட்டத்தை நிராகரித்துள்ளதுடன் திட்வா பாதிப்புக்கட்பட் பதுளை – பிபிலை வீதியனை திருத்தவதற்கு உடன்பட்டள்ளத.
அபரிவிருத்திக்கான சவூதி நிதியம் (SFD)		
அம்பாறை – உகன – மகாஓயா வீதியில் கெவிலியாமடு – மங்கலகம வீதிப் பகுதி	12 km	99.7%
அம்பாறை – உகன – மகாஓயா வீதியில் மங்கலகம - மகாஓயா வீதிப் பகுதி	13 km	99.8%
செங்கலடி சந்தியை அபிவிருத்தி செய்தல்		வேலைகளானது வீதி வலயமைப்பு திட்டத்திற்கு மாற்றப்பட்டள்ளது.

31.12.2025 நிதிச் செயலாற்றுகை- (SFD)

பாதீட்டுக் குறியீடு	விபரம்	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31?12/2025	செலவு (ரூ.மி)
117-02-04-23 (சவூதி நிதி)	25104 கட்டமைபபு மற்றும நிர்மானமி	2,750.00	2,333.04
	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	1.00	1.00
	உப மொத்தம்	**2,751.00**	**2,334.04**

31/12/2025நிதிச் செயலாற்றுகை (OFID)

பாதீட்டுக	விபரம்	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி)	செலவு (ரூ.மி)
117-02-04- 41(ஒபிட்)	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	12.00	10.50
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	660.00	480.92
	உப மொத்தம்	**672.00**	**491.42**

இத்திட்டத்திற்கு OFID நிதியளிப்பின் கீழான பகுதிகளின் 2024 மற்றும் 2025ஆண்டுகளக்கான நிதி செயலாற்றுகையானது முறையே 55 சதவீதம் மற்றும் 73 சதவீதமாகும

சவூதி நிதியத்தின (SFD) கீழான பகுதிகளின் 2024 ஆம் ஆண்டின் நிதி செயலாற்றுகையானது 16 சதவீதமாக பதிவாகியுள்ளதோடு 2025 ஆம் ஆண்டின் முடிவில் பதிவாகிய செயலாற்றுகையானது 85 சதவீதமாகும்.

2.3.6 அபிவிருத்திக்கான சவூதி நிதியிலான வீதி வலயமைப்பு அபிவிருத்தி

மொத்த நீளம்/ பாலங்கள்: 83.58km/4பாலங்கள்

நிதி நிறுவனம் : அபிவிருத்திக்கான சவூதி நிதியம் (SDF)

மொத்தக் கிரயம் : Rs. 7,900mn

திருத்தப்பட்ட கிரயம்: : Rs. 10.798.15mn

ஒப்பந்நத தொகை : Rs. 9978 Mn

கடன் தொகை : USD 60 Mn

ஆரம்பம் : ஜான் 2013

நிறைவு செய்யப்படவுள்ள திகதி : ஏப்ரில்' 2023

திருத்தப்பட்ட திகதி மே 2027

இத்திட்டத்தின் பிரதான நோக்கம் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வீதிப் பகுதிகளை புனரமைத்து தேசிய நெடுஞ்சாலைகள் வலயமைப்பை மேம்படுத்துவதாகும்.

ஆரம்பத்தில் திட்டமிட்டனபடி இத்திட்டத்தின் விடயப்பரப்புக்குள்ளான நிர்மாணப் பணிகள் 2015 டிசம்பரில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டதோடு இவ் ஒப்பந்தங்களின் ஒப்பந்தக்காரர்களுக்கான பற்றுச்சீட்டுகளுக்கான கொடுப்பனவு செயன்முறையானது 2016ஆம் ஆண்டு வரை இடம்பெற்றது.

இவ்வீதிகளின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டதற்கு பின்பு இக்கடனில் மீதமாகக் காணப்பட்ட தொகையைப் பயன்படுத்தி 2018ஆம் ஆண்டு பின்வரும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

- ஏ009 வீதிப் பிரிவில் 53+740கி.மீ இருந்து 58+00 வரையில் நாவுலை நகர அபிவிருத்தி.
- ஒருகொடவத்தை அம்பத்தலை வீதியில் பால இலக்கம் 4/3 புனரமைப்புச் செய்யப்பட்டது.
- ஒருகொடவத்தை – அம்பத்தலை வீதியில் பால இலக்கம் 6/1 புனரமைக்கப்பட்டது.
- ஒருகொடவத்தை அம்பத்தலை வீதியில் பால இலக்கம் 6/2 புனரமைக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டு முடிவில் முதலாவது நடவடிக்கையானது நிறைவு செய்யப்பட்டதோடு மிகுதி நடவடிக்கைகளின் செயலாற்றுகையானது கீழ் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

பாலங்களின்வ ிபரம்	திரண்ட பௌதீக செயலாற்றுகை		
	2021	2022	2023
பால இலக்கம் 4/3	100%	நிறைவு செய்துள்ளது	நிறைவு செய்துள்ளத
பால இலக்கம் 6/1	96%	100%	100%
பால இலக்கம் 6/2	48%	82%	100%

மிகுதிக் கடன் ஒதுக்கம் மற்றும் முன்னேற்றம்

கடன் நிதியில் ஒர சேமிப்பு காணப்பட்டது. அதனைப் பயன்படுத்தி கீழ்வரும் கருத்திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. 2024 மற்றும் 2025 முடிவில் அவற்றின் பௌதீக முன்னேற்றமானது கீழே தரப்பட்டள்ளது.

- குருச்சங்கேணி பாலத்தினை மீள் கட்டுமானம்- 2024 முடிவில் ஏற்பு கடிதத்தில் கையொப்பமிடுவதற்காக துணைக்கடன் ஒப்பந்தத்தில் கையொப்பமிட உதவி நிறுவனத்தின் ஒப்புதலுக்காக காத்திருந்தது.2025 இறுதியில் இத்திட்டமானது 8 சத வீத பௌதீக முன்னேறத்தை அடையப்பெற்றள்ளது.
- ஹோமாகம – கொடகம 5வீதிப் பகுதியினை பனரமைத்தல்- இதற்கா சவூதி அபிவிருத்தி நிதியினை பயன்படுத்துவதற்கு கொடை நிறுவனத்தின் அனுமதி கிடைக்கவில்லை ஆகவே இலங்கை அரச நிதியினைப் பயன்படத்தி அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

நிதிச் செயலாற்றுகை 31/12/2025

பாதீட்டுக் குறியீடு	விபரம்	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2025	செலவு (ரூ.மி)
117-02-04-29	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	353.00	116.07
	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	22.00	21.16
	மொத்தம்	**375.00**	**137.22**

இத்திட்டத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகையானது 78%. இது 2025 ஆம் ஆண்டில் 37% பதிவாகியுள்ளது.

2.3.7 வீதி வலயமைப்பு அபிவிருத்தி கருத்திட்டம்.

மோத்த நீளம்	: 159347 km & 3 bridges
நிதி நிறுவனம்	: ஒபெக் சர்வதேச நிதியம் (OFID)
மொத்தக் கிரயம்	: ரூபா 6,625.32 Mn
திருத்தப்பட்ட கிரயம்:	: Rs. 7,035 Mn
ஒப்பந்த தொகை:	Rs. 5,378 Mn
கடன் தொகை:	USD 40 Mn
ஆரம்பம்	: ஜூன் 2013
நிறைவு செய்யப் படவுள்ள திகதி	: மார்ச் 2025

இத்திட்டத்தின் நோக்கம் நெடுஞ்சாலைகளின் இயலளவை மேம்படுத்தி வாகன செயற்படுத்துகை கிரயத்தினை குறைத்தல் மற்றும் அப்பிராந்தியங்களில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தையும் மட்டத்தையும் உயர்த்துதல். இறுதியில் இது நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும்.

இத்திட்டத்தின் கீழ் உடனடியாக அமுல்படுத்தும் வகையில் 4 வீதி கொந்தராத்து ஒப்பந்தங்கள் மற்றும் மா ஓயாவிற்கு குறுக்கே பால பால இல. 3/2 (கரதன பாலம்) ஆகிய அனைத்து ஒப்பந்தங்களும் 2022இல் நிறைவு செய்யப்பட்டன.

- காலி – தெனியாய – மாதம்பை வீதியில் இரக்வானை–மாதம்பெ வீதி
- A 019 வீதியில் பால இல. 3/2 கரதன பாலத்தை புனரமைத்தல்.
- ஏகலியகொடை-தெகியோவிட்ட வீதி
- அதுல்கோட்டை- கொஹூவல வீதி
- அதுல்கோட்டை- கொஹூவல வீதியில் அதுல்கோட்டை- மீரிஹானை கொகுவல வீதி
- பேராதனை-பதுள்ளை-செங்கலடி வீதியில் 2.63 கி.மீ மேம்படுத்துதல்

மீதமான ஒதுக்கம் மற்றும் முனனேற்றம்

மேற்கூறப்பட்டுள்ள திட்டங்களுக்கான நிதியானது ஒதுக்கனப்பட்ட பின்பு மிகுதமுள்ள நிதியின் கீழ் பினவரும் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ஒருகொடவத்தை – அம்பத்தல வீதியில் பால இல. 1/3 மற்றும் பால இல 2/4 என்பவற்றை விரிவுபடுத்தல் வேலைகளானது 2024 இறுதியில் இரு பாலங்களினதும் பிரிவாக்கல் மற்றும் கட்டுமான பணிகளானத 99.5 சதவீத பௌதீக முன்னேற்றத்தை அடையப்பெற்றிருந்ததோடு 2025 முடிவில் அனைத்து நிர்மானப் பணிகளும் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

இதற்கு மேலதிகமாக மீதமாகவுள்ள நிதியைப் பயன்படுத்தி பிலியந்தலை – மகரகம வீதியில் 1+800 km to 3.700 km பகுதியினைமேம்படுத்துவதற்கான பெருகை நடவடிக்கைகள் 2024 முடிவில் இடம்பெற்றுவருகின்றன. 2025 அறுதி வரையில் நிதியுதவி நிறுவனத்தின் ஒப்புதலானது கிடைக்கப்படவில்லை.

நிதிச் செயலாற்றுகை 31/12/2025

பாதீட்டுக் குறியீடு	விபரம்	திருத்தப்பட்ட ஒதுக்கம் (ரூபா.மி) 31/12/2025	செலவு (ரூ.மி)
117-02-04-31	2506 உட்கட்டமைப்பு அபிவிருத்தி	210.00	9.17
	2105 காணி மற்றும் காணி அபிவிருத்தி	31.30	31.30
		241.30	**40.47**

இத்தட்மானது 2024இல் 75% நிதிச் செயலாற்றுகையை அடையப்பெற்றுள்ளதுடன் 2025 ஆம் ஆண்டில் 17 சதவீத செயலாற்றுகையை பதிவுசெய்த.

2.3.8 கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி கருத்திட்டம்

மொத்த நீளம்	: 45.94 km
பாலங்கள்	: 01
நிதி நிறுவனம்	:சர்வதேசஅபிவிருத்திக்கான OPEC நிதி
மொத்தக் கிரயம	: Rs.13,526mn
திருத்தப்பட்ட மொத்தக் கிரயம	: Rs. 25,041 Mn
கடன் தொகை	: USD 50Mn
ஒப்பந்நத தொகை	: Rs.7,719 Mn
திருத்தப்பட்ட கிரயம்	: : Rs.10,224.15
ஆரம்பம	:டிசம்பர் 2013
நிறைவு செய்யப்படவுள்ள திகதி	:ஜனவரி 2026

இலங்கை அரசாங்கமானது சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியிலிருந்து(OFID) கொழும்பு மாவட்டத்திலுள்ள நெடுஞ்சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக ஐ.அ டொலர் 50மில்லியன் கடன் உதவியைப் பெற்றுக் கொண்டது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் கொழும்பு மாவட்டத்தின் தேசிய நெடுஞ்சாலை வலயமைப்பினை மேம்படுத்துவதாகும். இதன் மூலம் அதிகூடிய வாகன நெரிசல் உள்ள வீதிகளில் வாகன நெரிசல் காரணமாக வீணாக்கப்படும் நேரத்தைக் குறைத்து தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வதாகும்.

இத்திட்டத்தின் பொதி 1இன் கீழ் பின்வரும் வீதிகள் மற்றும் பாலங்களின் மேம்பாட்டு வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

அட்டவணை 2.3.8.1 கொழும்பு மாவட்ட வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புனரமைப்பச்செய்யப்படுகின்ற வீதிகள்

வீதியின் பெயர்	நீளம் (km)	பௌதீக முன்னேற்றம் (%)	
ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்திய சாலைக்கான நுழைவு வீதி	1.4 km	நிறைவு செய்யப்பட்டது 2016	
தெமட்டகொட – வெல்லம்பிடிய வீதி	1.9 km		
கொலன்னாவ – யக்பத்த வீதி	2.4 km		
வெளிக்கடை – கொகிலவத்த வீதி	6 km		
மத்திய வீதி	1 km		
மேலே உள்ள அட்டவணையின்படி, 2024 மற்றும் 2025 ஆகிய ஆண்டுகளுக்கு இடையிலான ஏற்றல் மற்றும் இறக்கல் செயல்பாடுகளின் ஒப்பீடு, ஒட்டுமொத்த கப்பல் எரிபொருள் கையாளுதலில் தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்டுகிறது. மொத்தமாக ஏற்றப்பட்ட அளவு 2024 ஆம் ஆண்டில் 564,337.072 MT இலிருந்து 2025 ஆம் ஆண்டில் 591,128.663 ஆவு ஆக அதிகரித்துள்ளது. இது 26,791.591 MT அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதுடன், தோராயமாக 4.7% வளர்ச்சியைக் குறிக்கிறது. இது LSFO கப்பலுக்கு எரிபொருள் நிரப்பும் செயல்பாடுகளில் வலுவான தேவையையும், அந்தப் பிரிவில் மேம்பட்ட கையாளும் திறனையும் குறிக்கிறது.

8.4.4 நிதி செயலாற்றுகை

2024 ஆண்டு மற்றும் 2025 ஆண்டின் நிதி செயலாற்றுகையுடன் ஒப்பிடுதல்

	2024 (ரூபா.)	2025 (ரூபா.)
வருமானம்	**719,870,640**	**538,200,787**
அண்ணளவான இலாபம்	**431,564,505**	**275,573,777**
தேறிய இலாபம்	**243,415,111**	**128,474,646**

8.5 ஸ்ரீ லங்கா சிவில் விமானச் சேவைகள் அதிகாரசபை

8.5.1 அறிமுகம்

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) 2002 ஆம் ஆண்டு 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை சட்டம் மற்றும் 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. சிவில் விமான சேவைகளின் தொழில்பாடுகளில் பாதுகாப்பு, வினைத்திறன், மற்றும் திலைபேண்தகு நிலைமை உறுதி செய்தல், தொழிலின் தொடர்ச்சி மற்றும் நம்பகத் தன்மை பராமரிப்பதற்காக இலங்கை சிவில் விமானம் சேவை ஆணையத்தின் முக்கிய கவனம் செலுத்தும் விஷயங்கள் உள்ளன. ஸ்ரீ லங்கா சிவில் விமான சேவைகள் அதிகார சபை அடிப்படையில் கவனம் செலுத்தும் விடயங்களாகும். சிவில் விமான சேவைகள் அதிகார சபையானது, பாதுகாப்பு ஒழுங்குவிதிகள், சான்றுப்படுத்தல், விமானங்களின் மேற்பார்வை அடங்கலாக விரிவான வெல்லைக்குள் விடயங்களை மேற்கொள்கின்றது.

8.5.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி மற்றம் நோக்கங்கள்

தொலைநோக்கு

"அனைவருக்கும் பாதுகாப்பு மிகுந்த ஆகாயத்தை உறுதிப்படுத்தி, நிபுணத்துவம்மிக்க, நம்பகத்தன்மை கொண்ட விமான சேவைப் பாதுகாப்பு முன்னேடியாக செயற்படல்."

பணிக்கூற்று

"சர்வதேச நியமங்கள் மற்றும் பரிந்துரைசெய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கு அமைய, தேசிய சட்டவாக்கத்துறையின் தேவைகளுக்கு. அமைவாக, பாதுகாப்பான, தற்காப்பு, வினைத்திறன், முறையான சூழலுக்கு பொருத்தமான தேசிய சிவில் விமான சேவை முறைமையை மேற்பார்வை செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கான மூலுபாய திட்டங்கள் மற்றும் பயண்மிக்க மேற்பார்வைகள் ஊடாக வசதிகளை வழங்குதல்."

8.5.3 அதிகாரசபையின் பிரதான சேவைகள் பின்வருமாறு.

- நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்து துறையை திட்டமிடும்போது சிவில் விமானப் போக்குவரத்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினதும் ஏனைய அரச அக்கறைதாரர்களினதும் கருத்துக்கள் பிரதிபலிப்பதை உறுதிப்படுத்துவதற்காக அவர்களுடன் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளுதல்.

- சிவில் விமானப் போக்குவரத்து துறையில் கொள்கைகளையும் இலட்சியங்களையும் அமைத்தல், இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் குறிக்கோள்களை எய்துவதற்காக நிறுவன செயலாற்றுகையை கண்காணித்தல், அத்துடன் சிவில் விமானப் போக்குவரத்து துறையில் அரசாங்க குறிக்கோள்களை பிரதிபலிக்கும் வகையில் இ.சி.வி.போ.அ. கூட்டு திட்டத்தை ஏற்புடையவாறு இற்றைவரைப்படுத்தல்.

- பதவிவழியில், இ.சி.வி.போ.அ.இன் பிரதம நிறைவேற்று அலுவலரான சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தின் குறிப்பிட்ட குறிக்கோள்களை எய்துவதற்காக பொறுப்புக்களை கையளித்தல்.

- தகைமையுள்ள மற்றும் தேர்ச்சிபெற்ற ஆளணியினரை ஈடுபடுத்துதலும், இ.சி.வி.போ.அ.இன் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்கான ஊதியம் உள்ளிட்ட அவர்களது சேவை நியதிகள் மற்றும் நிபந்தனைகளை நிர்ணயித்தலும்.

- இ.சி.வி.போ.அ. கூட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நடைமுறையிலுள்ள திட்டங்கள் மற்றும் முன்னேற்றம் தொடர்பாக சிவில் விமானப் போக்குவரத்து விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருக்கு வகைகூறுதல்.

8.5.4 முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

- 2025 ஆம் ஆண்டானது ஒட்டுமொத்த விமானப் போக்குவரத்தில், குறிப்பாக சர்வதேச பயணிகளின் போக்குவரத்தில் வலுவானதொரு வளர்ச்சியை வெளிப்படுத்திய வருடமாகக் கருதப்படலாம். அனைத்துப் பிரிவுகளையும் சேர்ந்த சர்வதேச பயணியர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. விமானம் மூலம் வெளியேறிய பயணிகளின் எண்ணிக்கை 5.08 மில்லியன் வரை 15% இனால் அதிகரித்த அதேவேளை, வருகை தந்த பயணிகளின் எண்ணிக்கை 5.06 மில்லியன் வரை அதாவது 16% என்ற வகையில் பதிவாகியுள்ளது. இது உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் பயணங்களுக்கான தொடர்ச்சியான தேவையைக் காட்டுகின்றது.

- புலம்பெயர் (Transit) விமான பயணிகளின் போக்குவரத்து 18% என்ற உயர் வளர்ச்சியைப் பெற்று 915,495 ஆக அதிகரித்துள்ளது. இது நாட்டின் பிராந்தியத் தொடர்புத்திறன் வலுவடைந்துள்ளமையையும், ஒரு இணைப்புப் போக்குவரத்து மையமாக நாடு வளர்ச்சியடைந்து வருவதையும் காட்டுகிறது.

- இவ்வருடத்தில் விமானப் பயணங்களின் எண்ணிக்கையும், பயணிகளின் வளர்ச்சிக்கு இணையாக ஒரு நேர்மறையான போக்கைக் காண்பித்துள்ளது. அட்டவணைப்படுத்தப்பட்ட (Scheduled) விமானப் பயணங்களின் எண்ணிக்கை 15% இனால் அதிகரித்து 62,056 ஆக உயர்ந்துள்ளதுடன், இதன் மூலம் மேம்படுத்தப்பட்ட விமானச் சேவைச் செயற்பாடுகளும் விமானப் போக்குவரத்து வழிகளின் எண்ணிக்கையும் வளர்ச்சியடைந்துள்ளமை புலனாகிறது. வாடகை விமானச் (Charter) சேவைகள் 2% வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளதுடன், மொத்தப் பயணங்களின் எண்ணிக்கை 2,000 ஆகக் காணப்பட்டது.

- உள்நாட்டு விமானப் போக்குவரத்து ஒப்பீட்டளவில் ஸ்திரமான மட்டத்தில் காணப்பட்டதுடன், பயணிகளின் எண்ணிக்கை 14,473 ஆகப் பதிவாகியுள்ளது. இங்கு விமானப் பயணங்களின் எண்ணிக்கை 5,366 ஆக அதிகரித்துள்ளதுடன், இதன் மூலம் பயணிகளின் தேவை ஸ்திரமாக இருந்தபோதிலும், செயல்பாட்டுத் திறனில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. உள்நாட்டு விமானச் சேவை நிறுவனங்களின் எண்ணிக்கை 25% இனால் அதிகரித்து, ஐந்து இயக்குநர்கள் வரை உயர்ந்துள்ளது. வாடகை உள்நாட்டு விமானச் (Charter) சேவைகள் 50% என்ற வலுவான வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ள போதிலும், அது ஒரு குறைந்த ஆரம்பப் புள்ளியிலிருந்தான வளர்ச்சியாகும். அட்டவணைப்படுத்தப்பட்ட உள்நாட்டு விமானப் பயணங்களின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

- ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, 2025 ஆம் ஆண்டானது சரக்குக் போக்குவரத்து அளவுகளில் ஏற்பட்ட சிறிய வீழ்ச்சி மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட விமானச் சேவைகளில் சில மீள்கட்டமைப்புகள் இருந்தபோதிலும், பயணிகளின் போக்குவரத்தை வலுவாக இயல்பு நிலைக்கு கொண்டு வருதல், தொடர்புகளை வலுப்படுத்தல் மற்றும் செயல்பாடுகளை விரிவுபடுத்தப்பட்ட ஒரு வருடமாகக் குறிப்பிடலாம்.

- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL) விமானச் சேவைச் செயல்பாடுகளின் பாதுகாப்பிற்கு அதன் உச்சக்கட்ட முன்னுரிமையை வழங்கியதுடன், மேம்படுத்தப்பட்ட தேசிய பாதுகாப்புத் திட்டம் (SSP) மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ கட்டமைப்பு (SMS) ஆகியவற்றின் மூலம் அபாயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயலூக்கமிக்க கண்காணிப்பு அணுகுமுறையை வலுப்படுத்தியது. பயனுள்ள பாதுகாப்பு விளைவுகளை உறுதி செய்வதற்காக, அபாய குறிகாட்டிகள், தரவு பகுப்பாய்வு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தி கண்காணிப்பு மற்றும் திருத்தச் செயல்பாடுகள் பலப்படுத்தப்பட்டன.

- இவ்வருடத்தில் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது, விமானப் பாதுகாப்பு மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றுக்கு இடையே ஒரு சமநிலையான அணுகுமுறையை உறுதி செய்தது. கடுமையான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பேணும் அதேவேளை, பயணிகளின் நடமாட்டத்தை எளிதாக்கி, தாமதங்களைக் குறைத்து, பங்குதாரர்களுக்கிடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்தியது.

- விமானப் போக்குவரத்துச் சேவைகள் கண்காணிப்பின் மூலம் (Air Navigation Services Oversight) செயற்பாட்டுப் பாதுகாப்பு, அமைப்புகளின் ஸ்திரத்தன்மை மற்றும் பயனுள்ள ஒருங்கிணைப்பு ஆகியவை வலியுறுத்தப்பட்டதுடன், தேடல் மற்றும் மீட்புப் பணிகளுக்கான (Search and Rescue)

செயல்பாட்டுத் தயார்நிலையில் வலுவானதொரு செயல்திறன் பேணப்பட்டது.

- CAASL, ICAO தரநிலைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளுக்கு (SARPs) இணங்கச் செயற்பட்டு, கணக்காய்வு தயார்நிலை, ஒழுங்குமுறை மேம்படுத்தல்கள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு செயல்முறைகளை வலுப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன், டிஜிட்டல்மயமாக்கல் திட்டங்கள் மூலம் செயல்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் தரவு அடிப்படையிலான தீர்மானம் எடுத்தல் ஆகியவற்றை மேம்படுத்தப்பட்டது.

- தேசிய சிவில் விமானப் போக்குவரத்து முதன்மைத் திட்டத்தை (NCAMP) நிறைவு செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்ததுடன், தேசிய முன்னுரிமைகள் மற்றும் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் விமானச் சேவைகளின் வளர்ச்சியை மீளாய்வு செய்யப்பட்டது. மேலும், 2050 ஆம் ஆண்டளவில் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வை (Net-zero carbon emissions) அடைவதற்கான ICAO இன் நீண்டகால உலகளாவிய லட்சிய நோக்கத்திற்கான (LTAG) இலங்கையின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியது.

- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையானது பதவியணியின் திறன், தொழில்முறை தரநிலைகள் மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்காக முதலீடு செய்ததுடன், ஆளுகை, நிதி ஒழுக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலுப்படுத்தியது. மேம்படுத்தப்பட்ட தகவல் தொடர்பு, முறைப்பாடுகளைக் கையாளுதல் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றின் மூலம் பயணிகளை மையமாகக் கொண்ட அணுகுமுறையை ஊக்குவித்தது.

- செயற்திறன்மிக்க சர்வதேச மற்றும் பிராந்திய ஒத்துழைப்பின் மூலம், CAASL தனது ஒழுங்குமுறை திறனை மேம்படுத்தி, சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி, விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றிற்குப் பங்களிப்பு செய்தது.

எதிர்நோக்கிய சவால்கள்

- சேவை நோக்கிய சீர்திருத்தங்களை (Service-Oriented Reforms - SOR) செயல்படுத்துவதிலும் அவற்றை நிறுவன இலக்குகளுடன் ஒத்திசைப்பதிலும் உள்ள சிக்கல்கள்.
- சம்பள முரண்பாடுகள், பதவியணி மன உறுதி மற்றும் நியாயத்தைப் பாதிக்கும் வகையில், சம்பளக் கட்டமைப்புகளில் நிலவும் சம்பள முரண்பாடுகள்.
- பதவியணி தேவைகள் – போதுமான பதவியணி இல்லாமை
- நிபுணர்களைத் தக்கவைத்துக் கொள்ளல் மற்றும் தொழில்நுட்பக்

கொடுப்பனவுகள் – தொழில்நுட்பக் கொடுப்பனவுகளை வழங்குவதில் உள்ள தாமதங்கள் அல்லது குறைபாடுகள் காரணமாக திறமையான ஊழியர்களைத் தக்கவைத்துக் கொள்வதில் உள்ள சிரமங்கள்.

- சட்டத் திருத்தச் செயற்பாடுகளில் ஏற்படும் தாமதங்கள்.
- நிறுவனத்திற்கான புதிய ஆட்சேர்ப்புகளுக்குத் தேவையான அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் தாமதங்கள்.

எதிர்கால இலக்குகள்

- எதிர்காலத்தில் நடாத்துவதற்குள்ள ICAO பாதுகாப்பு கணக்காய்வில் வெற்றிகரமான முடிவுகளைப் பெறுவதற்கான தயார்நிலையை வலுப்படுத்துதல்.
- தேசிய சிவில் விமானச் சேவைகளின் முதன்மைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- விமான போக்குவரத்து சார்ந்த தொழில் வல்லுநர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் மற்றும் இலங்கையை பிராந்திய பயிற்சி மையமாக மாற்றுவதற்காக கப்புங்கொடவில் CAASL பயிற்சி நிலையத்தை நிர்மாணித்தல்.
- மத்தள சர்வதேச விமான நிலையத்தில் MRO கிராமத்தை நிறுவுதல்.
- ட்ரோனர்களுக்கு முறையான உரிம முறையொன்றை உருவாக்குதல்.
- ஆளில்லா விமான அமைப்புகள் (UAS) மற்றும் மேம்பட்ட வான்வழி நடமாட்ட (AAM) தொழில்நுட்பங்களின் வளர்ச்சியை எளிதாக்குவதற்கும் ஒழுங்குபடுத்துவதற்கும் உரிய விதிமுறைகளை மேம்படுத்தல்.
- வான்வழி இணைப்பை மேம்படுத்துவதற்காக நீர் வான்வழி நிலையச் சான்றளித்தல்.
- இலங்கையில் ஹெலிகாப்டர் போக்குவரத்து மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துதல்.
- தேசிய சிவில் விமானச் சேவைகளின் முதன்மைத் திட்டத்திற்கு இணங்க, யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் CAASL உப அலுவலகத்தை நிறுவுதல்.
- பிதுருதலாகல மற்றும் கந்தபொல வானொலி நிலையங்களின் செயல்பாடுகள் மற்றும் பதவியணி தேவைகளுக்காக, நுவரெலியா கந்தபொலவில் அமைந்துள்ள CAASL ஆய்வாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை அபிவிருத்தி செய்தல்.
- எதிர்கால விமான போக்குவரத்து வளர்ச்சியை ஆதரிப்பதற்காக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு முயற்சிகளை ஊக்குவித்தல்.
- உள்நாட்டு வான்வழி இணைப்பை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு விமான சேவை வலையமைப்புகளை விரிவுபடுத்துதல்.
- இலங்கை வான்வழி வழிசெலுத்தல் திட்டத்தின் முதலாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.
- கொழும்பு தகவல் பிராந்தியத்தின் (Colombo FIR) பிரத்தியேகமற்ற ADS-B வான்வெளியில் PIDURU MSSR ரேடாரை மீள்தாபித்தல் மற்றும் FL290 இற்கு குறைவான மட்டத்தில்

ADS-B கண்காணிப்பு சேவைகளை நடைமுறைப்படுத்துதல்.

- கொழும்பு முனையக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் (Colombo TMA) வான் போக்குவரத்து (ATM) துறைமயமாக்கலை நடைமுறைப்படுத்துதல்.
- ஒரு சுயாதீனமான விமான விபத்து விசாரணை பணியகத்தை நிறுவுவதற்கான சட்டங்களை இயற்றுதல்.
- சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் உள்ளூர் தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப சிவில் விமானப் போக்குவரத்து சட்டங்களை திருத்துதல்.
- 2050 ஆம் ஆண்டளவில் சர்வதேச சிவில் விமான போக்குவரத்தில் நிகர பூச்சிய கார்பன் உமிழ்வை எய்துதல்.
- அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் கொள்கைக்கு (செயற்கை நுண்ணறிவு - AI, சைபர் பாதுகாப்பு போன்றவை) இணங்க விமானப் போக்குவரத்து சார்ந்த தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை மேம்படுத்துதல்.
- செயல்திறன் மற்றும் ஆளுகையை மேம்படுத்துவதற்காக CAASL இன் மீள்கட்டமைப்பு செயல்முறையை நிறைவு செய்தல்.
- வர்த்தமானி அறிவித்தல்களின் கீழ் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களை திறம்பட நிர்வகிப்பதற்கான திட்டத்தை வகுத்தல்.

8.5.5 நிதி மற்றும் முகாமைத்துவ பிரிவு

வருமானம்	வரவு செலவு வருமானம் - 2025 ரூபா.மில்லியன்	உண்மையான வருமானம் ரூபா.மில்லியன்	நிதி முன்னேற்றம் %
வெளிநாட்டு விற்பனைகளின் மிகைகட்டணம்	1,080	1,080	100%
(Embarkation Levy) விலகல் வரி சேவை கட்டணம்	460	495	107%
ஒழுங்குபடுத்தல் சேவைகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம்	150	157	105%
வட்டி ருமானம்	545	579	106%
ஏனைய தொழில்பாட்டு அல்லாத வருமானம்	5	37	740%
மொத்த வருமானம்	**2,240**	**2,348**	**104%**

வருமானம்	வரவு செலவு வருமானம் - 2025 ரூபா.மில்லியன்	உண்மையான வருமானம் ரூபா.மில்லியன்	நிதி முன்னேற்றம் %
மீண்டு வரும் செலவினம்	812	946	116%
மூலதன செலவினம்	120	30	25%

மொத்த செலவினம்	932	976	104%

8.5.6 மனித வள செயலாற்றுகை

அதிகாரசபையின் எதிர்கால வெற்றிக்குத் தேவையான திறன்களையும் அறிவையும் ஊழியர்கள் வளர்த்துக் கொள்வதை உறுதி செய்வதற்காக, மனிதவள மேம்பாட்டில் முதலீடு செய்வதையும், அதன் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப ஒரு பயனுள்ள பணியாளர்களை இயக்குவதையும் CAASL தொடர்ந்து மேற்கொண்டது. அதற்காக அதிகாரசபையின் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

2025 சனவரி 1 தொடக்கம் திசெம்பர் 10 வரை

	பயிற்சிப் பெற்ற எண்ணிக்கை	பயிற்சிப் பெறுபவர்களின் எண்ணிக்கை	பயிற்சி - மனித நாள்களின் எண்ணிக்கை
உள்ளக பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள்	9	95	9
வெளிநாட்டு கூட்டங்கள்/ மாநாடு/ கலந்துரையாடல்கள்	21	21	21
வெளிநாட்டு பயிற்சி/ கருத்தரங்குகள்/ செயலமர்வுகள்	33	52	33
உள்நாட்டு பயிற்சி/ கருத்தரங்குகள், / செயலமர்வுகள்	15	33	15
நிகழ்நிலை பயிற்சி, கருத்தரங்குகள்/ செயலமர்வுகள்	08	11	08
மொத்தம்	**86**	**212**	**86**

8.6 வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமானச் சேவைகள் (இலங்கை)(தனியார்) நிறுவனம

8.6.1 அறிமுகம்

வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பெனி (AASL) என்பது 2010 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க சிவில் விமான சேவைகள் சட்டத்தால் அளிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் கீழ் நியதிச்சட்ட கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட முற்றுமுழுதாக அரசுக்குரிய கம்பெனியாகும். அது, இலங்கையின் சில விசேட சிவில் விமான சேவைகளில் ஒரே நியதிச் சட்ட சேவை வழங்குநராக தமது கடமைப் பொறுப்புகளை தொடர்ச்சியாக நிறைவேற்றுகின்றது.

8.6.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி மற்றும் நோக்கங்கள்

தொலைநோக்கு

“நிலையான பொருளாதாரத்திற்கான உலகளாவிய இணைப்பில் நட்பு விமானச் சேவைகளின் பங்காளராக ஆகுதல்”

செயற்பணி

“பங்காளர்களின் திருப்தியை உறுதிப்படுத்துவதற்காக, நவீன தொழில்நுட்பத்துடன், சிறந்த நடைமுறைகளின் ஊடாக, அதிக போட்டி போன்று பாதுகாப்பான விமானச் சேவைகளை வழங்குதல் மற்றும் உயர் தரத்திலான விருந்தினர் அனுபவங்களை வழங்குதல்.”

நோக்கங்கள்

- எதிர்கால தேவைகளை நிறைவு செய்வதற்காக திறனை (Capacity) உச்ச மட்டத்தில் பேணுதல்.
- வாடிக்கையாளர் திருப்தியை அடைவதற்காக சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல்.
- ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்கு பங்களிப்புச் செய்தல்.
- வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளுதல்.
- மனித வளங்களின் உற்பத்தித்திறனை (Productivity) அதிகரித்தல்.
- விமானப் போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் மேற்பார்வைத் தரநிலைகளுக்கு இணங்குதல்.
- நிதி நன்மைகள்: நிதி ரீதியான பலன்களை அல்லது லாபத்தை உச்சப்படுத்துதல்.

கம்பெனியின் அடிப்படைச் செயற்பாடுகள்

இலங்கை விமானப் போக்குவரத்து தகவல் வலயத்தில் (FIR) விமானங்களினதும் பயணிகளினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தி திறம்பட விமான தொழில்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக விமானப் போக்குவரத்து சேவைகள் (விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுச் சேவைகள், வானூர்தித் தொடர்புச் சேவைகள், வானூர்தித் தகவல் சேவைகள்),

வழங்குதல், தியணைப்பு சேவைகள் மற்றும் விமானப் பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் போன்றே இலங்கையில் காணப்படும் சர்வதேச விமான நிலையங்களை மேம்படுத்தல், பராமரித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பன கமபெனியின் பிரதான செயற்பாடுகளாகும். இதற்கு மேலதிகமாக யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் (JIA) போன்ற தொலைதூர விமான நிலையங்களுக்கு தரை கையாளும் சேவை வழங்குநராக AASL செயல்படுகிறது.

2025 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்திய பிரதான மூலதன கருத்திட்டங்களின் முன்னேற்றம்

1. புறப்படும் முனையத்தின் பயணப் பொதிகளை கையாளும் வசதியை மேம்படுத்தல் (Baggage Handling System)

இந்தத் திட்டத்தின் நோக்கம் யாதெனில், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (BIA) புறப்படும் பயணப் பொதிகளை கையாளும் திறனை (Baggage Handling Capacity) தோராயமாக 45% ஆல் மேம்படுத்துவதாகும். இத்திட்டத்தின் கீழ், புறப்படும் பயணப் பொதிகளை செயலாக்கும் சுழற்சிப் பட்டை (Carousal) மறுசீரமைக்கப்பட்டு நீடிக்கப்படுவதுடன், அதற்கு அவசியமான கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு 937 மில்லியன் ரூபா என்பதுடன், இது 2025 யூலை மாதத்தில் நிறைவடைந்தது.

2. இறக்குமதி சரக்கு முனையக் கட்டிடம் - முதலாம் கட்டம்

இறக்குமதி விமானச் சரக்கு முனையக் கட்டிடத்தின் கட்டுமானத் திட்டமானது, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருடாந்த விமானச் சரக்கு கையாளும் திறனை 150,000 மெட்ரிக் தொன்களால் அதிகரிப்பதாகும். 4.6 பில்லியன் ரூபா தொகை செலவிடப்படும் இத் திட்டத்தின் மூலம் மூன்று மாடி கட்டிடமொன்றை நிர்மாணித்தல், வீதிகளை விரிவாக்குதல் மற்றும் 1,620 சதுர அடி வாகன நிறுத்துமிட வசதிகளை மேற்கொள்ளப்படுகிறது. இதன் கட்டுமானங்கள் 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2026 சனவரி மாதம் முடிவுறுத்தப்பட்டது.

3. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் காட்சி நிறுத்துகை வழிகாட்டுதல் அமைப்பை (VDGS) மேம்படுத்தல்

2025 ஒக்டோபர் மாதத்தில், 400 மில்லியன் ரூபா செலவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் காட்சி நிறுத்துகை வழிகாட்டுதல் அமைப்புக்கான (Visual Docking Guidance System - VDGS) மேம்பாட்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது. இறுதி நிறுத்தக் கட்டத்தில் விமானங்களை துல்லியமாக நிலைநிறுத்துவதற்கு இந்த அமைப்பு விமானிகளுக்கு உதவுகிறது.

4. விமான நிலைய வசதிகள் வளாகம் அமைத்தல் - CIAR

CIAR இன் செயல்பாட்டுத் திறனை மேம்படுத்துவதற்காக, ஒரு புதிய விமான நிலைய வசதிகள் வளாகத்தை அமைக்கும் பணி 2026 சனவரியில் தொடங்கப்பட்டதுடன், அது 2027 யூலைக்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு 4.6 பில்லியன் ரூபாயாகும்.

5. BIA க்கான விரிவான திட்டம் (Master Plan)

2026 – 2055 ஆம் ஆண்டு திட்டக் காலப்பகுதிக்கான BIA விரிவான திட்டத்தைத் தயாரிக்கும் செயல்முறை 2025 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் தொடங்கியது. இது விமானப் போக்குவரத்துத் துறைக்கு ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும். இதன் முடிவுகள் அடுத்த மூன்று தசாப்தங்களில் இருக்கும் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் எதிர்கால வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் வழிகாட்டுவதுடன், BIA க்கான நீண்டகால உள்கட்டமைப்பு மேம்பாட்டு மூலோபாயத்தை காட்டுகிறது. இந்தப்பணி 2026 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவடைய உள்ளது.

6. பாதுகாப்புப் பரிசோதனை அமைப்புகளை மேம்படுத்தல்

விமான நிலையப் பரிசோதனைத் திறன்களை மேலும் வலுப்படுத்தும் வகையில், சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் (IOM) மானியத்தின் மூலம் பெறப்பட்ட பதின்மூன்று அதிநவீன எக்ஸ்-ரே (X-ray) பயணப் பொதி ஸ்கேனர்களை AASL வெற்றிகரமாகச் செயல்பாட்டுக்குக் கொண்டுவந்துள்ளது. இதில் ECAC C1 திறன் கொண்ட 07 கேபின் பயணப் பொதி ஸ்கேனர்கள், ECAC C2 திறன் கொண்ட 04 மேம்பட்ட கேபின் பயணப் பொதி ஸ்கேனர்கள் மற்றும் 02 இரட்டைக் காட்சி (Dual-view) ஹோல்ட் பயணப் பொதி ஸ்கேனர்கள் ஆகியவை அடங்கும்.

மேலே குறிப்பிடப்பட்ட முன்னேற்றங்கள் கூட்டாக செயல்பாட்டுத் திறனை மேம்படுத்தி, தேசிய எல்லைப் பாதுகாப்பை வலுப்படுத்தி, பயணிகள் பாதுகாப்பை அதிகரித்துள்ளதுடன், விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் வசதியளிப்பு தொடர்பான உலகளாவிய சிறந்த நடைமுறைகளுடன் விமான நிலைய செயல்பாடுகளை சீரமைத்துள்ளன.

7. BIA இன் தானியங்கி எல்லைக் கட்டுப்பாட்டு (ABC) வாயில்கள்

தொடுகையற்ற எல்லைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், BIA இன் வருகை முனையத்தில் 04 தானியங்கி எல்லைக் கட்டுப்பாட்டு (ABC) வாயில்களை (மின்னணு (E) வாயில்கள்) நிறுவும் பணி 2025 யூன் மாதத்தில் நடைபெற்றது. இது இலங்கையின் சிவில் விமான நிலையம் ஒன்றில் முதன்முறையாக E-வாயில்கள் செயல்பாட்டுக்கு வந்ததைக் குறிக்கிறது. இவை சர்வதேச புலம்பெயர்வு அமைப்பின் (IOM) மானியத்தின் மூலம் பெறப்பட்டதுடன், பயணிகள் செயலாக்கத்

திறனை அதிகரிக்கவும், காத்திருப்பு நேரத்தைக் குறைக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. 2025 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் இதன் முன்னோடிச் செயல்பாடு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.

8. பயணிகள் முனையத்தில் பொதுக் கழிப்பறை வசதிகளை அமைத்தல்

இத்திட்டத்தின் கீழ் புறப்படும் முனையத்தில் அத்தியாவசிய கழிப்பறை வசதிகள் கட்டப்பட்டன. இது தோராயமாக 213 சதுர மீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளது. இதில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறைகள், துப்புரவுப் பகுதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறை, சேமிப்பு மற்றும் துப்புரவு வசதிகள் ஆகியவை அடங்கும். கூடுதலாக, சரக்கு முனையம் 5 இல், ஸவர் வசதிகளுடன் கூடிய ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறைகள் உட்பட தோராயமாக 35 சதுர மீட்டர் பரப்பளவில் கழிப்பறை வசதிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. 2025 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு 178 மில்லியன் ரூபாயாக இருந்ததுடன், ஒப்பந்த விலை 137 மில்லியன் ரூபாவாகும். இத்திட்டம் 2025 ஒக்டோபரில் நிறைவடைந்தது

9. லோட்டஸ் ஓய்வறையை (Lotus Lounge) புனரமைத்தல்

இத்திட்டமானது தோராயமாக 310 சதுர மீட்டர் பரப்பளவை உள்ளடக்கிய லோட்டஸ் ஓய்வறையை புனரமைப்பதை உள்ளடக்கியது. இதில் கம்பளம் (Carpet) விரித்தல், பரேக் தரைவிரிப்பு (Parquet flooring), மரப் பலகை வேலைகள், தடுப்புகள் அமைத்தல் மற்றும் தளபாடங்கள் மற்றும் சமையலறை உபகரணங்களை வழங்குதல் ஆகியவை அடங்கும். திட்டத்தின் ஒப்பந்த விலை 273.3 மில்லியன் ரூபாயாகும், மேலும் 2025 ஆம் ஆண்டிற்காக 350 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 95% பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், எதிர்பார்க்கப்படும் நிறைவுத் திகதி 2026 செப்டம்பர் ஆகும்.

10. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வான் பாதுகாப்பு சேவைகளுக்கான வசதிகளை மேம்படுத்தல்

இத்திட்டமானது 210 ஆண் மற்றும் பெண் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை அமைப்பதை உள்ளடக்கியது. இதற்கான ஒப்பந்தம் 2025 ஆகஸ்ட் மாதத்தில் வழங்கப்பட்டதுடன், மொத்த ஒப்பந்த மதிப்பு 555 மில்லியன் ரூபாவாகும். 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 6% கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், எதிர்பார்க்கப்படும் நிறைவுத் திகதி 2026 யூன் ஆகும்.

11. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தற்போதைய செக்-இன் கவுண்டர்கள் மற்றும் பயணப் பொதிகளை கையாளும் உடைமைப் பட்டை (Baggage Belts) மறுசீரமைத்தல்.

இத்திட்டமானது, மேலதிகமாக 14 கருமபீடங்களுக்கான வசதிகளை வழங்குவதற்காக, தற்போதுள்ள 58 செக்-இன் கருமபீடங்களின் அளவுகளை மாற்றி அமைப்பதையும் புதிய பொதிகளை கையாளும் உடைமைப் பட்டை (Baggage Belts) நிறுவுவதையும் உள்ளடக்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் 2025 ஒக்டோபர் மாதத்தில் 588 மில்லியன் ரூபா மதிப்பில் வழங்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இதன் பௌதீக முன்னேற்றம் 5% ஐ எட்டியுள்ளதுடன், இத்திட்டம் 2026 யூன் மாதத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

12. JIA சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் முனையக் கட்டிடத்தை விரிவாக்கம் செய்தல் மற்றும் மாற்றி அமைத்தல்.

தற்போதுள்ள பயணிகள் முனையமும் மற்றும் அதனை சார்ந்த வசதிகளும் குறைந்தபட்ச தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்யும் வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதால், பயணிகளின் வசதியை மேம்படுத்துவதற்காக முனையத்தை மேம்படுத்துவதற்கான தேவை உள்ளது. இத்திட்டம், ஆண்டுதோறும் 200,000 பயணிகள் பயணிப்பதற்கேற்றவாறு முனைய வசதிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டம் இரண்டு தொகுப்புகளாக (Packages) செயல்படுத்தப்படுகிறது. தொகுப்பு A, 2025 நவம்பர் மாதத்தில் வழங்கப்பட்டதுடன், இது 2026 யூன் மாதத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது, இதன் ஒப்பந்த மதிப்பு 311 மில்லியன் ரூபாவாகும். தொகுப்பு B க்கான கேள்வி கோரப்பட்டுள்ளதுடன், அது 2026 பிப்ரவரி மாதத்தில் வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

13. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) புதிய 14 செக்-இன் கவுண்டர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

பனிக்கால (Winter) சுற்றுலாப் பருவத்தில் பயணிகளுக்கு தடையற்ற விமான நிலைய செயல்பாடுகளை உறுதி செய்வதற்கும், சிரமங்கள் இல்லாத அனுபவத்தை வழங்குவதற்கும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (BIA) புதிதாகக் கட்டப்பட்ட தற்காலிக கூடாரத்தில் (Marquee) சோதனை அடிப்படையில் புதிய 14 செக்-இன் கருமபீடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்த வசதி 2025 நவம்பர் 10 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இலங்கையின் சுற்றுலா அனுபவத்தை மேம்படுத்துவதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில், பயணிகளின் தேவைக்கேற்ப செயல்பாடுகளை மேலும் விரிவுபடுத்த AASL திட்டமிட்டுள்ளது.

14. வான்வழிச் போக்குவரத்துச் சேவை உள்கட்டமைப்பு மேம்பாடு

i) வான்வழிப் போக்குவரத்து முகாமைத்துவ அமைப்பு (ATM): வான்வழிப் போக்குவரத்து கட்டுப்பாட்டு செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக ஒரு புதிய ATM அமைப்பு நிறுவப்பட்டதுடன், அது 2023 ஆம் ஆண்டின் இறுதியிலிருந்து செயல்பாட்டிலுள்ளது. இந்த அமைப்பு குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் ஆயுட்காலத்தைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், ஒழுங்குமுறைத் தேவைகளுக்கு ஏற்ப அதனை நீடிப்பதற்கான சாத்தியக்கூறுகளும் உள்ளன. இத்திட்டத்தின் மொத்தச் செலவு 1.15 பில்லியன் ரூபா என்பதுடன், இது 2025 ஒக்டோபர் மாதத்தில் நிறைவடைந்தது.

ii) பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடு பாதை 04 இற்கான பொருட்களை தரை இறக்கும் அமைப்பு (ILS): பொருட்களை தரை இறக்கம் செய்வதற்கான அமைப்பை வழங்குதல், நிறுவுதல் மற்றும் இயக்குவதற்கான திட்டம் 2023 இல் தொடங்கப்பட்டு வெற்றிகரமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. செயல்பாட்டுப் பயன்பாட்டிற்காக விடுவிக்கப்படுவதற்கு முன்னர், இது தற்போது இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் (CAASL) பரிசோதனைக்காகக் காத்திருக்கிறது. குறைந்த தெரிவுநிலை (Low visibility) நிலைமைகளின் கீழ் விமானங்கள் பாதுகாப்பாகத் தரையிறங்குவதை உறுதி செய்வதற்கு அவசியமான இந்த அமைப்பிற்காக AASL நிறுவனம் 1.2 பில்லியன் ரூபா முதலீடு செய்துள்ளது.

iii) தானியங்கி வானிலை கண்காணிப்பு அமைப்பு (AWOS): பாதுகாப்பான தரையிறக்கம் மற்றும் பறப்புச் செயல்பாடுகளுக்கு அவசியமான நிகழ்நேர (Real-time) வானிலை தரவுகளை விமானிகளுக்கும் வான்வழிப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்களுக்கும் வழங்குவதற்காக, 2024 ஆம் ஆண்டில் AASL நிறுவனத்தினால் தானியங்கி வானிலை கண்காணிப்பு அமைப்பொன்று நிறுவி முடிக்கப்பட்டது. BIA இன் AWOS மற்றும் விமான நிலைய முனைய தகவல் அமைப்பு (ATIS) ஆகியவை 2025 ஆம் ஆண்டில் 307 மில்லியன் ரூபா மொத்தச் செலவில் முழுமையாக நிறைவு செய்யப்பட்டு செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டன.

iv) பிதுருதலாகல இரண்டாம் நிலை கண்காணிப்பு ரேடார்: மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு 1.71 பில்லியன் ரூபா கொண்ட இத்திட்டம் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள், அதற்கான உபகரணங்கள் திட்டத்

தளத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதுடன் கட்டுமானப் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் 77% பௌதிக முன்னேற்றம் எட்டப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு வரையிலான இதன் நிதியியல் முன்னேற்றம் 576 மில்லியன் ரூபா ஆகும்.

தொழிற்பாட்டு யெலாற்றுகை

1. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.நி)

2025 ஆம் ஆண்டில், பி.ஐ.ஏ (BIA) 62,432 சர்வதேச இயக்கங்கள் மற்றும் 4,443 உள்நாட்டு இயக்கங்கள் உள்ளடங்கலாக 66,875 விமான இயக்கங்களைக் கையாண்டுள்ளது. இந்த விமான நிலையம் 10,008,052 சர்வதேச பயணிகளுக்கும் 7,181 உள்நாட்டு பயணிகளுக்கும் சேவைகளை வழங்கியுள்ளது. பி.ஐ.ஏ இனால் கையாளப்பட்ட மொத்த சரக்குகளின் அளவு 190,255 மெட்ரிக் தொன்களாகும். 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், பயணியர் இயக்கங்கள் 15% வளர்ச்சியைக் காட்டுவதுடன், விமான இயக்கங்கள் 13% இனால் அதிகரித்துள்ளன. இருப்பினும், 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் சரக்கு போக்குவரத்து அளவு 1% இனால் வீழ்ச்சியடைந்துள்ளது. பி.ஐ.ஏ தற்போது முப்பத்து மூன்று திட்டமிடப்பட்ட விமான நிறுவனங்களைக் கொண்ட ஒரு விமானப் போக்குவரத்து வலையமைப்பை இயக்குகிறது, இது கோவிட்டிற்கு (COVID) முந்தைய அதன் இருபத்தொன்பது விமான நிறுவனங்களைக் கொண்ட வலையமைப்புப் பாதுகாப்பை விட அதிகமாகும்.

2. மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.நி)

2025 ஆம் ஆண்டில், எம்.ஆர்.ஐ.ஏ (MRIA) 703 சர்வதேச இயக்கங்கள் மற்றும் 30 உள்நாட்டு இயக்கங்கள் உள்ளடங்கலாக 733 விமான இயக்கங்களை மேற்கொண்டுள்ளது. இந்த விமான நிலையம் 140,614 பயணியர் இயக்கங்களுக்கு வசதியளித்துள்ளதுடன், அவை அனைத்தும் சர்வதேச இயக்கங்களாகும். சரக்கு கையாளுதல் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டதுடன், இவ்வருடத்தில் வெறும் 25 மெட்ரிக் தொன்கள் மாத்திரமே பதிவாகியிருந்தன. 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025 இல் பயணியர் இயக்கங்கள் 6% இனாலும், விமான இயக்கங்கள் 3% இனாலும் மற்றும் சரக்கு இயக்கங்கள் 7% இனாலும் அதிகரித்துள்ளன. இவ்வருடத்தில், ரெட்விங்ஸ் (Red Wings) விமான நிறுவனம் ரஷ்யாவின் மொஸ்கோவை இணைத்து MRIA விற்கான மற்றும் அங்கிருந்தான திட்டமிடப்பட்ட இயக்கங்களை ஆரம்பித்தது.

3. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் (யா.ச.வி.நி)

2025 ஆம் ஆண்டில், ஜே.ஐ.ஏ (JIA) 1,138 சர்வதேச விமானங்கள் மற்றும் (பயிற்சி விமானங்கள் உள்ளடங்கலாக) 254 உள்நாட்டு விமானங்கள் உட்பட 1,392 விமான இயக்கங்களை மேற்கொண்டுள்ளது. பயணியர் இயக்கங்கள் 33% இனால் அதிகரித்து 54,074 ஆகக் காணப்பட்டதுடன், அவர்களுள் 53,443 பேர் சர்வதேச பயணிகளாவர். 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் விமான இயக்கங்கள் 20% இனால் அதிகரித்துள்ளன. இன்டிகோ (IndiGo) விமான நிறுவனம் தற்போது JIA இன் ஒரேயொரு திட்டமிடப்பட்ட விமானச் சேவை வழங்குநராகக் காணப்படுவதுடன், யாழ்ப்பாணத்திற்கும் சென்னைக்கும் இடையிலும், யாழ்ப்பாணத்திற்கும் திருச்சிராப்பள்ளிக்கும் இடையிலும் வாராந்தம் பத்து விமானச் சேவைகளை இயக்குகிறது. 2024

செப்டெம்பர் மாதத்தில் இன்டிகோ விமானச் சேவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், அலையன்ஸ் எயர் (Alliance Air) நிறுவனம் JIA விற்கான மற்றும் அங்கிருந்தான தனது இயக்கங்களை நிறுத்திக்கொண்டது.

4. இரத்மலானை -கொழும்பு சர்வதேச விமான நிலையம் (கொ.ச.வி.நி)

2025 ஆம் ஆண்டில், சி.ஐ.ஏ.ஆர் (CIAR) (பயிற்சி விமானங்கள் உள்ளடங்கலாக) 25,913 விமான இயக்கங்களைக் கையாண்டுள்ளதுடன், 2,634 பயணியர் இயக்கங்களுக்கும் வசதியளித்துள்ளது. இதில் சர்வதேச பயணிகள் எவருமற்ற 67 சர்வதேச விமான இயக்கங்கள் உள்ளடங்கியிருந்தன, இது இந்த விமான நிலையம் பிரதானமாக ஒரு பயணியர் இலக்காக இருப்பதற்குப் பதிலாக ஒரு தொழில்நுட்ப நிறுத்தம் (Technical stop) அல்லது விமான நிறுத்துமிடமாக (Parking center) தொழிற்படுவதைக் காட்டுகின்றது. சி.ஐ.ஏ.ஆர் இயக்கங்களின் கணிசமான பங்கைக் கொண்ட பயிற்சி விமானங்கள் உள்ளடங்கலாக, உள்நாட்டு விமான இயக்கங்கள் ஸ்திரமாக இருந்ததுடன், 2025 இல் 1% சிறிய அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளன. இருப்பினும், 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உள்நாட்டு பயணியர் இயக்கங்கள் 18% இனால் குறைவடைந்துள்ளன. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக சில உள்நாட்டு விமான நிறுவனங்கள் எதிர்கொண்ட இயக்க உரிமப் பிரச்சினைகளே (Operational licensing issues) காரணமாக அமைந்ததுடன், இதனால் அவற்றின் இயக்கங்களை மேற்கொள்ளும் திறன் வரையறுக்கப்பட்டது.

5. மட்டக்களப்பு சர்வதேச விமான நிலையம் (ம.ச.வி.நி)

2025 ஆம் ஆண்டில், பி.டி.ஐ.ஏ (BTIA) 716 உள்நாட்டு விமான இயக்கங்களுக்கும் மற்றும் 1,836 உள்நாட்டு பயணியர் இயக்கங்களுக்கும் வசதியளித்துள்ளது. இந்த இயக்கங்களின் மட்டம் 2024 ஆம் ஆண்டுடன் ஒத்துப்போகும் வகையில் (ஸ்திரமாக) காணப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் மீண்டும் திறக்கப்பட்டதன் பின்னர், பி.டி.ஐ.ஏ இல் சர்வதேச இயக்கங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

2025 ஆம் ஆண்டில் விமான நிலையங்கள், விமானங்கள் மற்றும் பயணிகளும் சரக்கு தொழிற்பாடுகளும்

விமான நிலையம்	மொத்தமாக விமானங்களின் தொழில்பாடுகள்	மொத்தமாக பயணிகளின் தொழில்பாடுகள்	மொத்தமாக விமானச் சரக்குகளின் தொழிற்பாடுகள் (மெ.தொன்)
ப.ச.வி.நி	66,875	10,015,233	190,255
ம.ரா.ச.வி.நி	733	140,614	25
யா.ச.வி.நி	1,392	54,074	-
மட்.ச.வி.நி	716	1,836	-
கொ.ச.வி.நி	25,913	2,634	-
மொத்தம்	**95,629**	**10,214,391**	**190,280**

8.6.3 நிதி செயலாற்றுகை

ரூபா.மில்

உருப்படி	2024	2025 கணக்காய்வு செய்யப்படாத
வருமானம்	43,897	50,148
தொழில்பாட்டு செலவினம்	(24,317)	(23,381)
தொழில்பாட்டு இலாபம் /நட்டம்	19,580	26,768
தேறிய நிதிசார் வருமானம் / செலவினம்	9,091	6,891
கடன் வட்டி	(2,516)	(2,249)
பரிமாற்றம் (இலாபம்/நட்டம்)	3,864	1,783
வரிக்கு முன்னரான இலாபம் /நட்டம்	28,671	33,658

8.6.4 எதிர்காலத் திட்டங்களும் வேலைத்திட்டங்களும்

1. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தற்போதைய பயணிகள் முனையக் கட்டிடத்தை (PTB) மறுசீரமைத்தலும் புனரமைத்தலும்.

பயணிகள் முனையக் கட்டிடத்தின் (PTB) தற்போதைய கொள்ளளவை திறம்பட பயன்படுத்துவதற்கும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அதிக கொள்ளளவு சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வுகாண்பதற்குமாக, 2026 ஆம் ஆண்டில் சில மறுசீரமைப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

i) புறப்படும் முனையத்தை விரிவாக்கல்: இது 2026 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டுள்ள ஒரு முக்கிய விரிவாக்கத் திட்டமாகும். திறமையான பயணிகள் செயலாக்கம் மற்றும் சுமுகமான செயல்பாட்டுத் திறனை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அனைத்து வசதிகளுடன், முப்பத்தாறு (36) விமானச் சேவை பதிவு கருமபீடங்களையும் (Check-in counters) ஆறு (06) தொலைதூர வாயில் ஓய்வறைகளையும் (Remote gate lounges) சேர்ப்பது இதில் அடங்கும். இதற்கான மதிப்பிடப்பட்ட முதலீடு 6 பில்லியன் ரூபாயாகும்.

ii) புறப்படும் மண்டபத்தை (Lobby) விரிவாக்கல்: பயணிகளின் நடமாட்ட ஓட்டத்தை மேம்படுத்துவதற்காக புறப்படும் மண்டபம் சுமார் 1,700 சதுர மீட்டரால் விரிவாக்கப்படும். இத்திட்டம் 2026 ஆம் ஆண்டில் 1.7 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட செலவில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் (பயணிகள் மற்றும் பார்வையாளர்களுக்கான) ஒரு பெரிய நுழைவு மண்டபம் மற்றும் இலங்கை மற்றும் ஏனைய வான்வழிப் பயணிகளுக்காக பிரத்யேகமாக ஒதுக்கப்பட்ட இரண்டு வழிகளைச் சேர்ப்பது உள்ளடக்கப்படுகிறது.

iii) வருகை குடிவரவுத் தடுத்துவைப்புப் பகுதியொன்றை (Arrival Immigration Holding Area) நிறுவுதல்: 700 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட செலவில் வருகை குடிவரவுத் தடுத்துவைப்புப் பகுதியொன்று நிறுவப்படும். மின்னுவியல் கடைகளை மேல் மாடிக்கு மாற்றுவதன் மூலம் வெற்றிடமாகும் நிலப்பரப்பை வர்த்தக

நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கான முந்தைய முன்மொழிவுகளைத் திருத்துவது இத்திட்டத்தில் அடங்கும். குடிவரவு கருமபீடங்களின் எண்ணிக்கை 25 இலிருந்து 36 ஆக உயர்த்தப்படுவதுடன், வரிசையின் நீளம் 12 மீட்டரிலிருந்து 16.6 மீட்டர் வரை விரிவாக்கப்படும். அத்துடன், தீர்வையற்ற (Duty-free) செயல்பாடுகளுக்கான வர்த்தக இடவசதி மேலும் மேம்படுத்தப்படும்.

iv) **வருகை மண்டபத்தை (Lobby) விரிவாக்கல்:** வருகை தரும் பயணிகளின் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும், மிகவும் வரவேற்கத்தக்க சூழலை உருவாக்குவதற்கும், வருகை மண்டபமானது 720 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட செலவில் மறுசீரமைக்கப்படும். இதில் பணப்பரிமாற்றம் மற்றும் வங்கி மேசைகளை மண்டபத்தின் மூலையில் அமைப்பதும், சுற்றுலா மற்றும் நாட்டுக்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக காளான் தூண்கள் வடிவிலான (Mushroom columns) கட்டமைப்பு அம்சங்களை அறிமுகப்படுத்துவதும் அடங்கும்.

v) **வருகை முனையத்தில் பயணப் பொதி கையாளுதல் திறனை மேம்படுத்தல்:** பயணப் பொதிப் உடைமைப் பட்டைகளின் (Baggage belts) கொள்ளளவை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை இனம் கண்டு, இத்திட்டத்தின் கீழ் வருகைப் பகுதியின் பயணப் பொதி சுழல்மேடை (Baggage carousel) இலக்கம் 01 ஐ நீடிப்பதும், வருகை முனையத்தின் சுழல்மேடை இலக்கம் 03 ஐ முழுமையாகப் புனரமைப்பதும் உள்ளடக்கப்பட்டுள்ளது. பயணப் பொதி கையாளுதலின் செயல்திறனை மேம்படுத்துதல், பயணிகளின் வசதியை அதிகரித்தல் மற்றும் அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை இந்த முயற்சிகளின் நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கான மதிப்பிடப்பட்ட முதலீடு 200 மில்லியன் ரூபாவாகும்.

2. **வான்வழிப் போக்குவரத்து உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள புதிய திட்டங்கள்.**

i) **E&ANE வலையமைப்பில் AASL மற்றும் IP இடமாற்றத்திற்கான MW நான்கு இணைப்புகள்:** மிகவும் நம்பகமான தகவல் தொடர்பு உள்கட்டமைப்பின் ஊடாக விமானப் பாதுகாப்பை அதிகரிப்பதையும், நவீன உயர் செயல்திறன் தொழில்நுட்பங்களை ஆதரிப்பதன் மூலம் வான்வெளியின் செயல்திறனை மேம்படுத்துவதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போதுள்ள நான்கு மரபுவழி மைக்ரோவேவ் இணைப்புகள் (RMA–PID, PID–KDP, PID–NYB மற்றும் NYB–MRIA) பாக்கெட் ரேடியோ (MW Packet Radio) இணைப்புகளுடன்

மீள்தாபித்தல், ஒவ்வொரு இடத்திலும் முக்கியமான IP ரௌட்டர்களை பொருத்துவது மற்றும் காலாவதியான மல்டிபிளெக்சர்களை (Multiplexers) மாற்றுவது ஆகியவை இதில் அடங்கும். இதன் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு 340 மில்லியன் ரூபா என்பதுடன், இது 2027 மார்ச் மாதத்திற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ii) **கந்தபொல உயர் அதிர்வெண் ஏற்பி (HF Receivers) அமைப்பை மேம்படுத்தல்:** இதன் மூலம் சமிக்ஞை (Signal) ஏற்பை மேம்படுத்துதல், நம்பகத்தன்மையை அதிகரித்தல் மற்றும் தற்போதைய தகவல் தொடர்புத் தரநிலைகளுக்கு இணங்குதல் ஆகியவை எதிர்பார்க்கப்படுகின்றன. விமான நிலையச் செயல்பாடுகளில் நீண்ட தூரத் தகவல் தொடர்புத் தேவைகளைத் திறம்பட கையாளுவதற்கு இந்த அமைப்பு உதவுகிறது. இதன் மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு 200 மில்லியன் ரூபாவாகும்.

iii) **ப.ச.வி. (BIA): Modes, 5 , நுழைவுக் கட்டுப்பாட்டு ரேடார் அமைப்பை (Approach Control Radar System) நவீனமயமாக்கல், வழங்குதல், நிறுவுதல் மற்றும் ஒப்படைத்தல்:** இத்திட்டத்தின் மூலம் வான்வழிப் போக்குவரத்தைக் கண்காணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமாக ஒரு புதிய ரேடார் அமைப்பு நிறுவப்படவுள்ளது. இன்றுவரை இதன் கொள்முதல் செயல்பாடுகளில் (Procurement process) சுமார் 30% நிறைவடைந்துள்ளதுடன், தொழில்நுட்ப விவரக்குறிப்பு (Technical specification) பணிகளும் முடிவடைந்துள்ளன. இத்திட்டம் 2028 சனவரி மாத இறுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் மதிப்பிடப்பட்ட செலவு 1 பில்லியன் ரூபாவாகும்.

iv) **ப.ச.வி. (BIA): புதிய TETRA தரைக்கட்டுப்பாட்டு சேவை தகவல் தொடர்பு அமைப்பு:** இத்திட்டத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட TETRA தகவல் தொடர்பு அமைப்பொன்று நிறுவப்படும். இதன் மூலம் தகவல் தொடர்பு வலையமைப்புகளின் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தல், சமிக்ஞை பரம்பல் எல்லையை (Coverage) விரிவாக்கல் மற்றும் குரல் தெளிவை அதிகரித்தல் ஆகியவற்றின் ஊடாக விரைவான முடிவுகளை எடுக்கும் திறனும், மிகவும் திறமையான ஒருங்கிணைப்பும் ஏற்படும். அதிக போக்குவரத்து உள்ள சூழ்நிலைகளிலோ அல்லது நெருக்கடி நிலைகளிலோ இந்த அமைப்பு நம்பகமானதாகவும், முன்னுரிமையின் அடிப்படையிலும் பதிலளிக்கக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இந்த அமைப்பு ப.ச.வி. தகவல் தொடர்பு உள்கட்டமைப்பு மற்றும் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) தரநிலைகளுக்கு இணங்குவதுடன், எதிர்கால செயல்பாட்டுத் தேவைகளுக்கும் பொருத்தமானதாக அமையும்.

இத்திட்டம் 2028 பிப்ரவரி மாதத்தில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் மதிப்பிடப்பட்ட செலவு 500 மில்லியன் ரூபாவாகும்.

3. தொழில்முயற்சி வளத் திட்டமிடல் (ERP) கருத்திட்டம்

தற்போது தொழில்முயற்சி வளத் திட்டமிடல் (ERP) கருத்திட்டம் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் நிறுவனத்திற்குள் உள்ள தரவு அமைப்புகளை ஒருங்கிணைக்கும் பணியானது நிறுவனத்தின் தொலைநோக்கு, மூலோபாய இலக்குகள் மற்றும் தேசிய விமானச் சேவை வழிகாட்டுதல்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டு கட்டங்களைக் கொண்டுள்ளது.

முதலாம் கட்டத்தில் நிதி மற்றும் விநியோகச் சங்கிலி முகாமை (Supply Chain Management) ஆகிய பிரிவுகள் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டன. முதலாம் கட்டம் 2021 யூலை 15 அன்று தொடங்கப்பட்டதுடன், 2023 ஆம் ஆண்டின் இறுதியில் இறுதி ஏற்புச் சான்றிதழ் (Final Acceptance Certificate) வழங்கப்பட்டது. இரண்டாம் கட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், உள்கட்டமைப்பு மாற்றங்களை மேற்கொள்வது 2026 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படுகிறது. மேகக்கணிமை சார்ந்த அமைப்பைக் (Cloud-based System) கொண்ட இந்த இரண்டாம் கட்டம் 2027 இன் இறுதியில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. திட்டத்தின் மொத்தச் செலவு 400 மில்லியன் ரூபா என்பதுடன், இதற்கான வருடாந்தம் கிடைக்கப்பெறும் கட்டணம் 200 மில்லியன் ரூபாய்களாகும்.

4. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சூரிய சக்தி மின் உற்பத்தி

விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் நிறுவனம் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டில் கவனம் செலுத்தியுள்ளதுடன், இதன் மூலம் மின் உற்பத்தியில் ஏற்படும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ள எதிர்பார்க்கிறது. நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDGs) அடைவதற்கான திட்டத்தின் ஒரு பகுதியாக, 2026 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு சர்வதேச விமான நிலையம் மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றில் 1300 கிலோவாட் (kW) கொள்ளளவு கொண்ட விநியோகிக்கப்பட்ட சூரிய சக்தி அமைப்பு (Distributed Solar Power System) செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படவுள்ளது. இதன் மதிப்பிடப்பட்ட செலவு 200 மில்லியன் ரூபாய்களாகும். மேலும், 600 கிலோவாட் (kW) கொள்ளளவைக் கொண்ட கூரை மீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி அமைப்பொன்றும் (Rooftop Solar Panel System) 2026 ஆம் ஆண்டிற்குள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இணைக்கப்படவுள்ளது.

5. விமான நிலைய செயல்பாட்டுக் கட்டிடம் (Airport Operations Building) கட்டுமானம் (பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்)

முன்மொழியப்பட்டுள்ள இந்த விமான நிலைய செயல்பாட்டுக் கட்டிடம் 09 மாடிகளைக் கொண்டதாக அமைவதோடு, இடைநிலை வாகன நிறுத்த வசதிகளுடன் கூடிய இரண்டு மாடிகளையும் உள்ளடக்கியிருக்கும். எஞ்சிய 07 மாடிகள் நிர்வாக நோக்கங்களுக்காக ஒதுக்கப்படும்.

முதலாம் கட்டத்தின் கீழ், வாகன நிறுத்த வசதிகளுடன் கூடிய முழுமையான கட்டமைப்பின் நான்கு மாடிகள் நிர்வாக நோக்கங்களுக்காகக் கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இக்கட்டம் 2029 மே மாதத்தில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், இதன் மொத்தச் செலவு 5.2 பில்லியன் ரூபாய்களாகும். இரண்டாம் கட்டத்தில் கட்டிடத்தின் எஞ்சிய பகுதிகளை முழுமையாக நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்கொள்ளப்பட்ட சவால்கள்

- **பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய செயல்பாடுகள்**

2025 ஆம் ஆண்டில், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் 10.2 மில்லியன் பயணிகளைக் கையாண்டுள்ளதுடன், 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வருடாந்த பயணிகளின் நடமாட்டம் 11.3 மில்லியனை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதுள்ள முனையம் ஆரம்பத்தில் 06 மில்லியன் பயணிகளுக்கு வசதியளிக்கும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டிருந்தது. எனினும், முனையம் 01 இல் மேற்கொள்ளப்பட்ட கொள்ளளவு அதிகரிப்பு மாற்றங்கள் நெரிசலைக் குறைக்க உதவியுள்ளன. எவ்வாறாயினும், முனையம் 02 இன் கட்டுமானப் பணிகள் 2029 ஆம் ஆண்டு வரை தாமதமடைந்துள்ளதுடன், 2027 ஆம் ஆண்டளவில் பயணிகளின் நடமாட்டம் 12.5 மில்லியனாக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் எதிர்கொள்ளும் முக்கிய சவால் என்னவெனில், முனையம் 2 செயல்பாட்டுக்கு வரும் வரை அதிகரித்து வரும் பயணிகளின் எண்ணிக்கையை முகாமை செய்வதாகும். அதன் கட்டுமானத் தாமதம் நெரிசல் அழுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

- **மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய செயல்பாடுகள்**

அமைச்சரவை அங்கீகாரத்திற்கு உட்பட்டு, விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் நிறுவனத்தினால் ஏற்கனவே முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விருப்பம் தெரிவிக்கும் தரப்பினருக்கு (EOI) வாய்ப்பளிக்கப்பட்டுள்ள போதிலும், பொருத்தமான முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வது நிறுவனத்திற்கு ஒரு பெரிய சவாலாக மாறியுள்ளது. மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் வனவிலங்குகள் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகள், அதே போல் செயல்பாடுகள் குறைவாக இருப்பதன் காரணமாக பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. 2025 ஆம் ஆண்டின் முற்பகுதியில், இது தொடர்பாக வனவிலங்கு திணைக்களம், சிவில்

பாதுகாப்பு திணைக்களம் மற்றும் தேசிய பொறியியல் மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERD) ஆகியவற்றுடன் கலந்துரையாடி ஒரு நிலையான தீர்வைப் பெற எதிர்பார்க்கப்பட்டது. வனவிலங்குகளை விரட்டுதல் மற்றும் விமான நிலையத்தைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வேலிகளை வலுப்படுத்துதல் போன்ற பணிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டன. வெளிச்சத்தை மேம்படுத்துதல் மற்றும் பற்றைக்காடுகளை அகற்றுவதன் மூலம் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டு, பார்வைத்தடை ஏற்படுவதும் தடுக்கப்பட்டது. வனவிலங்குகளின் நடமாட்டமும் அவற்றின் எதிர்வினைகளும் அவ்வப்போது மாறுபடுவதால், இது மிகவும் சவாலான ஒரு பணியாகவே உள்ளது.

- **யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தியானது, சாத்தியக்கூற்று ஆய்வு (Feasibility study) ஒன்றின் பின்னர் சர்வதேச விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதா இல்லையா என்பது குறித்த இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. எனினும், 2026 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் யாழ்ப்பாண விமான நிலைய மேம்பாட்டுப் பணிகளுக்காக 625 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.**

இதில் உள்கட்டமைப்பு மேம்பாடு, வீதிகள் அமைத்தல், பயணிகள் முனையத்தை நவீனமயமாக்குதல் மற்றும் விமானப் பராமரிப்பு நிலைய (Hangar) வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும். சாத்தியக்கூற்று ஆய்வு அறிக்கைகள் கிடைக்கப் பெறாமையினால் விமான நிலையம் குறித்த முடிவுகளை எடுப்பது சவாலாக மாறியுள்ளது. சாத்தியக்கூற்று ஆய்வு இல்லாதது விமான நிலைய விரிவாக்கம் குறித்த முடிவுகளை எடுப்பதில் சவால்களை ஏற்படுத்துகிறது.

- **உள்நாட்டு விமானச் சேவைகள்**

பல கலந்துரையாடல்களின் மூலம் உள்நாட்டு விமானச் சேவைகளில் உள்ள பிரச்சினைகள் மற்றும் அதற்கான நீண்டகால காரணங்கள் ஆராயப்பட்டன. இதற்கான முன்மொழிவுகளாக, உள்நாட்டு விமானச் சேவைகளுக்கு சர்வதேச வான்வழிப் போக்குவரத்து விதிமுறைகளைத் தளர்த்துதல், எரிபொருள் மானியம் வழங்குதல் மற்றும் தேவையான குறைந்தபட்ச ஊழியர் எண்ணிக்கையைப் பேணுதல் ஆகியவை குறிப்பிடப்படலாம். இந்த முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவது சவாலாக உள்ளது. மேலும், கீழே 2.4.5 இல் குறிப்பிடப்பட்டுள்ள சவால்களுக்கு மத்தியில், உள்நாட்டு விமானச் சேவைகளை விரிவாக்குவதில் எரிபொருள் செலவு அதிகமாக இருப்பது ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

8.6.5 மனித வளச் செயல்திறன்

22 உள்நாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்காக 7342 ஊழியர்களும், 74 வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்காக 198 ஊழியர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நிறுவனத்தினால நடாத்தப்படும் பயிற்சித் திட்டங்கள் ஊழியர்களின் அர்ப்பணிப்பை அதிகரிக்கவும், தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தவும் மற்றும் விசேட பயிற்சிகள் மூலம் சேவைத் திறனை அதிகரிப்பதன்

வழியாக நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்தவும் நேரடியாக உதவுகின்றன. இலங்கை விமான நிலையம் மற்றும் விமானச் சேவைகள் கல்லூரியினால் வழங்கப்படும் விசேட பயிற்சியானது ICAO தரநிலைகளுக்குப் பொருத்தமான முக்கிய தகைமைகளை வளர்ப்பதுடன், இறுதியில் செயல்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் செயல்திறனை வலுப்படுத்துகிறது. மேலும், இது ஏனைய வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பயிற்சித் தேவைகளையும் பூர்த்தி செய்வதுடன், அதன் மூலம் ஊழியர்கள் தங்களின் இறுதி நிறுவன இலக்குகளை அடைந்துகொள்ள வழிவகை செய்கிறது.

இணைப்பு I



துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு
கௌரவ அமைச்சர்
கௌரவ பிரதி அமைச்சர் (துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் பிரிவு)
செயலாளர்
மே. செயலாளர் (நிர் மற்றும் நிதி) இ.நி.சேவை விசேட தரம்
மே. செயலாளர் (அபிவிருத்தி மற் நிதி) இ.நி.சேவை விசேட தரம்
பிரதான நிதி அலுவலர் இ.க.சே விசேட தரம்
பணி. நாயகம் இ.பொ.சேவை விசேட தரம்
பணி.நாயகம் இ.தி.சேவை விசேட தரம்
பிரதான உள்.கணக்காய் வாளர்
சி.உ.செ (இ.நி.சே.1)
பணிப்பாளர் (துறைமுகம்) (இ.நி.சே.1)
பணிப்பாளர் (விமான சேவைகள்) (இ.நி.சே.1)
பி.க (இ.க.சே.1)
பணிப்பாளர் (பெறுகை)) (இ.தி.சே.1)
பணிப்பாளர் (பொறியியலாளர்) (இ.பொ.சே.1).
பணிப்பாளர் (திட்டமிடல்) (இ.தி.சே.1)
பணிப்பாளர் (மேற்பார்வை மற்றும் மதிப்பீடு) (இ.தி.சே.1)
உள்ளக கணக்காய்வாளர் இ.க.சே. III/II
உள்ளக கணக்காய்வாளர் இ.க.சே.. III/II
சட்ட அலுவலர்
உதவி செயலாளர் இ.நி.சே. II/III
பி. /உதவி.பணி. இ.நி.சே. II/III
பி. /உதவி.பணி. இ.நி.சே. II/III
கணக்காளர் இ.க.சே. II/III
பி. /உதவி.பணி. இ.நி.சே. II/III
பி. /உதவி.பணி இ.பொ.சே. III/II)
கணக்காளர் இ.க.சே. II/III
பி. /உதவி.பணி. இயந்திரம்) (இ.பொ.சே. III/II
பி. /உதவி.பணி. சிவில்) (இ.பொ.சே. III/II
பி. /உதவி.பணி. (திட்டமிடல்) (இ.தி.சே. II/III
பி. /உதவி.பணி. (திட்டமிடல்) (இ.தி.சே. II/III
நிருவாக உத்தியோகத்தர்
ஒருங்கிணைப்பு
மொழிபெயர்பாளர் (சிங்களம்-தமிழ்)
தக.தொ. தொ.உத் (தொழில் நுட்ப சேவை)
அபி.உத்
அபி.உத்
த.மொ.தொ உதவியாளர்
அபி.உத்
அபி.உத்
அபி.உத்
தொ.உத்.(இயந்திரம)
அபி.உத்
முகாமைத்துவ சேவை
முகாமைத்துவ சேவை
முகாமைத்துவ சேவை
முகாமைத்துவ சேவை
முகாமைத்துவ சேவை
முகாமைத்துவ சேவை
அ.ப
அ.ப
அ.ப
அ.ப
அ.ப
அ.ப
ஒ.புகைப்படக்
வீடியோ கெமரா
சாரதி
புகை.கலை உதவி

இணைப்பு II


வணிக கப்பற் செயலகம்
வணிக கப்பற் பணிப்பாளர் நாயகம்
நிருவாகப் பிரிவு
கணக்குப் பிரிவு
கப்பற் பிரிவு
பரீட்சை மற்றும் பயிற்சிப் பிரிவு
பொறியியல் பிரிவு
கப்பற் மற்றும் ஆய்வுப் பிரிவு
சட்டப் பிரிவு
அனுமதிப் பத்திர மற்றும் அபிவிருத்திப் பிரிவு
பணிப்பாளர் (நிரு)
பிரதான கணக்காளர்
பணிப்பாளர் (கப்பற்)
பணிப்பாளர் (பயிற்சி)
பரீட்சை .பரி. (கப்பற் தளம்)
பரீட்சை. பரி (பொறியியல்)
பணிப்பாளர் (பொறியியல)
பணிப்பாளர் (கப்பற் ஆய்வு)
துறைமுகங்கள் மற்றும் அரச நிர்வாகம் கப்பற் மேல் தளம்)
துறைமுகங்கள் மற்றும் அரச.நிருவாகம் (பொறியியல
பணிப்பாளர் (கொ. மற்றும் சட்டம
பணிப்பாளர் (அனுமதிப் பத்திரம்)
உதவி பணிப்பாளர
உதவி பணிப்பாளர
கணக்காளர
உதவி பணிப்பாளர
உதவிப் பணிப்பாளர் (பயிற்சி மற்றும் பரீட்சை)
உதவி பணிப்பாளர்
கப்பற் பதிவு மற்றும் வர்த்தக அபிவிருத்தி அலுவலர்
கப்பற் ஆய்வு)
சட்ட அலுவலர்
உதவி பணிப்பாளர
உதவிபணிப்பாளர
உள்ளக கணக்காய்வாளர்
நிரு. உத்
த.தொ. உ
அரசாங்கத்தின் உதவி கப்பற் ஆய்வாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
கப்பற் போக்குவரத்து அலுவலர்/ உதவி கப்பற் போக்குவரத்து அலுவலர்
முகாமைத்துவ சேவை அலுவலர்
அ.ப. / சாரதி

ප්‍රවාහන, මහාමාර්ග, වරාය සහ සිවිල් ගුවන් සේවා අමාත්‍යාංශය

போக்குவரத்துஇ நெடுஞ்சாலைகள்இ துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

MINISTRY OF TRANSPORT, HIGHWAYS, PORTS AND CIVIL AVIATION